ாங்கையர்
மலர்



MANGAYAR MALAR
ஆகஸ்டு '81 ரூ.1-50


"ஸ்..ஸ்..பாரும்மா,
ரொம்ப அரிக்குது..எரியிதும்மா."
உபயோகியுங்கள்
நைஸில்.
உடனடி நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
2 திறுசு
டப்பாக்களில்
கிடைக்கிறது
'நீலம்' மற்றும்
'சந்தனம்'.
nycil
வாங்குவீர்
நைஸில்
விரட்டுவீர்
வியர்க்குருவை.
மருந்துப் பொருட்கள்
அடங்கிய —நைஸில்:
1. அதிக வியர்வையைத்
தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம்
ஏற்படுத்தும்
கிருமிகளை
அழிக்கிறது.
4. சருமத்திற்கு
இதமளிக்கிறது.
CASGL N-4-182 TAM

மங்கையர் மலர்

ஆகஸ்டு 1981

சந்தா விவரம்

தனிப்பிரதி ரூ. 1-50

ஆண்டுச் சந்தா ரூ. 18/-

ஆறு மாத சந்தா ரூ. 9/-

இது ஆடி மாதம்!

திருமணம் முடிந்து இந்த மாதம் புது மணத் தம்பதிகள் பிரிந்து இருப்பீர்கள். வீட்டில் பொழுது போகாமல், நடந்த கல்யாணத்தின் சுவையான நிகழ்ச்சிகளை நினைத்துக் கொண்டிருப்பீர்கள் இல்லையா?

உங்கள் கல்யாணத்தில் நடந்த சுவையான நிகழ்ச்சியையோ, மாமியார் வீட்டிற்குப் போனவுடன் ஏற்பட்ட சுவையான முதல் அனுபவத்தையோ எழுதுங்களேன், நாங்களும் ரசிக்கிறோம்.



உங்கள் மனையில் மங்கலம் பொங்கட்டும்!

அட்டையில் வண்ணப்படம்:
ஹரலிங்கம்

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032 (Phone: 431543) Editor: K. Kasturi Rangan

குடும்பத்தில் ஒவ்வொருவரும் தங்களுடைய பங்கு என்ன என்பதைப் புரிந்து கொண்டால் அந்தக் குடும்பம் ஊர் போற்றும் குடும்பமாகிறது. அப்படி இல்லையென்றால் ஊர் சிரிக்கப் பேர் வாங்குகிறது. இதோ ஒன்று -

டாக்டர் சந்திராவின் கிளினிக். ஒரு 'நர்ஸ்' வாயில் விரலை வைத்து ''சைலன்ஸ் ப்ளீஸ்' என்று சொல்லும் ஒரே மாதிரியான டாக்டரின் அறை. டாக்டரின் கைராசியை எடுத்துக் காட்ட போரடித்துப் போய் காத்திருக்கும் கூட்டம். குழந்தைகள் வைத்தியத்தில் சிறப்புப் பெற்றதால் குறையாத பிராக்டிஸ். போதாக் குறைக்குக் கணவரும் டாக்டர். அவர்களின் இல்வாழ்க்கையின் பரிசாக ஒரு பெண் குழந்தை. டாக்டர் சந்திரா இந்தச் சூழ்நிலையில் எவ்வளவோ சீரும் சிறப்புமாக வளர்ந்து இருக்கலாம். — மாமியாரின் குறுக்கீடு மட்டும் இல்லாமல் இருந்தால்.

டாக்டர் சந்திரா அலுத்துச் சலித்து வீட்டுக்குப் போனால் மாமியாரின் ஏசல் — எவ்வளவு சம்பாதித்தாலும் அவ்வளவையும் மாமியாரிடம் கொடுத்துவிட்டு ஒவ்வொரு செலவுக்கும் காசு கேட்டு வாங்க வேண்டிய நிலை — சந்திராவின் வயதையொத்த சக டாக்டர்கள் சுதந்திரமாகச் செலவு செய்யும் பொழுது தான் மட்டும் மாமியாரிடம் கையேந்தி நிற்பதைக் கண்டும் காணாமல் இருக்கும் கணவன் — எல்லாமுமாகச் சேர்ந்து எரிச்சலை ஊட்டியது. ஆத்திரம் வந்தது. சுய பச்சாதாப உணர்ச்சியை ஏற்படுத்தியது.

டாக்டர் தம்பதிகளாகஇருந்ததால் தொழிலில் இருந்த நெருக்கம், கணவன் — மனைவி உறவில் இல்லை. சிறு வயதிலிருந்தே அம்மாவிடம் அதிகம் நெருக்கமும், பாசமும் இருந்த காரணத்தினால் எதையும் தட்டிக் கேட்க முடியாத நிலையில் இருந்தார் டாக்டர் ஜெயதேவ். ஒரே மகனாகப் போய்விட்ட காரணத்தினால் இவர்களுடன் தங்க வேண்டிய நிலை மாமியாருக்கு.

வீட்டுக்குப் புறப்பட்ட டாக்டர் சந்திராவுக்கு வீடு நரகலோகமாகப் பட்டது. இதிலிருந்து தப்பிக்க வழி? யோசனை பண்ணிக் கொண்டிருந்த டாக்டரின் கண்களில் 'பெதடின்' மருந்து · விஸ்வரூபம் எடுத்து 'யான் இருக்கப் பயமேன்?' என்றது. தயங்கித் தயங்கி கையில் எடுத்த சந்திரா மெதுவாகத் தன் தொடையில் ஊசியை ஏற்றினாள். அன்று வீட்டுக்குப் போனபொழுது மாமியாரின் ஏசல் — அம்மாவுக்குப் பயந்து பேசும் கணவன் — எதுவும் தன்னைப் பாதிக்கவில்லை என்பது சந்திராவுக்குப் புரிந்தது.

மன நோயாளிகள் இவர்களா? நாமா?



'முன்பு அலுத்துச் சலித்து வீட்டுக்குப் போனால் உடலுக்கோ, உள்ளத்துக்கோ கிடைக்காத அமைதியை பெதடின் தருவதைக் கண்டார். வெறுப்படைந்த மனம் தற்காலிகமாக நிம்மதியைத் தேடி ஓடுவதில் வியப்பு என்ன? வீடே பிரச்னையாகிவிட்ட பின்னர் இது விவேகமான வழி எனத் தப்புக் கணக்குப் போட்டார். இவரது தப்புக் கணக்கை அதிகப்படுத்துவது போல் மருந்துக் கடைகளில் யாரும் சந்தேகிக்காமல் தேவையானபொழுது எல்லாம் தங்கு தடையின்றி பெதடின் மருந்தைக் கொடுத்தார்கள்.

ஆரம்பத்தில் போட்டுக் கொண்ட அளவை அதிகரித்துக் கொண்டே போனார் சந்திரா. முன்பு வீட்டுக்குப் போகு முன்னர் போடத் தொடங்கியவர் பெதடினுக்கு அடிமையாகி கிளினிக் தொடங்கு முன்னரே வந்து போட்டுக்கொள்வார்.

விளைவு? நோயாளிகளுக்கு ஊசி போடும் பொழுது கைகள் நடுங்கி ஊசியை நழுவ விடுவார். கண்கள் சொருகிய விதமும், நிதானமில்லாத நிலையும் நோயாளிகளை விரட்டியது.

ஒரு நாள் யதேச்சையாக வந்த கணவனுக்கு உண்மை புரிந்தது. உண்மை புரிந்த பொழுது சந்திரா அஸ்தமனத்தில் இருந்தார். பெதடின் இல்லாமல் ஒரு விநாடி கூட இருக்க முடியாத நிலைமைக்கு வந்துவிட்டார். பெதடின் ஊசிக்காகச் சொந்த வீட்டில் திருடவும், பொய் பேசவும் கற்றுக் கொண்டார் சந்திரா.

கைக்கு அகப்பட்ட சாமான்களை விற்று பெதடின் வாங்கப் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டார். மாமியார் பாத்திரங்களையும், பொருட்களையும் பத்திரப்படுத்தத் தொடங்கியபொழுது தன் பட்டுப் புடவைகளையும், விலை உயர்ந்த புடவைகளையும் விற்று வரும் காசில் பெத்தடின் வாங்கினார். ரோட்டில் தன் மேலாடை நழுவுவது கூடத் தெரியாமல் போதையின் மயக்கத்திலேயே மீண்டும் பெதடின் வாங்க ஓடுவார். பெதடின் வாங்கிக்கொண்டு அதை ப்ளவுஸுக்குள் மறைப்பார். உள் பாவாடையில் வைத்து தைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்து மற்றவர்களின் கண்களில் மண்ணைத் தூவுவார்.

வெளியே போகாமல் இருக்கவும், துணிகளை விற்காமல்இருக்கவும்கிழிந்த துணிகளைச் சந்திராவுக்குக் கொடுத்தார்கள். அப்படியும் ஒரு நிலையில் தெரிந்தவர்களிடம் போய்க் காசை வாங்கிக் கொண்டு பெதடின் வாங்கிவிடுவார். வெறுப்படைந்த கணவர் அவரை ஒரு ரூமில் போட்டுப் பூட்டத் தொடங்கினார். மனைவியின் பிராக்டீஸும் போய் தானே சம்பாதிக்க வேண்டிய பொறுப்பு — மனைவியின் நிலை —

டாக்டர் ஜெயதேவ் சந்திராவை மன நோயாளிகள் விடுதியில் சேர்த்தார்.

சம்பாதிக்கும் மருமகளைத் திட்டிக்கொண்டிருந்த மாமியாருக்கு பெத்டின் அடிக்டைக் கண்டு வெறுப்படைந்தார். இதுதான் சாக்கு என்று காரணம் காட்டி மகனை விவாகரத்துக்குத் தூண்டினார். மனைவியைப் பிரிய முடியாத கணவர் சந்திராவை மன நோயாளி விடுதிக்கு அனுப்பிவிட்டு சந்திரா திருந்தி வரும் நாளுக்காகக் காத்து இருக்கத் தொடங்கினார்.


மன நோயாளி விடுதியிலும் சந்திரா தூக்க மருந்துகளை யாருக்கும் தெரியாமல் திருடுவதில் குறியாக இருந்தார். தற்கொலை முயற்சிக்கும் துணிந்தார்.

''மாமியார் ஓரளவு சந்திராவைப் புரிந்து கொண்டிருந்தால் இவ்வளவு பிரச்னைகள் ஏற்பட வழியில்லை. கணவரும் சந்திராவின் ஏக்கங்களைத் தெரிந்து வைத்திருக்கவில்லை. பெத்டின் தனக்கு நிம்மதியைத் தரும் என்று தானே இக் கொடிய பழக்கத்துக்கு அடிமையாகி, தன் வாழ்வை, தொழிலை பாழாக்கிக் கொண்டார். குடும்பத்தில் ஒவ்வொருவரும் தனக்குக் கொடுக்கப்பட்ட ரோலில் சரியாக நடந்து கொள்ளா விட்டாலும் பிரச்னைகள் வரும். ஓவராகப் பண்ணினாலும் பிரச்னைதான். குடும்பத்தில் அனைவரும் இதனைத் தெரிந்து புரிந்து கொண்டால் சந்திராமாதிரி வாழ்வின் எல்லைக்குப் போக மாட்டார்கள்'' என்றார் டாக்டர்.

வெளியே வந்தபொழுது டாக்டர் சந்திரா நின்றிருந்தார். மெதுவாக என் கைகளை அழுத்தினார். ''இப்ப என்னைப் பத்தி முழுதும் தெரியும் அல்லவா? பெத்டின் பேய்ப் பிடியிலிருந்து என்னை விலக்கிக் கொள்ள முயற்சி செய்கிறேன். என் குழந்தைக்காக, என் கணவருக்காக நான் எனக்குள் போராடுகிறேன். சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடுவேன்'' என்றார்.

தெரியுமா?

மின்னல் ஏற்படும்போது 100 மில்லியன் வோல்ட்டு மின்சாரம் வெளிப்படுகிறது. மின்னலின் வெப்ப சக்தி சூரியனின் மேற்பரப்பு (Surface temperature) வெப்பத்தைப் போல் ஐந்துமடங்கு; கிட்டத்தட்ட 54,000°F. – சுவாமி



ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு தனித்தன்மை, தனித்திறமை இருக்கும். ஒருவரை மற்றவருடன் ஒப்பிட்டுப் பேசுவது தவறு. அதுவும் குழந்தைகளிடம் பேசுவது பெரும் தவறு. அப்படிப் பேசியதன் விளைவு-

வீட்டில் :

"ஏய் கீதா, அங்கே என்ன வேடிக்கை? இன்னும் ரெடியாகவில்லே? டான்ஸ் மாஸ்டர் வந்திடுவாரு. உன்னைவிட சின்னவதான்லதா, போய் அவளைப் பாரு" என்று வெறுப்பை உமிழ்ந்தாள் கல்யாணி. அம்மாவின் சொற்கள் எரிச்சலை ஊட்டியது கீதாவுக்கு.

"அம்மா கல்யாணி, இன்னிக்கு லதா பேச்சுப் போட்டியில் பரிசு வாங்கி இருக்கா. குழந்தைக்கு திருஷ்டி சுற்றிப் போடு" என்றபடி கல்யாணியின் மாமனார் அங்கே வந்தார். ஆடாமல், அசையாமல் உட்கார்ந்திருக்கும் தன் மூத்த பேத்தியைப் பார்த்தார்.

"கீதா, என்ன இது? இப்படி அசமஞ்சமா இருக்கே. துறுதுறுன்னு இருக்க வேண்டாம்? லதாவும் இருக்காளே, உன்னை மாதிரியா?" என்று சொல்லியபடியே முன் கட்டுக்கு விரைந்தார்.

கீதாவுக்கு வந்த கோபத்துக்கு அனைவரையுமே அடிக்கலாம் போல இருந்தது. கல்யாணி தம்பதியருக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்தவள் கீதா. இளையவள் லதா. லதாவின் மீது கல்யாணிக்கும், மற்றவர்களுக்கும் பாசம் அதிகம். அவர்கள் பாசம் அதிகரிக்க வைப்பது போல எல்லோரிடமும் நடந்து கொண்டாள் லதா. காலையில் எழுந்தால் சங்கீத கிளாஸ். அதை முடித்த பின்னர் ஸ்கூலுக்குப் போக வேண்டும். மாலையில் டான்ஸ் கிளாஸ். அதைத் தவிர ஞாயிற்றுக் கிழமைகளில் பாட்டு கிளாஸ். அதோடு பள்ளியில் நடக்கும் போட்டிகளில் வேறு கலந்து கொள்ள வேண்டும். கீதாவுக்குப் பெயிண்டிங் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை. விளையாட நேரமில்லாத மனக் குறை. லதா ஆர்வமாகப் பெற்றோர் சொன்னதை யெல்லாம் செய்தாள். சமர்த்து எனப் பாராட்டப் பெற்றாள். ஆரம்பத்தில் பெற்றோரின் விருப்பங்கள் அனைத்துக்கும் ஈடு கொடுத்து வந்த கீதாவுக்கு வெறுப்புத் தட்டியது.

மற்றவர்கள் எல்லாம் தங்கள் இஷ்டத்துக்கு விளையாடவும், வெளியே போகவும் இருந்ததைக் கண்டு வீடு ஒரு சிறைச்சாலையாகக் கருதினாள்.

ஆர்வம் குறைந்துபோகத் தொடங்கியது. அந்தச் சமயத்தில் தங்கை லதா வெகு சீக்கிரமாக முன்னேறினாள். படிப்பிலும், பாட்டிலும், நாட்டியத்திலும் சிரத்தை காட்டினாள். லதாவின் திறமை கீதாவின் ஆர்வமின்மையுடன் இணைத்துப் பேசப்பட்டது. முதலில் வீட்டில் மட்டும்...

பள்ளியில் :

"கீதா, வர வர உனக்கு மார்க் குறையுது. இதே ரேட்டிலே போனால் பெயிலாகி உன் தங்கை லதாவின் கிளாஸ்மேட் ஆகிவிடுவாய்"

டீச்சரின் வாயில் வந்த வார்த்தைகள் கீதாவின் மீது அனுதாபப் பார்வையைச் செலுத்த வைத்தது.

கீதாவுக்கு வந்த கோபத்தில் மானசீகமாக அந்த டீச்சரை அடித்து ஆனந்தப்பட்டாள்.

"ஏண்டி கீதா, போற போக்கைப் பார்த்தால் லதாவின் அக்கா என்றுலே ஸ்கூலில் பிரபலமாகிவிடுவாய். கீதாவின் தங்கை லதா என்றுலே வாயைப் பிளக்கும் அளவுக்கு அவ திறமையா இருக்கா. உனக்கு என்ன ஆச்சு? வர வர உனக்குப் படிப்பில் இன்ட்ரஸ்ட் இல்லே. அதோடு 'டல்'லாக இருக்கே, என்ன விஷயம்?" என்ற உயிர்த் தோழியைப் பார்த்து...

"போதும் நிறுத்து. லதா, லதா, லதா... லதா மாதிரி நீ இல்லே! இதேதானா..? இனிமே என்னோட பேசாதே. லதாவாம்... லதா. பேய், பிசாசு. என்னோட முதல் எதிரி அவதான். இரண்டாவது நீ..."

குழந்தைகளுக்குள் பாரபட்சமா?



என்று பல்லைக் கடித்தபடி, முகம் விகாரமாகப் பேசிவிட்டுப் போகும் கீதாவைக் கண்டு திகைத்துப் போனாள் தோழி.

உறவினர் வீட்டில்....

● ''ஏன் கல்யாணி உனக்கு இப்படியா ஆகணும்? மூத்த பொண்ணை மக்காப் படைச்சுட்டான். சின்னவ லதாவுக்கு இருக்கிற திறமையில் பாதி இருந்தாப் போறுமே. இந்த வருஷம் கீதா பெயில் வேறே. லதாவைப் பார்த்துத் தெரிஞ்சுக்க வேண்டாமோ? ஸ்கூலில் கெட்ட பெயர், அதோடு எல்லோர் கிட்டேயும் சண்டை போடறாளாமே. ஏன் இப்படி?''

என்று கேட்ட உறவினருக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்தாள் கீதாவின் அம்மா. அவளுடைய ஆத்திரம் முழுவதும் கீதாவின் மீது திரும்பியது. எவ்வளவு செலவு பண்ணிப் படிக்க வைத்தும் இப்படி பண்ணுகிறாளே. அதோடு வீட்டில், பள்ளியில், உறவினர் வீட்டில் குறைவு சொல்லிறாற்போல நடந்துகொள்ளும்படி என்ன ஆயிற்று இவளுக்கு? வர வர சிடுமூஞ்சித்தனமாக, எந்தச் சாமானையும் தூக்கி எறிந்து கொண்டு, பெயிலும் ஆகி.... விருந்துக்கு வந்த இடத்தில் இப்படியா கேட்பார்கள்?

வீட்டுக்கு வந்த கல்யாணிக்குக் கீதாவைப் பார்த்ததும் எரிச்சல் வந்தது. கோபத்தில் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வந்த அம்மாவின் மன நிலை அறியாமல்,

''அம்மா, நான் விளையாடப் போறேன்'' என்று சொன்னாள். அவ்வளவுதான். ஆத்திரம் முழுதும் படீரென வெடிக்க,

''ஆமா, வயசு மட்டும் கழுதைக்கு ஆன மாதிரி ஆச்சு. பொறுப்புக் கிடையாது. அந்த லதா எப்படி...'' என்று முடிப்பதற்குள்,


கீதா பாய்ந்து சென்று, உட்கார்ந்துகொண்டிருந்த லதாவின் முகத்தில் கீறி, கிள்ளியதைக் கண்டு அலறினாள். பெற்றோர்கள் இருவரையும் பிரித்து, பின்பு கீதாவைத் திட்டினார்கள். ஏற்கனவே மனம் நொந்துபோன கீதா தனக்குள்ளாகவே பேசிக் கொள்ளத் தொடங்கினாள். தனக்குள் ஒரு உலகை சிருஷ்டித்துக் கொண்டு அதில் உலாவத் தொடங்கினாள். பள்ளிப் படிப்பு நிறுத்தப்பட்டது. மன நோயாளி விடுதிக்கு அனுப்பி வைத்தார்கள்.

''பெரும்பாலான பெற்றோர்கள் அறிந்தோ அறியாமலோ செய்யும் தப்பு இது. தங்கையை ஒப்பிட்டுப் பேசுவது தவறு.

ஒவ்வொருவரிடம் தனித் தன்மை, தனித் திறமை இருக்கும். அதிலும் குறிப்பாகத் தங்கையை உயர்த்திப் பேசியும், அக்காவை மட்டம் தட்டுவதும் மிகவும் தவறு. இதில் நாங்கள் பெற்றோர்கள், டீச்சர், நெருங்கிய உறவினர்கள் எல்லோரையும் உட்கார வைத்துப் பேசினோம். இப்பொழுது கீதாவுக்குத் தெளிவு பிறந்து உள்ளது. அதோடு நாம் நம்முடைய ஆசைகளை, எதிர்பார்ப்புக்களை குழந்தைகள் மீது புகுத்துவது தவறு. உதாரணமாக நான் டாக்டராக வர விரும்புகிறேன். அது முடியவில்லை யென்றால் என் குழந்தையை டாக்டராக்கிவிட்டுத்தான் மறு வேலை என எண்ணுகிறேன்' என்றெல்லாம் நாமே முடிவெடுப்பதும், அவர்களைக் கட்டாயப் படுத்துவதும் தவறு. கீதாவின் விஷயத்தில் அவளுடைய ரசனைகளை வளர்த்துச் சொல்லி அவர்களுடைய பெற்றோர்களுக்குச் சொல்லி அனுப்பினேன்'' என்றார் டாக்டர்.

-பூங்கோதை

துளசியின் மகிமை



எங்கள் வீட்டுக்கு ஒரு பெரியவர் வந்திருந்தார். முற்றத்தில் உள்ள துளசி மாடத்தைப் பார்த்துவிட்டு அவர் கூறியதாவது: அவர் வக்கீலாகப் பணி புரிந்தவர். ஒரு சமயம் ஓடும் ரயிலில் ஒருவன் கொலை செய்யப்பட்டு, அவன் உடல் வெளியே இழுத்துத் தள்ளப்பட்டிருந்ததாம். அநேக தினங்கள் கழித்து அவன் உடலைப் புதர்களின் நடுவே கண்டு பிடித்தார்களாம். ஆனால், கொலை செய்யப்பட்ட சமயத்தை நிர்ணயிப்பது கஷ்டமாக இருந்ததாம். காரணம், உடல் விழுந்திருந்த இடத்தைச் சுற்றியிருந்த புதரில் துளசிச் செடிகள் மண்டிக் கிடந்ததாம். அக்காற்றுப் பட்டு உடல் அழுகாமலேயே இருந்ததாம்.

–சியாமளா ராகவன்

திருமண மலர்

எஸ். எஸ். எல். ஸி. படித்து தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ. 500 வருமானம் உள்ள வாணிய செட்டியார் வகுப்பைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞருக்கு அதே வகுப்பைச் சேர்ந்த படிப்பும், அழகும், சிவந்த நிறமும், ஓரளவு வசதியும் (வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தால் மிக நன்று) உள்ள பெண் தேவை. வரதட்சிணை தேவையில்லை. புகைப்படம் அனுப்புதல் நன்று.

பெட்டி எண் 54

பார்க்கவ குலம் (நத்தமன் உடையார்) 18 வயது. பள்ளி இறுதிப் படிப்பு. சிவந்த நிறம். அழகும் ஓரளவு வசதியும் உள்ள மைதிலி என்ற மணப் பெண்ணுக்கு அதே சாதியில் நல்ல குணம், படிப்பு, வேலையும் அளவான வசதியும் கொண்ட மணமகன் தேவை. வயது தகுதி விவரத்துடன் புகைப்படம் அனுப்புதல் நன்று.

பெட்டி எண் 55

பெங்களூரில் குடியிருக்கும் வன்னிய கவுண்டர், 29 வயது, அசிஸ்டண்ட் கமிஷனர் உத்தியோகம் (டெபுடி கலெக்டர்) நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வாலிபருக்கு படித்த, மற்றும் வசதியுள்ள இடத்திலிருந்து மணமகள் தேவை.

பெட்டி எண் 56

28 வயது பட்டதாரிப் பெண்ணுக்கு மணமகன் தேவை. பெண் உயரம் 142 செ.மீ. திருநெல்வேலி சைவப் பிள்ளை. வேலை பார்க்கவில்லை; குடும்பப் பாங்குநிறைந்தவள். குலம் பிரிவுகட்குத் தடை இல்லை.

பெட்டி எண் 57

23 வயதுள்ள சைவ வேளாள சமூகத்தைச் சேர்ந்தவரும், வங்கியில் பணிபுரியும் ஒரு வேளாண்மைப் பட்டதாரிக்கு அதே சமூகத்தில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 21 வயதுக்குள் அழகும் பட்டதாரியுமான மணமகள் தேவை. பையனுடைய நட்சத்திரம் மூலம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பெட்டி எண் 58

வேலை பார்க்காத, 23 வயது, 5' 2—'', கண்ணாடி அணிந்துள்ள பி. காம், தகுதி— குண — அழகுள்ள, வடமாள் — அனுஷமும் ஏழில் மகரச் செவ்வாயுமுடைய கௌசிக கோத்திரத்து, பம்பாய் அய்யர் தமிழ்ப் பெண்ணுக்குத் தகுந்த ஸ்திரமான யோக்கியதாம்சங்களுடன் வேலையும் கொண்ட நல் மணமகனின் பெற்றோர்களிடமிருந்து ஜாதக நகல் விவரங்களுடன் அனுப்புமாறு வேண்டப்படுகிறது.

பெட்டி எண் 59

36 வயதுள்ள வாலிபருக்கு காசப கோத்ரம் அல்லாத கன்னடம் பேசும் ஸ்மார்த்த ஹேமலதா என்ற பெயர் உடைய பெண் தேவை. வயது 28–30க்குள்போதும். பையன் நல்ல படிப்புப் படித்தவன். 4 இலக்கம் சம்பளம் வாங்குபவன். பெண் நல்ல குடும்பத்தில் இருக்கும் பெண் தேவை.

பெட்டி எண் 60

தமிழக அரசுத் துறையில் உதவியாளராக மாதம் ரூ. 680 சம்பளத்தில் பணிபுரியும் வடமாள், ரோஹிணி, ஹரித கோத்ரம் உள்ள ஆரோக்கியமான பிராமண பிரமச்சாரி பையனுக்கு (வயது 40) சென்னையில் வங்கி அல்லதுமத்திய அரசு அலுவலகத்தில் பணிபுரியும் நல்ல அழகும், குணமும் உள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. பையன் உயரம் 5' 6''. நிறம் சுமார். வரதட்சணை வாங்கப்பட மாட்டாது. விருப்பம், தகுதியுள்ளவர்கள் மட்டும் தங்கள் சமீபத்திய போட்டோ, ஜாதகம் மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

சென்னையில் நல்ல வேலையில் — பணக்கார நிலையில் உள்ள குழந்தை இல்லாத இளம் விதவைகளும் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

பெட்டி எண் 61

[பி.கு.: மங்கையர் மலர் ஜூன் 81 திருமண மலர் பகுதியில் பெட்டி எண் 37க்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மறுபடியும் தொடர்புகொள்ள வேண்டாம்.]

தனியார் கம்பெனியில் வேலை செய்யும் பாரத்வாஜ கோத்ரம் உத்திரட்டாதி நட்சத்திரம் பிராமண வகுப்பைச் சேர்ந்த 31 வயது பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த நல்ல வேலையில் உள்ள குணமுள்ள 37 வயதுக்குள் மணமகன் தேவை. பையனின் புகைப்படத்துடன் பதில் அனுப்பவும்.

பெட்டி எண் 62

நல்ல குடும்பப்பொறுப்புள்ள ஸ்ரீவத்ஸ கோத்திரம் வடமாள் வயது 30, ரேவதி நக்ஷத்திரம் நல்ல நிறம், லக்ஷணமுள்ள, B.A. பாஸ் செய்து தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வேலைபார்க்கும் கன்னிபெண்ணுக்கு அதே ஜாதியில் நல்ல படித்த உத்யோகமுள்ள பிரம்மச்சாரிகளிடமிருந்து ஜாதகம் வரவேற்கப்படுகிறது. அதே ஜாதி பெண்கள் படித்து வங்கியிலோ மத்யசர்க்காரிலோ தேசியமயமாக்கப்பட்ட தொழிலகத்திலோ பணிபுரிபவன் மத்யசர்க்கார் தொழிலகத்தில் Technical Officer பணிபுரியும் பையன் வயது 35½, பூரட்டாசி நக்ஷத்திரம், நல்ல நடத்தையுள்ளவனுக்கு ஜாதகம் வரவேற்கப்படுகிறது.

பெட்டி எண் 63

பாரத் வாஜ கோத்ரம் பிரஹசரணம் பிராமண வகுப்பைச் சேர்ந்த 28 வயது விசாக நட்சத்திரம் பட்டதாரிப் பெண்ணுக்கு நல்ல அலுவலகத்தில் நிரந்தரமான உத்தியோகத்தில் இருக்கும் பிரம்மசாரி மணமகன் தேவை.

பெட்டி எண் 64



'பெண்கள் மட்டும்' பஸ் ஸ்டாப்!

சமீப காலமாகப் பெண்கள் வெளியில் வருவதும், பள்ளிக்கு, கல்லூரிக்கு, வேலைக்குப் போவதும் அதிகமாகிவிட்டதால் பொது இடங்களில் பெண்களின் கூட்டம் அதிகமாகிவிட்டது. இதனால் கூட்டங்களில் இடிபடுவதும், அது தொடர்பான பிரச்னைகளும் பல எழும்புகின்றன. இதற்காகத்தான்— பெண்களின் வசதிக்காகத்தான் — 'பெண்கள் மட்டும்' ஏறும் பஸ் விடப்பட்டது.

இப்போது நிலைமை இன்னும் முன்னேறி விட்டது. குறிப்பிட்ட நேரங்களில் மட்டும்தான் இந்த பஸ்கள் விடப்படுகின்றன. மற்ற நேரங்களில் பெண்களுக்கு ஏறுவதும் இறங்குவதும் சிரமமாகத்தான் இருக்கிறது. இதற்காகத்தான் 'பெண்களுக்கென்றே ஒருபஸ்-ஸ்டாப் வைக்க வேண்டும்' என்ற எண்ணத்தின் முதல் கட்டமாக ராணி மேரி கல்லூரி அருகே 'பெண்கள் பஸ்-ஸ்டாப்' வைத்திருக்கிறார்கள்.

இந்த நிறுத்தத்தில் பெண்கள் மட்டும் ஏறி இறங்கலாம். மற்றொன்று அருகேயே (பழைய பஸ்-ஸ்டாப்) இருக்கிறது. இது பொதுவாக அனைவருக்கும் உள்ளது. இப்படி பெண்களுக்கென்றே பஸ் ஸ்டாப் வைத்துள்ளதைப் பற்றி இவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

மாணிக்கவல்லி
(கல்லூரி மாணவிகள் யூனியன் துணைத் தலைவி)

''இந்த வகையில் எங்க கல்லூரி முதலிடம் தட்டிட்டுப் போறது பெருமையாத்தான்இருக்கு. 'லேடீஸ்ஸ்பெஷல்' பஸ் மட்டுமில்லாம, மற்ற எல்லா பஸ்களும் இங்க நிக்கறது.

இந்த பஸ் ஸ்டாப் ஏற்படுத்தின உடனே, இங்கே பஸ்கள் நிக்குமோ நிக்காதோன்னு சந்தேகம் வந்தது. அதுக்காக 'மூணு ஸ்பெஷல் செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ்' அங்கேயே இருந்து எல்லா பஸ்களையும் நிறுத்தி எங்கள் கல்லூரி மாணவிகள்ஏற உதவி செய்தாங்க.

இப்படிப்பட்ட பஸ் ஸ்டாப்புகளை ஏற்படுத்தறது மூலம் எங்



○ மாணிக்கவல்லி

களைப் போன்ற மாணவிகள் மற்றவர்களின் 'ஈவ் டீசிங்' போன்ற இன்டல்களிலிருந்தும், இடிகளிலிருந்தும் தப்பிக்க முடியும்.



கே. ரோகிணி

ரோகிணி

(பி. ஏ. இருதியாண்டு மாணவி)

''இந்தத் திட்டம் எவ்வளவு தூரம் நடக்கும்னு தெரியலே. இந்த பஸ்ஸ்டாப் பிலேபஸ் நிக்குமோ நிக்காதோங்கிற சந்தேகத்துல பல ஸ்டூடண்ட்ஸ் பொது பஸ் ஸ்டாப்ல போய் நிக்கறாங்க. ரெண்டு நிறுத்தமும் பக்கத்துப் பக்கத்துல இருக்கறதால பஸ் டிரைவருக்கும், கண்டக்டருக்கும் தொல்லைகள் வேற. அவங்க முணுமுணுக்கறாங்க.

பட், இந்தத்திட்டம் வெற்றிகரமா நடந்தா பெண்களுக்குச் சௌகரியம். மற்ற இடங்களிலும் இதுபோன்ற பஸ் ஸ்டாண்டுகளை ஏற்படுத்துவதால் பெண்கள் கஷ்டப்படாம ஏற இறங்க வாய்ப்பு உண்டுதான். பிராக்டிகலா பார்க்கும்போது நிறைய கஷ்டங்கள் இருக்கு. ஒரு நிறுத்தத்தில் நிறுத்தி ஏற்றி இறக்கவே நேரமாகிறது. ரெண்டு ரெண்டு ஸ்டாப்பிங்கிலே நிறுத்தணும்னு எவ்வளவு நேரமாகும்? எப்போ போய்ச் சேருவது?

சாந்தி

(வரலாற்றுத்துறை மாணவி)

''ராணி மேரி கல்லூரிக்குப் பல பெருமைகள் இருப்பதோடு இன்னும் இரண்டு பெருமைகள் சேருகின்றன. லேடீஸ் பஸ் ஸ்டாப் ஒன்று. இனிமேல் கல்லூரிக்குள்ளேயிருந்தே லேடீஸ் ஸ்பெஷல் பஸ்கள்' புறப்படுவது மற்றொன்று. இதனால் கல்லூரி காம்பவுண்டு சுவரை விட்டு வெளியேவர வேண்டிய அவசியமே யில்லை.

ஆனால் இவை யெல்லாமும் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமே என்றிருக்கிறது. இப்போதே பல பஸ்கள் இங்கு நிற்பதில்லை. இந்த பஸ் ஸ்டாண்டில் நிறுத்துவார்கள் நிறுத்துவார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தால் கோட்டை விட வேண்டியதுதான். பொது பஸ் ஸ்டாண்டுக்குப் போனால் 'இங்கு ஏன் இவர்கள் வருகிறார்கள்' என்று முணுமுணுக்கிறார்கள். நாங்கள் என்னதான் செய்வது?



எம். பி. சாந்தி

இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருப்பதா?

இந்தப் பிரச்னைகளையெல்லாம் பல்லவன் பேருந்துக்காரர்கள் சரி செய்தார்களானால் நன்றாக இருக்கும்.

பேட்டி : சாவித்ரி




கவிதை பாடும் கண்களுக்கு...
ஐடெக்ஸ்
விழிகள் மொழிபேச ஐடெக்ஸ்
பெண்மை பரிச்சிட... இளமை எழில்
கொஞ்சிட... வனிதையர் வதனம்
கவர்ச்சி மிளிர்ந்து கண்கள்
கவிநடம்புரிய ஐடெக்ஸ் கண்மை
சாஸ்திரீய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 38 ஆண்டுகளாக உங்கள்
நம்பிக்கையின் மகத்தான சின்னம்
EYETEX
Eyetex REGD.
அரவிந்த் வ்யாபாரீஸ் சென்னை 600033



முதல் பரிசு

பொட்டுக்கடலை பிஸ்கட்

பொட்டுக்கடலை ஒரு கப் .
கோதுமை மாவு அரை கப்
நாட்டுச் சர்க்கரை முக்கால் கப்
வெள்ளைச் சர்க்கரை ஒரு கப்
ஏலக்காய் நான்கு
சமையல் சோடா ஒரு சிட்டிகை
டால்டா ஒரு டேபிள் ஸ்பூன்
ரோஸ் அல்லது கேசரி கலர்
பொரிக்க எண்ணெய் அல்லது டால்டா.

செய்முறை:

பொட்டுக்கடலையை மாவாக்கிக் கொள்ளவும். பொட்டுக்கடலை மாவையும் கோதுமை மாவையும் கலந்து நாட்டுச் சர்க்கரை, டால்டா சோடா இவற்றையும் சேர்த்துக் கலக்கவும். தேவையான குளிர்ந்த நீரைத் தெளித்துக் கெட்டியான ஒட்டாத பதத்துக்குப் பிசைந்து வைக்கவும். பாதி மாவை எடுத்து ரோஸ் அல்லது கேசரி கலர் சேர்த்துப் பிசைந்து தனியே வைக்கவும். வெள்ளை மாவையும் கலர் மாவையும் தனித் தனியே 4 அப்பளங்களாக இடவும். ஒரு வெள்ளை அப்பளத்தின் மேல் ஒரு கலர் அப்பளமாகப் போட்டுச் சுருட்டவும். இவ்வாறு எல்லா அப்பளங்களையும் சுருட்டி அரை மணி மூடி வைக்கவும். சர்க்கரையையும் ஏலக்காயையும் சேர்த்துப் பொடியாக இடித்துக்கொள்ளவும். மிக்ஸியிலும் பொடிக்கலாம்.

அப்பளச் சுருள் ஒவ்வொன்றையும் மூன்றாக ஆக்கி குறுக்காக வைத்து அப்பளமாக இடவும். சதுரங்களாக வெட்டி, காய்ந்த எண்ணெயில் பொரித்து எடுக்கவும். சூட்டுடன் இடித்த சர்க்கரையில் புரட்டி எடுத்து வைக்கவும். இது சுலபமாகச் செய்யக் கூடிய சத்துள்ள இனிப்பாகும். பிஸ்கெட்டுகளை வட்டம், மற்றும் பிடித்தமான அச்சுக்கள் கொண்டும் வெட்டிக் கொள்ளலாம்.

ஸரஸ்வதி கிருஷ்ணமூர்த்தி

இரண்டாம் பரிசு

பொட்டுக்கடலை பிட்டு

பொட்டுக்கடலை ஒரு ஆழாக்கு
வெல்லம் ஒரு ஆழாக்கு
முந்திரி 8
ஏலக்காய் 4
நெய் 2-3 கரண்டி
தேங்காய் ஒரு மூடி

முதலில் பொட்டுக்கடலையைத் தோல், கல் இல்லாமல் பொறுக்கி உரலில் இடித்துச் சலித்துக்கொள்ளவும். மிக்ஸி இருந்தால் அதில் நைஸாக அரைத்துக்கொள்ளலாம். அரைத்த மாவில் ஒரு சிட்டிகை உப்பும் சிறிது கேசரி பௌடரும் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக சிறிய அளவில் வெந்நீர் விட்டுக் கையால் தேய்த்துப் பிசையவும். இவ்வாறு கெட்டியாகப் பிசைந்த மாவை ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.

மாவு ஊறிய பிறகு அதை ஒரு இலையிலோ, அல்லது ஒரு துணியிலோ வைத்து இட்டிலி வேகவைப்பது போல், ஆவியில் வேக வைக்க வேண்டும். வெந்ததும், அடுப்பைத் தணித்துவிட்டு மாவை ஒரு அகலமான பாத்திரத்தில் போட்டு ஆறவைக்கவும்.

மாவு ஆறிக்கொண்டிருக்கும்போது வெல்லத்தைப் பொடித்து அளந்து (1 ஆழாக்கு) வைத்துக்கொள்ளவும். முந்திரியைச் சிறிய துண்டுகளாக ஒடித்து வைத்துக் கொள்ளவும். ஏலக்காயைப் பொடி செய்து கொள்ளவும். தேங்காயைக் கட்டி கட்டியாக இல்லாமல் உதிர்த்துக்கொள்ளவும்.

இதற்குள் மாவு ஆறியிருக்குமாகையால் அதைக் கையால் நன்றாகக் கட்டி இல்லாமல் உதிர்த்துக்கொள்ளவும்.

பிறகு அடுப்பில் அகலமான பாத்திரம் வைத்து வெல்லத்தைப் போட்டு வெல்லம்முழுகும்வரை ஜலம் விட்டு பாகு காய்ச்சவும். பாகு நல்ல முற்றல் பாகாக இருத்தல் அவசியம். பாகு முற்றியதும் துருவின தேங்காயையும் ஏலப் பொடியையும் அதில் போட்டு பின்னும் சில நிமிஷங்கள் கிளறி இறக்கி வைத்துக் கொள்ளவும். உதிர்த்து வைத்த பொட்டுக் கடலை மாவில் சிறிது சிறிதாக பாகை விட்டு நன்றாக கலக்க வேண்டும். சூடு ஆறியிருந்தால் கையாலேயே நன்றாகத் தேய்த்துக் கலக்கலாம். முந்திரியைப் பொன் போல் நெய்யில் வறுத்துக்கொண்டு இதில் சேர்க்கவும். உலர்ந்த திராட்சையும் இத்துடன் வறுத்துச் சேர்க்கலாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பொட்டுக்கடலைப் பிட்டு மிகவும் ருசியாக இருப்பதோடல்லாமல் 2 நாட்கள்வரை கெடாமல் பத்திரப்படுத்தி வைக்கலாம்.

-வசந்தா சீனிவாசன்

மூன்றும் பரிசு

பொட்டுக்கடலை பூண்டு பொடி

பொட்டுக்கடலை 200 கிராம் அல்லது இடித்துச் சலித்த பொட்டுக்கடலை மாவு கால் படி
பூண்டு 100 கிராம்
சீரகம் 2 டேபிள் ஸ்பூன்
கொத்துமல்லி விதை 2 டேபிள் ஸ்பூன்
நன்றாக முற்றிய தேங்காய் ஒரு மூடி
புளி கண்டைக்காய் அளவு
வற்றல் மிளகாய் 20
கசகசா 2 மேஜைக் கரண்டி
தேவையான உப்பு
(எண்ணெய் தேவையில்லை)

செய்முறை:

பொட்டுக்கடலையை இடித்து சலித்து மாவு எடுத்துக்கொள்ளவும். கால் படி மாவு போது மானது. தேங்காயைத் துருவிக்கொள்ளவும். பூண்டை உதிர்த்துத் தனித் தனி பருப்பாக வைத்துக் கொள்ளவும். (பூண்டை இப்போது உரிக்க வேண்டாம்.) அடுப்பில் வாணலியைப் போட்டு நன்றாகக் காய்ந்ததும் சீரகம், கொத்துமல்லி விதை, மிளகாய் வற்றல் ஆகிய வற்றைத் தனித் தனியே எண்ணெய் விடா மல்) வறுத்து எடுத்துக்கொள்ளவும். உதிர்த்து வைத்துள்ளபூண்டையும் வாணலியில்போட்டு வறுத்து எடுத்துக்கொள்ளவும். (பூண்டை ரொம்பவும் வதக்கினால் குழைந்துபோகும்) துருவிய தேங்காயையும் நன்றாக வறுத்து எடுத்துக்கொள்ளவும். சுத்தமான, ஈரமில் லாத கல்லுரலில் வறுத்து வைத்துள்ள சீரகம், கொத்துமல்லி விதை, மிளகாய் வற் றல், மற்றும் கசகசாவைப் போட்டு நன்றாக நைசாக இடித்துத் தனியாக எடுத்து வைத் துக்கொள்ளவும். பூண்டின் தோலை உரித்து விட்டு,தேங்காய், புளி, உப்பு ஆகியவற்றுடன் கலந்து கல்லுரலில் இட்டு நன்றாக இடிக்கவும். இதை முதலில் இடித்துவைத்துள்ள பொடி, பொட்டுக்கடலைப் பொடியுடன் நன்றாகக் கலந்து, மறுபடியும் இரண்டு மூன்று முறை இடித்துவிட்டு, நன்றாக உலர்ந்துள்ள சீசாவில் போட்டு வைக்கவும். இதைச் சாதத்தில் கலந்து நெய் ஊற்றிச் சாப்பிட மிகவும் சுவை யாக இருக்கும். பூண்டின் வாசனை வராமல் இருப்பதால் பூண்டு-வாசனை பிடிக்காதவர்கள் கூடச் சாப்பிடலாம். மேலும் இப்பொடியை பீன்ஸ், கொத்தவரங்காய் போன்ற பொரிய லிலும் கலந்து விட்டால் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

-பத்மா ராமநாதன்

ஆறுதல் பரிசு

பொட்டுக்கடலை பாயஸம்

பொட்டுக்கடலைப் பொடி முக்கால் கப்
ஜவ்வரிசி அரை கப்
பால் ஒன்றரைக் கிலோ
சர்க்கரை 10 முதல் 12 டேபிள் ஸ்பூன்
நெய் 2 டேபிள் ஸ்பூன்
பாதாம் எஸன்ஸ் 3, 4 துளிகள்
ஏலக்காய் 2 அல்லது 3

செய்முறை:

முதலில் வெறும் வாணலியில் ஜவ்வரிசியை வறுத்துத் தனியாக வைக்கவும். வாணலியில் நெய்யை விட்டுப் பொட்டுக் கடலை மாவை வறுத்துக்கொள்ளவும். ஆறிய பின் 3 கப் தண்ணீர் சேர்த்து ஜவ்வரிசியையும் கலந்து கொதிக்க விடவும். பாலைத் தனியாக நன் றாகக் காய்ச்சிக்கொள்ளவும். பாதிப் பாலைக் கொதிக்கும் மாவுடன் கலந்து சர்க்கரை போடவும். நன்றாகக் கொதிக்கும்பொழுது சிறிது சிறிதாக மீதிப் பாலையும் கலந்து ஏலக்காயையும் பொடி செய்து கலக்கவும். பாதம் எஸ்ஸென்ஸை கீழே இறக்கும்போது விடவும். பாதாம்கீர் போல இருக்கும்.

- விசாலம்

ஆறுதல் பரிசு

பொட்டுக்கடலை கறி வடை

கொத்து கறி ஒன்றரை கிலோ
பொட்டுக்கடலை 200 கிராம்
வெங்காயம் 2
இஞ்சி ஒரு துண்டு
பூண்டு 10 பல்
பச்சை மிளகாய் 5
ப. கொத்தமல்லி ஒரு கட்டு
எண்ணெய் அல்லது டால்டா
தேவையான உப்பு

செய்முறை:

கறியைக் கழுவித் திட்டமான தண்ணீர் விட்டு வேகவைக்கவும். இத்துடன் அரைத்த இஞ்சி பூண்டையும் சேர்த்து வேக வைக்க வேண்டும். தண்ணீர் சுண்டினவுடன் வெந்த கறியுடன் பொட்டுக்கடலையைச் சேர்த்து நன் றாக அரைத்துக் கொள்ளவும். வெங்காயம் பச்சை மிளகாய், கொத்தமல்லியைப் பொடி யாக நறுக்கிக் கறிக் கலவையுடன் உப்பு சேர்த்து நன்றாகக் கலந்துவிடவும். பின் வாணலியில் எண்ணெயை ; காய்த்து இந்தக் கறிக் கலவையில் சிறு சிறு வடைகள் செய்து எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

- கே. சன்வரி

ஆறுதல் பரிசு

பொட்டுக்கடலை சீடை

வறுத்த பொட்டுக்கடலை மாவு 1 கப்
வறுத்த உளுத்தம் மாவு 3 ஸ்பூன்

பச்சரிசி மாவு 5 கப்
துருவிய தேங்காய் 1 கப்
நமக்குப் பிடித்த ஏதாவதொரு பலகார
எண்ணெய் கால் கிலோ
தேவையான உப்பு, பெருங்காயம் இரண்டும் தண்ணீரில் கரைத்து வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும்
கெட்டியான நெய் அல்லது வெண்ணெய் 5 ஸ்பூன்

செய்முறை :

பொட்டுக்கடலை மாவு, அரிசி மாவு, உளுந்தம் மாவு, தேங்காய், இவை நான்கையும் ஒன்றாகக் கலந்து வெண்ணெய் அல்லது நெய் உப்பு, பெருங்காயம், ஜலம் முதலியவற்றைத் திட்டமாகக் கூட்டி, சிறுசிறு உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் போட்டுப் பொன் நிறமாக வேகவைக்கவும். மிகவும் கரகரப்பாகவும், இனிமையான காரமாகவும் இருக்கும். மாவு பிசையும்போது தண்ணீர் வேண்டுமானால் துளித் துளியாகச் சேர்க்கவும்.


பி. கு: முக்கியமாக மாவு இளகாமல் கெட்டியாக இருக்க வேண்டும். அரிசி மாவு, வறுத்த பொட்டுக்கடலை, வறுத்த உளுத்தம் பருப்பு இவைகள் மேலே சொன்ன அளவில் மிக்சி அல்லது மிஷினில் அரைத்து வைத்துக் கொண்டால் திடீர் என வரும் விருந்தினர்க்கு சீடையாகவோ தேன்குழலாகவோ உடனடியாகச் செய்து கொடுக்கலாம்.


-என். ஜெயா

வெங்காயம்

காற்றோடு கலந்து பரவுகின்ற விஷக் கிருமிகளைத் தன்பால் கிரகித்துக் கொள்கிற சக்தி வெங்காயத்துக்கு மட்டுமே உண்டு. தினமும் அதிகாலை ஒரு வெங்காயத்தைத் தின்று தண்ணீர் குடித்தால் வாழ்நாள் முழுதும் எந்த நோயும் அணுகாது. உடலுக்கு உடனடியாகக் குளிர்ச்சியை உண்டு பண்ணுகிற சிறப்புச் சக்தி இதற்கு உண்டு. இதனை இரண்டாக வெட்டி முகர்ந்தாலும் வாயிலிட்டுக் கொண்டாலும் வாந்தி மட்டுப்படும். நிற்கும். தொற்று நோய் பரவியுள்ள இடங்களுக்குச் சென்றால் கையிலோ சட்டைப் பையிலோ ஒரு வெங்காயத்தை மேல் தோல் உரித்துவிட்டு எடுத்துச் செல்லல் நலம். நோய்க் கிருமிகள் நம்மைப் பாதிக்காதவாறு வெங்காயமே கவனித்துக்கொள்ளும்.

வெங்காயத்தை மூடிவைத்தல் வேண்டும். திறந்து கிடந்தால் காற்றுக் கிருமிகள் பாதித்துப் பச்சை நிறமாகிவிடும். பச்சை நிறமுடைய வெங்காயம் விஷத் தன்மை உடையது.





○ சாதம் பொங்கி இறக்கும் தருவாயில் சில சொட்டுக்கள் நல்லெண்ணெயை விட்டு பின் இறக்கி வையுங்கள். சாதம் மலர்ந்து பொல பொல வென்றிருக்கும்.



○ தேன் உண்மையான தேனா என்று சோதிக்க ஒரு எளிய வழி இருக்கிறது. ஒரு சொட்டு தேனை பிளாட்டிங் பேப்பரில் விடுங்கள். ஊறினால் பொய்த் தேன். ஊறாமல் அப்படியே இருந்தால் உண்மையான தேன்!

ஆர்சி எஸ்

தம்பி... வா!

விமலா ரமணி

என் கதையால் எனக்கு வந்த பிரச்னை - 4

எப்போதுமே ஒரு படைப்பு பரிசு பெறுகிறது என்றால் அதைப் பற்றியவாதப் பிரதி வாதங்கள், விமரிசனங்கள், தாக்குதல்கள் என்று பல எழும்பும். என்னுடைய பரிசு பெற்ற கதையின் 'கதை'யே வேறு.

குங்குமம் பத்திரிகையில் என்னுடைய 'நிறங்கள்', டாலர் பரிசுப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. அந்தப் பத்திரிகைப் பிரதியை யாரோ படித்துவிட்டுப் பழைய பேப்பர் கடைக்குப் போட்டிருக்கிறார்கள். அது பொட்டலம் கட்டும் பேப்பராகி, மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் அம்மனைத் தரிசிக்க வந்த இளைஞன் கையில் கிடைத்திருக்கிறது.



அது என் கதையின் முதல் பக்கப் பேப்பர். அதில் என்னுடைய போட்டோவையும், முகவரியையும் வெளியிட்டிருந்தார்கள். அதைப் படித்துவிட்டு எனக்கு ஒரு நீண்ட கடிதமே எழுதிவிட்டான் அவன்.

அன்புள்ள அக்காவுக்கு... என்று ஆரம்பித்திருந்தான். தான் யாருமற்ற அனாதையென்றும், வேலை எதுவும் இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்திருந்தான். 'உங்கள் கதைகளை எங்கே பார்த்தாலும் நான் வாங்கிப் படித்துவிடுவேன். உங்களின் பரம ரசிகனான நான் குங்குமம், விபூதி மடிக்கக் காகிதத்தை எடுத்தபோது அதில் உங்களுடைய முகவரியைக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தேன். மதுரை மீனாட்சி அம்மனின் அருளால் கிடைத்ததாக நம்புகிறேன்...'

இந்த ரீதியில் நான்கு பக்கங்கள் எழுதிவிட்டு, அப்புறம் ஒரு விசித்திரமான வேண்டுகோளையும் விடுத்திருந்தான்! 'எனக்கு ஏதேனும் ஒரு வேலையை நீங்கள்தான் வாங்கிக் கொடுத்து என் வாழ்வுக்கு ஒளி கூட்ட வேண்டும். எனக்கென்று முகவரி இல்லாததால் நீங்கள் பதில் எழுத முடியாது. ஏதாவது ஒரு பத்திரிகையில் 'தம்பி, வா!' என்ற ஒரே வரி விளம்பரம் கொடுங்கள். நான் எல்லாப் பத்திரிகையையும் படிப்பவன்.

உங்கள் விளம்பரம் கண்டவுடன் பெட்டி படுக்கையுடன் உங்கள் வாசலில் வந்து நிற்கிறேன். அடிமையாக உழைக்கிறேன்.'

இதற்கு நான் என்ன செய்யட்டும்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சாதாரணமாக வாசகர் கடிதங்களுக்கு நான் பதில் எழுதிவிடுவேன். இவனுக்கு ஏதாவது அறிவுரை கூறி எழுதலாம் என்றால் கூட முகவரி கிடையாது!

இன்னொரு பயமும் வந்தது எனக்கு. வேறு யாராவது தம்பி காணாமல் போனவர்கள் பத்திரிகையில் விளம்பரம்போட இவன் வந்துவிடுவானோ? ஒரு மாதம்வரை பயந்துகொண்டிருந்தேன்.

அந்த இளைஞன் யார், எப்படிப்பட்டவன், நல்லவனா, அயோக்கியனா எதுவும் தெரியாது. அவனுக்கு என்ன உதவி செய்ய முடியும்? என்னால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்குச் செய்துகொண்டுதான் வருகிறேன். பல்வேறு மாதர் சங்கங்களின் மூலமாகவும், என்னிடம் நேரடியாக உதவி கேட்பவர்களுக்கும் செய்கிறேன்.

ஆனால், நானென்ன பெரும் பணக்காரியா? தமிழகத்தின் சாதாரணபெண் எழுத்தாளர். குறைகள் உள்ளவர்களுக்கெல்லாம் நான் பொருளுதவி செய்ய முடியுமா? எப்படியோ ஒரு மாதம் இந்தக் கதையால் நான் நடுங்கிக் கொண்டிருந்தேன்.''

என்று சிரிக்கிறார் திருமதி விமலா ரமணி.

''இந்தக் கதை என்று மட்டுமில்லை, கதைகள் எழுதுவதாலும், அதன் மூலம் பிரபலமாக இருப்பதாலுமே பல பிரச்னைகள் என்னிடம் வந்திருக்கின்றன.

இப்பொழுதுதானே 'நியூவேவ்' என்று பல விதமான கதைகள் வருகின்றன? பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே அப்படியொரு கதையை விகடனில் எழுதினேன். —'ஆண்டவன் தீர்ப்பு' என்ற அந்தக் கதையில் ஒரு மாணவன் தன்னுடைய டீச்சரைக் காதலிக்கிறான். தன்னைவிட வயதான அந்தப் பெண்ணைக் கடைசியில் கல்யாணம் செய்துகொள்ளவில்லை அவன். அது சரியா தப்பா என்ற விவாதத்துக்கே இடமில்லை.

அதைப் படித்துவிட்டு ஒரு மாணவன் எழுதியிருந்தான், தான் தன்னுடைய டீச்சரைக் காதலிப்பதாகவும், அது சரியா தப்பா எனக் குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில் இந்தக் கதையைப் படித்துவிட்டு, தவறு இல்லை என முடிவு செய்து கொண்டோனும். விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்ளப்போவதாக எழுதியிருந்தான்.

இது தர்மத்தின்பாற்பட்ட பிரச்னை. என் கதை தரும நியாயங்களுக்கு முரணாக ஒன்றை இருவருக்கு உணர்த்தியதோ என்று பயப்பட்டேன். ஆனால் அதையும் 'ஆண்டவன் தீர்ப்புக்கே' விட்டு விட்டேன்.

மற்றொரு சமயம் இலங்கையிலிருந்து வந்த ஒருவர் தான் எல்லாவற்றையும் இந்தியாவில் வந்து தொலைத்து விட்டதாக என்னிடம் வந்து நின்றார். போனவுடன் பணம் அனுப்புவதாக வாங்கிப் போனார். இதுவரை தகவல் இல்லை.

பணம் பெரிசில்லே. ஆனால் அவர் என்னை ஏமாற்றி வாங்கிக் கொண்டு போய்விட்டாரே என்ற மன உளைச்சல். இதெல்லாம் என் கதைகளால் நான் பிரபலமானதால் வந்த பிரச்னைகள் தானே?

எப்படியோ, எழுத்தாளர்கள் என்றால், ஒருவிதக் கற்பனையோடு வாசகர்கள் பார்க்கிறார்கள். அந்த இமேஜைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவர்களாகிறோம். அதே சமயம் எங்களையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமல்லவா! தமிழ் நாட்டின் எழுத்தாளர்கள், ஏன், உலகம் பூராவும்தான் எழுத்தாளர்கள் அப்படி யொன்றும் வசதியாக இல்லையே!

பேட்டி: **வி. மஞ்சுளா ரமேஷ்**

எப்போதும் பெண்

முன்கதைச் சுருக்கம்

அப்பாவுக்கு வயது நாற்பத்தி ஐந்து. அம்மாவுக்கு முப்பத்தி ஏழு. மூன்று குழந்தைகள். சிரத் தேவையின்றி விலகிக்கொண்ட அவர்கள், ஒரு நாள் கரண்ட் நின்றுபோனதால் மாடியில் போய்ப் படுத்துக்கொண்டார்கள். பாட்டியும் குழந்தைகளும் கீழே.

நடு ராத்திரியில் ஏதோ ஒரு கூட்ஸ் வண்டி போட்ட சத்தத்தில் விழித்துக்கொண்ட அப்பா, மல்லாக்கப் படுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அம்மாவைப் பார்த்தார். அவருக்குள் ஏதோ ஒன்று விழித்துக் கொண்டது....

அம்மாவுக்குப் பாதித் தூக்கம்; பாதி விழிப்பு. தனக்கு நிகழ்ந்ததில் பாதிதான் தெரியும். மீதி... அடுத்த மாதம் தெரிந்தது.

அம்மாவின் கர்ப்பம் அடுத்த வாரம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

"ஏற்கனவே வீட்டில் மூன்று பிள்ளைகள். கிஷ்கிந்தா காண்டம்தான். வேண்டாம் இந்தக் குழந்தை" என்று அழுதாள்.

அதனால் அதை அகற்ற ஆபரேஷனுக்கான தேதியும் நிர்ணயிக்கப்பட்டது.

அன்று அம்மா தயாராக இருந்தாள். புறப்படும் நேரத்தில் பாத்ரூமுக்குப் போன பாட்டி வரவில்லை. அங்கே ஏசகேடாக விழுந்து விட்டாள். முறிந்து போன காலைச் சரிப்படுத்தவே இரண்டு மாதம் ஆகிவிட்டது. ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் நடக்கவே சரியாக இருந்தது. அப்புறம் டாக்டரை அணுகினார்கள்.

அவள் பரீட்சை பண்ணிப் பார்த்துவிட்டு, "பெரிசாக வளர்ந்துடுத்து. ரிஸ்க்" என்றாள். அம்மா முதலில் அழுதாள். அப்புறம் தன் விதிக்குப் பழகிக்கொண்டாள்.

அம்மா சாதாரணமாகத்தான் இருந்தாள். நிறை கர்ப்பமாக இருந்தாலும் வீட்டுக் காரியங்களை விட்டுவைக்காமல் துடைத்துக் கொண்டும், அரைத்துக்கொண்டும். கைக்காரியங்கள் செய்து கொண்டும் இருந்தாள். அவ்வப்போது ஸ்டூலில் உட்கார்ந்துகொண்டு ஓய்வெடுத்துக்கொள்வாள்.

ஏற்கனவே மூன்று பிள்ளைகள் பெற்றிருந்ததால் இந்தப் பிரசவத்தில் அதிகம் கஷ்டப்படவில்லை. வெளியே வந்தவள் பெண்! இப்போதெல்லாம் தொப்புள் கொடியை உடனே வெட்டிவிடுவதில்லை. அம்மாவிடமிருந்து கடைசி சப்ளை ரத்தத்தை வாங்கிக்கொண்ட பின் வெட்டினார்கள்.

இதுவரை சிக்கலில்லாமல் சென்று கொண்டிருந்த பிரசவம் பாதை மாறியது. தேகம் பிரசவத்துக்குப் பின் கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக் கொண்ட பின்தான் மற்ற கழிவுப் பொருள்களை வெளியே தள்ளும். ஆனால் எங்கேயோ தப்பு ஏற்பட்டு ஏகப்பட்ட ரத்தம் உடனே வெளிவர ஆரம்பித்தது.

டாக்டர் மற்றொரு பிரசவம் பார்க்கப் போய் விட்டாள். புதிதாகச் சேர்ந்த அஸிஸ்டெண்ட் 'திஸ் இஸ் நார்மல்' என்று கிளம்பிவிட்டாள். அம்மா வேகமாக நிறமிழந்தாள். டாக்டர் வந்து பார்த்தபோது அம்மா இறந்திருந்தாள்.

அப்பா சாக்லேட் வாங்கிக்கொண்டு வர, பாட்டியும் மூன்று குழந்தைகளும் ரிக்ஷாவிலிருந்து இறங்கிவர, புதியவள் பிறந்த களைப்பில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

பாட்டி, "சண்டாளி! பொறக்கறதுக்கு முன்னாடியே தாய்க்காரியை முழுங்கினையா மூதேவி" என்றாள்.

"இதை எடுத்துண்டு போயிடுங்கோ. எங்களுக்கு வேண்டாம்" என்றார் அப்பா.

சின்னவன், "ம்... எனக்கு வேணும்" என்று அழ ஆரம்பித்தான். "அப்பா, அம்மாவை எழுப்புப்பா!"

"அம்மா எழுந்திருக்கவே மாட்டாடா! எழுந்திருக்க மாட்டா."

அப்பா கீழே உட்கார்ந்து கொண்டு குலுங்கி அழுதார்.

நிலைமையைப் பார்த்துவிட்டு மேட்ரன், இதை 'ஃபாரின் கப்பிளுக்கு விற்கலாமா என்று யோசித்தாள்.

அப்போது நமசிவாயத்தின் வீட்டில் டெலிபோன் அடித்தது. (கதை பக்கம் 14ல்)



சுஜாதா

5

"அல்லோ! யார் வேணும்?"

"நமசிவாயம் இருக்காருங்களா?"

"நமச்சிவாயம் தான் பேசறேன்."

"அய்யா நான் ஆஸ்பத்திரில இருந்து பேசறேனுங்க. கொஞ்ச நாளைக்கு முன்னே அம்மா எடுத்து வளர்க்கறதுக்கு ஒரு குழந்தை வேணும்னு சொல்லியிருந்தாங்க."

"ஆமா. தெரியும்."

"ஆஸ்பத்திரில ஒரு பொண் குழந்தை பொறந்து உடனே தாயார் இறந்துட்டாங்க. அவங்க குடுப்பாங்க போல இருக்கு"

"பிராமின்ஸ்ங்களா?"

"ஆமாங்க. அப்புடித் தான்."

"அவங்க சாதாரணமாக் கொடுக்க மாட்டாங்களே."

"இவங்க குடுப்பாங்க போலத் தெரியுது. குழந்தையை வளர்க்கறதுக்கு வீட்டிலே பொம்பளைங்க யாரும் இல்லே போல. ஒரு வயசான கிழவியைத் தவிர."

"குழந்தை நல்லா இருக்குதுங்களா?"

"நல்லா கல்கண்டாட்டம் இருக்குதுங்க."

"எத்தனை பவுண்டு?"

"அது வந்துங்க... எல்லா விவரமும் வார்டுக்கு வந்தீங்கன்னு தெரிஞ்க்கலாம். ஸ்டாஃப்புதான் சொல்லச் சொல்லிச்சு."

"இப்பவே வரதா?"

"இப்ப வேண்டாங்க. குழந்தை இன்னும் பத்து நாளைக்கு இங்கதான் இருக்கும்போல தெரியுது. அதுக்குள்ள தகப்பனைப் பார்த்துப் பேசி முடிச்சரலாம் என்ன?"

நமச்சிவாயத்தின் மனைவி கிட்டத்தில் காதை வைத்துக் கொண்டிருந்தாள். "என்னங்க?"

"அதான் கேட்டுக்கிட்டு இருந்தியே."

"செரியாக் கேக்கலே. என்னவாம்?"

"ஆஸ்பத்திரில ஒரு பாப்பாரக் குழந்தை தாயில்லாம அநாதையா இருக்குதாம். குடுத்துருவாங்கன்னு சொல்றாங்க."

"நம்ம சாதியா இருந்தாப் பரவாயில்லையே."

"ஆரம்பத்திலே எல்லாம் ஒரே சாதி தான்."

"ஆணு, பொண்ணு?"

"பொண்ணு."

"எடுத்துக்கலாங்க. எனக்குத் தோதா வீட்டு வேலை செய்யும். குங்குமம் இட்டுக்கிட்டுக் கோயிலுக்குக் கூட வரும். நல்லாப் படிக்க வைக்கலாம். பட்டுப் புடவை எல்லாம் வீணாப் போவுது. நகையெல்லாம் பொட்டில தூங்குது. போட்டு அடுக்கி அழகு பார்க்கலாம்."

"இன்னிக்குத்தான் பொறந்திருக்கு. இருவது வருஷம் தாவாதே. முதல்ல அவங்க குடுக்கறாங்களான்னு கேட்டுப் பார்க்கலாம்."

"வரப்போ ஒரு ஃபீடிங் பாட்டில் வாங்கிட்டு வந்துரலாம்."

"அவங்க குடுக்கல்லேன்னு அதை யார் சப்பறது?" என்றார் நமசிவாயம். வீட்டில் பழங்காலத்துத் தேக்கு மரப் பீரோக்களில் நிறைய வேஸ்டாக ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. எந்த அலமாரியைத் திறந்தாலும் பத்து ரூபாய் நோட்டு உதிரும். செட்டுக் கட்டாமல் சின்னச் சின்ன வைரங்களாக ஒரு பிளாஸ்டிக் டப்பா நிறைய ரொப்பியிருந்தார். உபயோக மில்லாமல் நிறைய சோபாக்கள் துணி போட்டு மூடியிருந்தன. ரத்தினக் கம்பளம் அதிகம் மிதிக்கப்படாமல் பரவியிருந்தது.

நமச்சிவாயத்தின் வயசு நாற்பத்தி நாலு. மனைவி அவரை விட தாட்டியாக ஏராளமாக இருந்தாள். முப்பது வயசில் ஒடிசலாக இருந்தாள் என்பதற்குச் சாட்சியாகப் போட்டோப் படங்கள் இருக்கின்றன. அப்புறம்



இத்தனை பணத்தை வைத்துக் கொண்டு அனுபவிக்கத் தெரியாமல் எல்லாவற்றையும்பூட்டிப் பாதுகாத்து, ஒரு டெலிவிஷன் செட்டு வாங்குவதற்கு ஆயிரம் யோசனைகள் பண்ணி சொத்துச் சேர்த்து வைப்பதில் யாருக்கு லாபம் என்று நமச்சிவாயமும் மனைவி பார்வயம்மாளும் யோசித்துப் பார்த்ததில் நமச் சிவாயத்தின் தம்பியும் குடும்பமும்தான் கிட்ட உறவு என்று உணரும்போது, பார்வதி

எப்போதும் பெண்

தான் ஜடபரதர் மாதிரி சாப்பிட ஆரம்பித்தான் போலும். இப்போது ஒரு பாட்டியைப் போல மாறிவிட்டாள்!

'இனிமேல் வைத்தியம் பார்த்துக்கிட்டு பிள்ளை பெத்து என்னையே தூக்க முடியலை. ஒரு புள்ளையையும் சுமக்க முடியுமா?'

குழந்தையே பிறக்காமல் இருப்பது பற்றி எப்போதும் இருவரிடையேயும் தீவிரமாக விவாதிக்கப் படவில்லை. நமசிவாயம் கந்தர் அலங்காரம் படிக்கும் வாயால் எப்படி ஃபாலோப்பியன் டியூப்ஸ்பார்ம் என்றெல்லாம் மனைவிக்கு விளக்கிச் சொல்ல முடியும்? அந்தம்மாளுக்கும் தன் கவர்ச்சியில்லாத உருவத்தின் காரணத்தாலோ, என்னவோ இந்த மாதிரி சரீரசம்பந்தமான விஷயங்கள் அனைத்துமே உச்சரிக்கக்கூட லாயக்கில்லாதவையாகி விட்டன. அவள் எப்போதும் வத்தல் போடுவதிலும், கைவேலைகள், தையல், பாத்திக் போன்ற சில்லறைச் சாதனைகளிலுமே கவனமாக இருந்தாள். பிள்ளை பிறக்காததை எப்போதாவது தெய்வ சன்னிதானத்தில் முணுமுணுத்திருக்கிறாளே தவிர இத்தனை வருடமாக ஒரு லேடி டாக்டரிடம் தீவிரமாகக் காட்டியது கிடையாது. மேலும் தயக்கம். யார் மேல் குறை என்று தெரியாதவரைக்கும் தயக்கம்.

அந்த அம்மாளுக்கு ஒரு டைலேஷன் பண்ணி வைத்தால் பட்டென்று அடுத்த சந்தர்ப்பத்தில் கர்ப்பமாகிவிடக் கூடிய சின்னச் சமாச்சாரமாகக் கூட இருக்கலாம். காலந் தாழ்த்தி, காலந் தாழ்த்தி இனிமேல் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு அம்மாள் ஏராளமாகிவிட்டாள். நமச்சிவாயத்துக்கும் ஏறக்குறைய எல்லாம் மறந்து போய் விட்டது.

அம்மாள், 'அவங்களுக்குப் போகக்கூடாதுங்க. ஊர் பேர் தெரியாத யார் பேருக்கு வேணும் போகட்டும். அவங்களுக்கு மட்டும் போகக் கூடாதுங்க' என்று அடித்துச் சொல்லிவிட்டாள்.

அதற்குக் காரணம், இந்தத் தொடருக்குப் புறம்பான விஷயம். தம்பி சுவீகாரமாகத் தர வந்த பையனையும் மறுத்துவிட்டார்கள். இப்போது குழந்தை எடுத்து வளர்ப்பதற்கு அலைகிறார்கள்.

பனிரெண்டு நாள் கழித்து நமச்சிவாயம் அப்பாவின் வீட்டைத் தேடிப் போனார். உள்ளேயிருந்து அவள் விராட் விராட் என்று கத்திக் கொண்டிருந்தாள். நமச்சிவாயம் கையில் பை நிறையப் பாக்கு வெற்றிலை, பழங்கள் என்று ஏகத் தாராளமாக உள்ளே நுழைந்து, அப்பாவின் பேர் சொல்லி 'வீட்டில இருக்காருங்களா?' என்று கேட்டார். பார்வதி அம்மாள் வெளியே காரில் உட்கார்ந்திருந்தாள்.

''யாரு?'' என்றார் அப்பா.

''யாரு?'' என்றான் சின்னவன்.

''ஸார், என்பேரு நமச்சிவாயம். உங்க மனைவி இறந்து போனதுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். இந்த வயதிலே உங்களுக்கு இத்தகைய பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என்னதான் சோதனைன்னு உங்க கடவுள் மேலே விரோதம் கொண்டிருக்கலாம்.

'விடப்பண்ணி வைத்தார் விடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங்கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே!'

திருமந்திரத்திலே சொல்றப்பல நாம எல்லாருமே போகப் போறோம்னு வெச்...

இந்தாங்க சாக்லட்டு பழம் வாப்பா, குழந்தை! வாங்கிக்கிங்க.''

''நீங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு சொல்லவே இல்லேயே'' அப்பா க்ஷவரம் செய்யாமல் முகமெல்லாம் வெள்ளை' முள்ளாக துண்டு பூரா ஒரு வார மூக்கு சிந்தலாக இருந்தார். பாட்டி சமையலறையில் தட்டிக்கொட்டிக் கொண்டு,

''கடன்காரா' கடன்காரா! வெறும் புளியைத் தின்றே! 'மசக்கையாடா உனக்கு'' என்று அதட்டிக் கொண்டிருக்க,

''இல்லே பாட்டி, உப்புச் சேர்த்துத் தான் சாப்பிட்டேன்'' என்று இரைச்சல் கேட்டுக் கொண்டிருக்க, இரண்டாமவன் அழுகிற குழந்தையை ''நிறுத்தப் போறியா, பூச்சாண்டி கிட்டப் புடிச்சுக் கொடுத்துடட்டுமா'' என்று அதட்டிக் கொண்டிருந்தான்.

''பாவம். புள்ளேங்க தவிக்குது.''

''எதுக்கு இதெல்லாம்?'' என்று அப்பா சன ஸ்வரத்தில் கேட்டார்.

''ஆஸ்பத்திரியில சொல்லலிங்களா?''

''ஆஸ்பத்திரில நடந்தது என்ன ஞாபகம் இருக்கு!''

நடை வழியாகத் தெரிந்த அவனைப் பார்த்து, ''இதான் குழந்தைங்களா? நல்லா வளர்த்தியாத்தான் இருக்குது. பாவம். தாயில்லாப் புள்ளே...''

''உங்க பேர் என்ன சொன்னீங்க?''

''நமச்சிவாயம். இந்தக் குழந்தை விஷயமா ஆஸ்பத்திரில அந்தம்மா உங்க கிட்டப் பேசலிங்களா?''

''ஏதோ சொன்னாங்க. நீங்க சொல்லுங்க. என்ன வேணும்?''

நமச்சிவாயம் கனைத்துக் கொண்டு ''எங்களுக்கு இந்தக் குழந்தையைத் தருவீங்களா?''

''எதுக்கு?''

''நாங்க வளக்கறதுக்கு. நானும் என் சம்சாரமும் குழந்தை இல்லாம இருக்கோம். ஏகாந்திரத்துக்கு இருக்குது சொத்து. வீடு வாசல், நெல் புலன்கள்...''

''பணத்துக்கு விக்கணும்கிறீங்களா?''

''அப்படிப்பேசலே நான். நாங்க எடுத்துக்கிட்டு வளர்க்கிறோம்னு சொல்றோம். பணம் பெரிசில்லே. உங்களுக்குப் பணம் தேவையா இருக்குதோ இல்லேயோ வேற விசயம். இதை ஏதோ வியாபாரமா நினைக்காதீங்க. நீங்க இந்தக் குழந்தையை வளர்க்கிறதுக்குக் கஷ்டப்படுவீங்கன்னு சொன்னாங்க. அன்பா ஆசையோட கேக்கறோம். உங்க குடும்பத்தைப் பூராவே கவனிச்சுக்கிறதுக்கு எனக்குப் பண வசதி இருக்குறது வேற விஷயம். பணத்தை வைச்சு ஆசை காட்டறதா நீங்க ஒருபோதும் நினைக்கக் கூடாது. விருப்பத்தோட கேக்கறவங்களுக்கு விருப்பத்தோட குடுக்கணும். இதில கட்டாயம் எதுவும் இல்லே. மனம் விரும்பிக் குடுக்கிறதுன்னு சந்தோஷமா ஏத்துக்கத் தயாரா இருக்கோம்.''

அப்பா ''உட்காருங்க'' என்றார். அடுத்த அறையில் தெரிந்த அவனைப் பார்த்தார். கையையும் காலையும் விலுக் விலுக்கென்று உதைத்துக் கொண்டு இன்னும் அழுது கொண்டிருந்தது. எப்போது எப்படி அதன் அழுகையை நிறுத்துவது என்று இன்னும் பாட்டிக்குக்கூடப் பிடிபடவில்லை. இன்னும் அதற்குப் பெயர் வைக்கவில்லை. ஏதோ ஓரத்தில் குப்பைக் காகிதம் போலத்தான் கிடந்தது. அதன் மேல் பாசம், அன்பு எதையும் காட்டுவதற்குச் சமயமின்றி அம்மாவின் காரியங்கள் ஆக்கிரமித்து விட்டன. அதற்கு யார் என்ன கொடுத்தார்கள் என்று யாரும் கவலைப்படவில்லை. வீச் வீச்சென்று கத்திப் பிராணனை விட்டுடும் போல இருந்தது. அதன்மேல் எந்தப் பச்சாதாபமும் ஏற்படவில்லை. பாட்டி மூதேவி மூதேவி என்று திட்டிக்கொண்டுதான் இருந்தாள். பாட்டிக்கு அதை எடுக்கவே தயக்கமாக இருந்திருக்கிறது. தலை நிற்பதற்கு முன் அதை அணைத்து ஒருசேர எடுத்து ஸ்பரிசத்தின் சூடு தருவதற்கு யாருக்கும் தெரியவில்லை.

மது அவனைக் கிட்டத்திலே கவனித்திருக்கிறான். இந்தப் பத்து நாட்களில் எப்போதும் அவன் அழவில்லை. சில வேளைகளில் முகத்தைச் சுளித்துக் கொண்டான். சில வேளை சிரித்தாற்போலக்கூட இருந்தது. இதற்கெல்லாம் அர்த்தம் ஏதும் இல்லை.

அவன் தன் நரம்பு இணைப்புக்களைச் சோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது தற்செயலாக ஏற்படும் ஜாடைகளே அவை. அவன் இந்தக் குறுகிய காலத்தில் சில ரிப்ளெக்ஸ் சக்திகளையும் பெற்றிருந்தான். குறிப்பாக வலி அல்லது அசௌகரியம் ஏற்படும் போது, சில வேளைகளில் அவன் உடல் குளிரில் நடுங்கியது. சின்னவன் ஒரு முறை அவனைக் கிள்ளியபோது ஒதுங்கிக் கொண்டான். ஒரு தடவை பாட்டி தெரியாமல் தலை குப்புற வைத்துவிட்டாள். சட்டென்று தானாகத் திரும்பிக்கொண்டு விட்டான், மூச்சு விடுவதற்கு. தலையையோ கைகளையோ ஸ்திரமாக வைத்துக் கொள்ளாமல் அசைத்துக் கொண்டே இருந்தான்.

● கடலை எண்ணெயில் பலகாரம் செய்வதற்கு முன், எண்ணெய் நன்றாகப் புகை வரும்வரை சூடேற்றி, பின் தெளியவைத்து இறுத்துவிட வேண்டும். இப்போது இந்த எண்ணெயில் பலகாரம் செய்து பாருங்கள். பலகாரங்களில் கடலை எண்ணெய் வாடையே வீசாது.

—ஏ. நூர்ஜஹான்



அவனுக்கு அந்த ஆரம்ப நாட்களிலும் பலம் இல்லை என்று சொல்ல முடியாது. அவன் கையில் ஒரு குச்சியைக் கொடுத்தால் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவான். அதே நிலையில் அவனைத் தூக்கினாலும் முப்பது செகண்டுவரை தொங்குவான். அவனால் கண்களைக் கொட்ட முடிந்தது. ஆனால் மது ஒரு தடவை அதன் கண்களுக்கு அருகே விரலைக் கொண்டு போனபோது கண்ணை இமைக்கவில்லை. ஏறக்குறைய கண்ணைத் தொட்டதும்தான் கண்ணைக் கொட்டினான். உடனே அழுதான். கண்களுக்கு இப்போது தெரிந்தது, வெளிச்சத்தை உணர்வது மட்டும்தான்.

தன்னைச் சுற்றியிருக்கும் பொருட்களையும் மனிதர்களையும் அடையாளம் கண்டு கொள்வதற்கு இன்னும் அறுபது நாட்களாகும் அவனுக்கு. தொடுகை தான் அவனுக்கு இப்போது முக்கியமான உணர்ச்சி. தாயின் தொடுகை அதன் கதகதப்பு அதன் இன்பப் பிரவாகம் எதுவும் இல்லாமல் அவன் உள்ளே ஒருவிதமான பிரிவின் ஏக்கம் ஏற்பட்டிருக்குமா? இது எவ்வளவு தூரம் அவன் பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதெல்லாம் இப்போது சொல்ல முடியவில்லை.

''உங்களுக்கும் நல்லது. குழந்தைக்கும் நல்லது. நீங்க எப்பத் திருப்பிக் கேட்டாலும் நான் குடுக்க தயார். இதுக்குன்னு ஆயா போட்டுர்றோம். வெட்நர்ஸ் போட்டுர்றோம். தங்கத்திலே வேணு தொட்டில் போட்டுர்றோம்! குடுங்க!'' என்றார் நமச்சிவாயம்.

அப்பா யோசித்தார். மூன்று மகன்களும் கண்களில் பயத்துடன் அவரையே பார்த்துக்கொண்டிருக்க — அவர்களுக்கு இங்கு நடக்கும் பேரம் தெரியுமா? மதுவுக்குத் தெரிந்திருக்கலாம். இல்லை... மூவருக்கும் தெரியும்போலத்தான் தோன்றுகிறது. மூவருக்கும் என்னவோ தப்பாக நிகழ்கிறது என்று உள்ளுணர்வில் தெரிந்திருக்க வேண்டும்.

''சரி, நான் யோசிச்சுச் சொல்றேங்க. வெள்ளிக் கிழமை வாங்க.''


''என்ன பேரு வெச்சிருக்கீங்க?''

''பேரா?'' என்று சிரித்தார் அப்பா.

''சம்சாரம் கார்ல காத்திருக்குதுங்க... கொணந்து காட்டட்டுமா?''

''சரி.''

நமச்சிவாயம் உற்சாகத்துடன் வெளியே வந்து, ''பாரு! ஒப்புத்துக்குவாங்க போல இருக்கு. வந்து பாக்கிறியா? குழந்தை நல்லா இருக்குது.'' கார் கதவைத் திறந்து மனைவியை வெளியே பிடுங்குவதற்கு ஒத்தாசை செய்தார். பார்வதி அம்மாள் தேர் போல மெல்ல உள்ளே ஆடி ஆடிக்கொண்டு நுழைந்தாள். ''இவங்கதான் என் சம்சாரமுங்க'' என்றார் நகச்சிவாயம். பார்வதி கைகூப்பி வணங்கும்போது வைரம் மின்னியது. நெற்றியில் பெரிசாகக் குங்குமம். பட்டுப் புடவையில் ரெட்டைப் பேட்டு.



உடம்பில் பருமன் ஏற முக்கிய காரணம் இரவுச் சாப்பாடுதான். இரவுச் சாப்பாட்டை லேசாக்கிக்கொள்ளுங்கள். அல்லது விலக்கிக் கொள்ளுங்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருவீர்கள்.

—எஸ். எஸ். மணியம்

புதுசாகத்தங்க வளையல்கள். கல் வளையல்கள். பார்வதியின் முகத்தில் அத்தனை பருமனிருந்தும் ஒரு குழந்தைத் தனம் இருந்தது. சிரிக்கும்போது பல் வரிசையாக இருந்தது. ''உள்ள போய்ப் பாரு. ஆல்ல படுக்க விட்டிருக்காங்க.''

பார்வதி அவனை அணுகி உட்கார்ந்து கொண்டு சற்று நேரம் பாயில் படுத்துக் கொண்டிருப்பவனையே கண் கொட்டாமல் பார்த்தாள். புதியவள் மேலே தொங்கும் எலக்ட்ரிக் பல்பில் கவனமாக இருந்தான். பார்வதி தன் சுண்டு விரலை அவன் வாயருகில் கொண்டு செல்ல அவன் அதைப் பற்றிக் கொண்டு ஜிவ்வென்று உறிஞ்சினான். ''கொஞ்சம் சர்க்கரை கொண்டுவா தம்பி. பாவம் முலைப் பாலுக்கு ஏங்குதுங்க. வாடி கண்ணு'' என்று அதை அப்படியே எடுத்து அள்ளிக் கொண்டு மார்புடன் ஒட்ட வைத்துக்கொண்டாள். ''தம்பி! இந்தப் பாப்பாவை எங்க வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிறலாமா?''

சின்னவன், ''பாப்பா என்னது'' என்று வீறிட்டு அழுதான்.

''பயப்படாதே தம்பி! பாப்பா உன்னதுதான். பாவம் பசிக்குதில்ல இதுக்கு? நல்ல ஆகாரம் தரணுமில்ல? அதுக்குத்தான் இதைக் கொஞ்ச நாளைக்கிக் கூட்டிட்டுப் போயி...''

''பாட்டி தருவா. பால் போட்டுவா! இத பாரு பாலாடை!''

''குண்டு மாமி!'' என்றான் மது.

''மது!'' என்று அதட்டி அவனை முதுகில் அடித்தார்.

' பரவாயில்லேங்க. சின்னப் புள்ளைங்க தானே? சூதுவாது தெரியாத வயசு. நான் குண்டு மாமியா இருந்துட்டுப் போறேன். எங்க சாக்லேட் கொடுத்தீங்களா?''

பட்டை பட்டையாக சாக்லேட் இறைக்கப்பட்டும் மூவரும் தொடவில்லை.

(தொடரும்)



உருவமில்லாத அரக்கனுடன் போர்!

○ ஸ்ரீனிவாசன்



இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் 40 சதவீதம் ஐந்து வயதை அடையுமுன்பே இறந்து போகின்றன. சத்துக் குறைவு காரணமாக ஒவ்வொரு மாதமும் — ஆமாம்! ஒவ்வொரு மாதமும் — லட்சம் குழந்தைகள் இறக்கின்றன. இது தவிர 25 லட்சம் குழந்தைகள் இதே வைட்டமின் சத்துக் குறைவால் கண் பார்வை இழந்து, தம் வாழ்வில் காணாத ஒளியைக் கண்ணால் காணக்கூட இயலாதவர்களாகின்றனர்.

இது என்ன கொடூரம்! இதை இப்படியே அனுமதித்துப் போவதை விட ஒரு கையாலாகாத்தனமும், அசட்டை செய்வதைவிட வேறு ஒரு கொடுமையும் உண்டா? இந்த மாபெரும் மக்கள்சக்தி விரயத்தை நிவர்த்திக்க, எந்த மட்டத்திலும், யாரும் முயற்சி எடுக்கவில்லையா?

எடுத்ததுண்டு.

அவ்வப்போது வெளிநாட்டு, உள் நாட்டு அமைப்புக்களும் தர்ம ஸ்தாபனங்களும், தங்கள் வசதி, தற்காலிகத் திட்டங்கள், மற்ற நிலவரங்களின் சக்திக்கேற்ப முயற்சிகளை, அவர்களின் கண்ணோட்டத்தில் செய்து கொண்டுதான் வருகின்றனர். ஆனால் கிராமப்புறப் பெண்களின் படிப்பறிவு, புரிந்து கொள்ளும் திறமை, குடும்பத்தில் புதிய எதையும் பின்பற்ற அவர்களுக்கு இல்லாத சுதந்திரம் — எல்லாமே இத்திட்டங்களின் முழுப் பயனைக் காண முடியாமல் போய், அதன் விளைவாக அத்திட்டக் குழுவினர், மேலும் உற்சாகமடையாமல், பாதியில் பின்வாங்க வைத்துவிட்டன.

அப்போது இந்தப் பயங்கர அறியாமை வியாதி, சத்துணவுக் குறைவு போன்ற சீரழிவு அரக்கர்களிடமிருந்து விமோசனம் தான் என்ன?

இதோ ஒரு வலுவான சக்தி! நம்பிக்கையும், தன் குறிக்கோளின் தூய்மையுமே பலமாக, தன் வலுவான கைகளால், அவ்வலுறும் இவ்விளம் சிசுக்களைப் பொத்திப் பாதுகாக்க முழுமூச்சோடு புறப்பட்டிருக்கிறது. இதன் ஒரு கையின் அக்ஷயபாத்திரமாக உலக வங்கியும், மற்றைய கையின் உழைப்பாக தமிழ்நாடு சமூகநலத் துறையும் செயலாற்றுகின்றன. இன்னும் பத்தாண்டில், தமிழ்நாட்டில் சிசு மரணம், சத்துக் குறைவால் அங்கஹீனம், பிள்ளைப் பேறில் தாயின் மரணம், போன்ற அவலங்கள் எதுவுமே இல்லாமல் பூண்டோடு ஒழிக்க, தீவிர ஆராய்ச்சியின் விளைவாக முழு செயல்திறன், பொருள் திறன், அவற்றோடு அது பற்றிய முழு அறிவும், தீவிரமும் கொண்டுள்ள ஒரு குழு செயல்பட ஆரம்பிக்கிறது.

இவர்களின் இந்தப் பிரம்மாண்ட திட்டத்தின் செயலாக்க முறை என்ன? அணுகு முறை எப்படி இருக்கும்? குறைபாடுகள் உண்டா? இதில் நம் பங்கு என்ன?

—இதையெல்லாம் அறியும் ஆவலுடன், உலக பாங்க் சத்துணவுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு எம். எஸ். ஸ்ரீனிவாசன் அவர்களை திருமதி உஷாதேவி, திருமதி உஷாசங்கர் ஆகியோருடன், நமது பத்திரிகையில் 'உணவும் ஆரோக்கியமும்' பற்றிக் கட்டுரை எழுதும் குமாரி மாயாஒரு கருத்துப் பரிமாற்றத்தின் பொருட்டுச் சந்தித்தார்.

கேள்வி: இதுவரையில் இந்தக் குறிக்கோளுக்காக எத்தனையோ முயற்சிகள் தனித் தனியே நடந்திருக்கின்றன. நடைபெற்றும் வருகின்றன. இவற்றிலிருந்து இப்போது நீங்கள் தொடங்கும் நடவடிக்கை எந்த விதத்தில் வித்தியாசப்படுகிறது?



○ ஊட்டச் சத்து பெறும் குழந்தைகள்



○ குழந்தைகளின் 'எடை' பார்க்கிறார்கள்

திரு ஸ்ரீனிவாசன்: முதலிய பல வேறுபாடு— வேறெல்லாக் குழுவினரும் இதுவரை இதை ஒரு தர்ம கைங்கரியமாக, 'வயிற்றுக்குச் சத்துணவு' என்கிற விதத்தில் மட்டுமே கையாண்டு வந்துள்ளனர். ஆனால் இந்தப் புரோகிராம் வெறும் பொருளுதவி மட்டுமல்ல. அந்த மக்களுக்கு சுய உதவியைக் கற்றுத் தந்து, அவர்கள் கடமையை அவர்களையே செய்ய வைக்கக் கூடிய ஆக்க பூர்வமான குறிக்கோள். இவர்கள் அறியாமையுடன் போராடி அதை ஒழித்து, அம்மக்களை சுய கவனிப்புக்குத் தயாராக்கி விட்டால், நம் பொறுப்பு நிறைவாகும். பிறகு நம் கையிலிருந்து அவர்கள் அப்பணியைத் தங்கள் தோளுக்கு மாற்றிக் கொண்டு விடுவார்கள் என்கிற நம்பிக்கை இதிலுண்டு.

கேள்வி: இதை எந்த முறையில் ஆரம்பித்து நடத்தவிருக்கிறீர்கள்?

ஸ்ரீனிவாசன்: முதலில் மதுரையில் கொட்டாம்பட்டி முதலிய கிராமங்களைச் சேர்த்து ஆரம்பித்திருக்கிறோம். பிறகு சிறிது சிறிதாக தமிழகம் பூராவும் விரிவு செய்வோம். இது இதுவரை மேற்கொள்ளப்படாத அளவிலானதொரு ராக்ஷஸ முயற்சி. இதன் முதல் தேவை ஊழியர்கள். கட்டுப்பாடு ஊக்கம். இன்னொரு முக்கிய விஷயம் — ஏற்றுக்கொள்பவர்களின் முழு ஒத்துழைப்பு.

கேள்வி: அது உங்களுக்குக் கிடைக்கிறதா?

ஸ்ரீனிவாசன்: ஓ! நிச்சயமாக! எதிர்பார்த்த அளவுக்கு மேலேயே கிராமப்புறப் பெண்களின் ஒத்துழைப்புக் கிடைக்கிறது. ஆவலாக, அவர்களாகவே, தாங்கள் கட்டுப்படக்கூடிய தலைவியைத் தம் நடுவிலிருந்தே எங்களுக்குச் சிபாரிசு செய்கிறார்கள். இத்தலைவி உடன் வட்டத் தலைவிகள் எங்கள் இருவரிடையே ஒரு சிறந்த பாலமாக அமைகிறார்கள். இல்லாவிட்டால் தாங்கள் நேரடியாக அவர்களை அணுகி, புரிந்துகொள்ள வைப்பது கஷ்டம்.

கேள்வி: உங்களது மற்ற அமைப்பு-முறைகள் பற்றி...

ஸ்ரீனிவாசன்: இப்படிச் சொல்லலாம். ஆறு கிராமங்களை ஒரு ப்ளாக், அதற்கு மருத்துவ, சுகாதார, சத்துணவு அலுவலகம். அதற்கு உள்ளீடாக ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சத்துணவு மையம். மேற்பார்வைக்காகவும், அவசர வைத்திய உதவிக்காகவும் பல்வேறு துறையில் பயிற்சி பெற்ற பெண்கள் உள்ளனர். கடைசி பட்சமாக பணி புரிபவர்கள் உள்ளூர்த் தாய்மார்கள். இவர்களுக்கும் சிறந்த பயிற்சி அளிக்கிறோம்.

இங்கு, பிறந்தது முதல் ஐந்து வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளையும் பதிவு செய்து கார்டு தருகிறோம். இந்த முதல் பகுதியில் 22 மில்லியன் குழந்தைகள் ஏற்கப்படுவார்கள். இது முழு தேசத்தில் இல்லை. முழுதாகத் தமிழகம் கூட இல்லை. அதிலும் ஒரு சிறு பகுதிதான். இதுவே இந்தோனேஷியா போன்ற ஒரு தேசத்தின் தேசிய முயற்சியாக இருக்கும். இதிலிருந்தே இந்தத் திட்டத்தின் முழு உருவை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாமே? நாங்கள் முக்கிய கவனம் செலுத்துவது 6 மாதம் முதல் 3 வயதிலான குழந்தைகள்வரை.

கேள்வி: ஏன் அப்படி?

ஸ்ரீனிவாசன்: கிட்டத்தட்ட ஆறு மாதம் வரை குழந்தைகளுக்குத் தாய்ப் பால் கிடைத்து விடுகிறது. தாய்ப் பாலைச் சரியான சமயத்தில் குறைத்து, சரியான சத்துணவு கொடுக்காததாலேயே எல்லா வியாதிகளும்,



"நிறைய பேர் சத்துணவு திட்டம், சமூகநலத் திட்டம், சமூகத்தொண்டு என்றெல்லாம் செய்கிறார்கள் இவைகள் அல்லாமல் புதிதாக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" -மாயா

பதில் :

"எங்களுடைய திட்டம் அடுத்த தலைமுறையையே, ஆரோக்கியமான தொரு சமுதாயமாக மாற்றும் திட்டம். அங்கே சத்துக்குறைவால் பிரசவத்தில் இறக்கும் பெண்ணோ, சத்தில்லாமல் அங்கஹீனம் ஆகும் குழந்தையோ இருக்காது. இதனால் ஒளி படைத்த பாரதத்தையே படைக்க முடியும்.

அதற்கு முக்கியமான தேவை உங்களுடைய ஒத்துழைப்புதான்.

குழந்தைகளைப் பிடிக்கின்றன. ஐந்து வயது வரை அவர்களைத் தீவிரமாகக் கவனித்து விட்டால் பிறகு கஷ்டம் ஒன்றுமில்லை.

கேள்வி: எந்த முறையில் நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்து நடத்துகிறீர்கள்?

ஸ்ரீனிவாசன்: முதலில் கிராமத்தில் உள்ள அத்தனை பெண்களையும் அழைத்து, எங்கள் நோக்கம், நல்லெண்ணத்தைப் பரிமாறிக் கொள்கிறோம். எல்லா ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளையும் பதிவு செய்து, அவர்களின் எடையைச் சரியானபடி (இதற்கென சிறப்பு வாய்ந்த துல்லிய தராசுகளை டான்னிவி நிறுவனம் தயாரித்தளிக்கிறது.) கணிக்கிறோம். இப்போது இவர்களை ரகவாரியாக, மோசமான உடல் நலக் குறைவுள்ள குழந்தைகள், மிக மோசமாக உள்ளவர்கள் என்று பிரிக்கிறோம். இவர்களைத் தினமும் மையத்துக்கு வரவழைக்கிறோம். வராதவர்களுக்கு ஆள் அனுப்பி வரவழைக்கிறோம். இங்கு இரு வகையான உதவி அளிக்கப்படுகிறது.– மருத்துவம், சத்துணவு.

முதலில் எல்லாக் குழந்தைகளையும் வயிற்றுப் பூச்சியை ஒழிக்க மருந்து தருகிறோம். அவரவர்க்குத் தேவையான அளவு ஏ வைட்டமின் தருகிறோம். அவரவர்களுக்குத் தேவையான அளவில் ஒரு புதிய பார்முலா சத்துணவுக் கலவையை (புழுங்கலரிசி, கேழ்வரகு அல்லது கம்பு, எள்ளு, வேர்க்கடலை, வெல்லம், சில வைட்டமின் கலவை ஆகியவற்றை, மாவு ரூபத்தில் சிறு குழந்தைகளுக்குக் கலந்தும், பெரிய குழந்தைகளுக்கு உருண்டையாகவும் பிடித்துத் தருகிறோம். எங்கள் எதிரிலேயே சாப்பிடத் தந்து, விளையாட வைத்து, பிறகே திருப்பி அனுப்புகிறோம்.

கேள்வி: இது அவர்களது ஒரு நாளையத் தேவையா? இதில் என்ன சத்து கிடைக்கும்? எந்த முறையில் இந்தக் கலவை செயல்படுகிறது என்பதைக் கூற முடியுமா?

ஸ்ரீனிவாசன்: முக்கியமான விஷயம் இதில் என்னவென்றால், இந்தச் சத்துணவு அவர்களின் ஒரு நாளைய உணவுக்குப்பதிலாக அல்ல. அவர்கள் சாப்பாட்டில் உள்ள குறையை நிரப்புகிற ஒரு உபாயமே இது. இந்தக் கலவை 40 கிராம் சாப்பிடுகிற குழந்தைக்கு 150 கலோரிச் சத்தும், சுமார் 17 கிராம் அளவு சிறந்த புரதச் சத்தும் கிடைப்பது ஒரு விசேஷம். மேலே குறிப்பிட்டுள்ள பொருள்களைச் சுத்தப்படுத்தி வறுத்து, அரைத்துக் கலக்கப்படுவதே இக்கலவை.

வேர்க்கடலையின் சிவப்பு நிற மேல் தோலில், மிகச் சிறிய குழந்தைகளுக்கு ஒத்துக் கொள்ளாத நச்சுப்பொருள்கள் காணப்படுவதால், கடலையை வறுத்துத் தோலை நீக்கி, சுத்தப்படுத்தித் தருகிறோம்.

கேள்வி: இந்த உணவு எல்லாக் குழந்தைகளுக்கும் ஒத்துக் கொள்கிறதா? அவர்கள் சாப்பிடுகிறார்களா?

ஸ்ரீனிவாசன்: அமோகமாக ஒத்துக் கொள்கிறது. முதலில் சிறிய அளவு கொடுத்து, உடலில் அலர்ஜி இவற்றைப் பரிசோதித்த பிறகே இதைத் தொடர்ந்தோம். முதனிலேயே சிறிய அளவில் ஆரம்பித்து, படிப்படியாக அளவை அதிகமாக்குகிறோம். பிறகு அவர்களுக்கு அதில் விருப்பத்தைச் சோதித்து, பிறகே தகுந்த அளவுகளில் தர ஆரம்பித்தோம்.

ஒரு நாளைய அளவு

குறைந்த எடையுள்ள குழந்தைகளுக்கு

6—18 மாதம்வரை	40 கிராம்
18—36 மாதம்வரை	80 கிராம்

மிகக் குறைந்த எடையுள்ள குழந்தைகளுக்கு

80 கிராம்

160 கிராம்



''குழந்தைகளுக்கும் 'பேதி' யானல் - பட்டினி போட்டு விடுகிருர்களே..?''
-திருமதி உஷா

பதில் :

''இது மிகமிகத் தப்பான விஷயம். நம்முடைய நாட்டில் இந்த மாதிரி டயோரியாவால் இறக்கும் குழந்தைகள்தான் மிகவும் அதிகம். இப்படி இறப்பு நடப்பதற்குக்காரணம் தாய்மார்களின் அறியாமை தான். குழந்தைக்குப் பேதியாகவும், உடம்பிலிருந்து நீர் அதிகமாக வெளியேறுகிறது.

அதை உடனடியாகத் திரும்பத் தரவேண்டும். நன்ருகக் கொதித்து ஆற வைத்த நீரில் சிறிதளவு உப்பும், சர்க்கரையும் போட்டு நிறையக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் எந்தவித ஆபத்தும் வராது..''

கேள்வி: அந்தத் தாய்மார்களை எப்படி வரச் செய்கிறீர்கள்? சத்துணவுக்கு நேரம் ஏதாவது உள்ளதா?

ஸ்ரீனிவாசன்: கிராமத்தில்உள்ள பெண்கள் மாலை வேலை முடிந்து வந்த பிறகே சமையல் செய்து அந்த நாளின் முதல் முழு சாப்பாட்டை சாப்பிடுகிருர்கள். காலை வேலைக்குப் போகுமுன் ஏதோ கூழ், நீராகாரம் போன்ற ஒன்றைக் கொடுத்து, குழந்தைகளை விட்டுப் போகின்றனர். மறுபடி மதியம் அல்லது மாலை வரை குழந்தைகள் ஏதும் சாப்பிடுவதில்லை. ஆகவே இந்த இடைபட்ட நேரத்தில் (சுமார் 10 மணிக்கு) குழந்தைகளை மையத்துக்கு வர வழைக்கிறோம். அங்கேயே விளையாடவும், சிறு அறிவு வளர்ச்சிக்கும் சாதனங்கள் உண்டு. ஒரு பகுதி சத்துணவை அவர்களுக்கு முதலில் அளித்துவிட்டு, மறுபடி இடை வேளைக்குப் பிறகு இன்னெரு பகுதியை அளிக் கிறோம்.

இதனல் பிரமிக்கத் தக்க முன்னேற்றம் அவர்களிடையே தெரிகிறது. எடை, சுறு சுறுப்பு, பொது ஆரோக்கியம், எல்லா வளர்ச் சியுமே 15 தினங்களில் மிகத் தெளிவாகத் தெரிகிறது. 5 வயது வரை எங்கள் கண் காணிப்பில் இருக்கும் குழந்தையிடம், பள்ளி யில்கூடக் குறிப்பிடத் தக்க முன்னேற் றத்தைப் பார்க்கலாம்.

தாய்மார்களிடம் குழந்தைக்கு டயோ ரியா வந்தால் உடனே உப்பும், சர்க்கரையும் சுத்த நீரில் கலந்து அல்லது இளநீர் கொடுக் கச் சொல்கிறோம். இது நகரில் நாம் வாங்கும் எலக்ட்ரோல் மிக்சருக்குச் சமம். டயோ ரியா வரும்போது கட்டாயம் குழந்தைகளைப் பட்டினி போடக் கூடாது என வலியுறுத்து கிறோம். இதுபோன்ற சில உடனடிக் கவ னிப்புகளுடன் அவர்களின் கிராமத்திலேயே எளிதாகக் கிடைக்கக் கூடிய உணவுப்- பொருட்களின் மகிமையை மறுபடியும் எடுத் துக் கூறுகிறோம்.

கர்ப்பமுற்றபெண்களைஉடனடியாகப் பதிவு செய்து மாதா மாதம் கவனிப்புக்கு வர வழைக்கிறோம். நீரிழிவு, காச நோய், ரத்த அழுத்தம் போன்ற எல்லாச் சோதனைகளும் செய்யப்பட்டு தடுப்பும் தரப்படுகிறது.



''ஏழைத் தாய்மார்கள் சத்தான உணவுக்கு எங்கே போவார்கள்?''
- உஷாதேவி

பதில் :

''எங்கேயும் போக வேண்டாம். அவர்களுக்கு அருகாமையிலேயே இருக்கிறது. கிராமங்களில் இள நீர் எளிதாகக் கிடைக்கும். அது குழந்தைகளுக்கு மிகவும் நல்லது.

கேழ்வரகு அதிகச் சத்துள்ள பண்டம். பொட்டுக் கடலை, நிலக்கடலை ஆகியவற்றில் புரோட்டீன் சத்து அதிகம். இவற்றைக் கொண்டு உணவுகளைத் தயா ரித்துக் கொடுங்கள். கீரை... இது கிடைக்காதா கிராமத்தில்?

விலையுயர்ந்த டானிக்குகளும், பழங்களும்தான் சத் துள்ள உணவு என்பதில்லை.''

தேவையானவர்களுக்கு சத்துணவும் தரப்படுகிறது. இது ஒரு நாளைக்கு 640 அளவு கலோரி சத்தை அவர்களுக்கு அதிகமாகத் தருகிறது. இதனால் அவர்கள் நன்ருகத் தேற்றப்படுவதால், பிரசவகால மரணங்களும், சிசு மரணமும் தடுக்கப்படுவதுடன், பிறக்கும் சிசுக்களும் ஆரோக்கியமாக இருக்கின்றன. ஆரோக்கியமாகப் பிறந்த குழந்தையால் எங்களது எதிர்கால வேலை சுலபமாகிறது. இந்தக் கவனிப்பு குழந்தையின் ஆறு மாதம் வரை தொடரும். இதில் வாக்ஸினேஷன், போலியோ ட்ராப்ஸ் எல்லாம் அடங்கும்.

கேள்வி: கிராமப்புறத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன? அதிலும் தமிழகத்தில் உள்ள சில கிராமங்களை... குறிப்பாக....

ஸ்ரீனிவாசன்: நாங்கள் எடுத்த சர்வேயின் படி மிகக் கீழ்த் தரத்தில் உள்ள வட்டாரத்தை முதலில் தேர்ந்தெடுத்தோம். சந்தேகமின்றி அவை கிராமங்களாக அமைந்தன. நகரத்தில் இருப்பவர்களுக்கு உடனடி மருத்துவ வசதி, மருந்துகள், கிடைக்க வழி உண்டு. குக்கிராமங்களில் உடனடி போக்குவரத்து வசதி கூடக்கிடையாது. மருத்துவம் சத்துணவு, சுகாதாரம் பற்றிய அவர்களது அறிவு — ஒப்பிடுகையில் — ஒன்றுமே இல்லை எனலாம். பத்திரிகைகள், மருத்துவம் எல்லாம் அவர்களிடமிருந்து தொலை தூரம் நிற்கின்றன. ரேடியோ ஒன்றுதான் அவர்களுக்குள்ள வெளி உலகத் தொடர்பு எனலாம்.

தமிழகம் எப்படி இதில் சிறப்பிடம் பெற்றதென்ருல்—

இந்தியா பூராவிலும் இந்த ஆரம்ப ஆராய்ச்சிகள் நடந்ததில் தமிழகத்தில் மட்டுமே எதிரொலிப்பும், ஒத்துழைப்பும், பலனும் மிகத் திருப்திகரமாக அமையவே உலக பாங்கு இதை இங்கே மேற்கொள்ள முடிவெடுத்தது.

கேள்வி: அப்போது இந்தியாவிலேயே இப்பெருமை தமிழகத்துக்கு....

ஸ்ரீனிவாசன்: இந்தியாவில் மட்டுமல்ல. ஆசியாவிலேயே தமிழகத்துக்குத்தான் இந்தப் பெருமை. இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் 'மனித வளர்ச்சித் துறையில் முதலீடு' என்பதாம். இது எத்தனை பெரிய முதலீடு என்பது அடுத்த தலைமுறையிலேயே தெரியவரும்.

இங்குதான் நாங்கள் விளம்பரத்தின் உதவியை நாடுகிறேம்.

மாதர் சங்கங்களும், மாதர் பத்திரிகைகளும் (உங்களாலியன்ற விளம்பர உதவிகளை) இம்மாபெரும் தொண்டுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். எங்களுக்கு ஏராளமான தொண்டர்கள் தேவைப்படுவதால், அந்தந்த வட்டாரப் பெண்கள் எங்களுக்குப் பெருமளவில் உதவலாம்.

தொகுப்பு : மாயா

படங்கள் : பி. இ. ரமணன்

திருமண மலர்


திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆண்களும் பெண்களும் **மங்கையர் மலரில்** விளம்பரம் செய்யலாம். கட்டணம் ரூ. 10/- மட்டுமே. இது **மங்கையர் மலர்** என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். விளம்பரத்திற்குப் பதில் அனுப்புபவர் பெட்டி எண்ணை மறக்காமல் குறிப்பிட வேண்டும்.

முகவரி :

'திருமண மலர்'ப் பகுதி
மங்கையர் மலர், கிண்டி, சென்னை-32

கனவு கண்டேன் அவளை!

— நீலஜா



புரியவில்லை அலமேலுவுக்கு.

அனுவின் கையிலிருந்த தாலிச் சரடு வேறு அவளது குழப்பத்தை அதிகமாக்கியது.

அனு அழுது கொண்டிருந்தாள்.

''என்னம்மா அனு? ஏன் அழறே?— சொல்லு.'' தன் பெண்ணிடம் கேட்டாள் அலமேலு.

''அம்மா! என்னை உடனே கொண்டுபோய் அவர் கிட்ட விடு. அவரைப் பார்க்காமல்இனி ஒரு நிமிஷம் கூட என்னாலே இருக்க முடியாது. ம்... கிளம்பும்மா.'' விம்மிக் கொண்டே சொன்னாள் அனு.

வியப்பாக இருந்தது அலமேலுவுக்கு.

நேற்றுவரை, 'அவரை — என் கணவரை நான் பார்க்கவே விரும்பவில்லை. என்றைக்கு என்னிடம் தனிக் குடித்தனம் நடத்த விரும்புகிறாரோ அன்றுதான் அவருடன் செல்வேன்' என்றவள் இப்போது உடனே அவரைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறாளே என்று புரியாமல் விழித்தாள் அலமேலு.

அனுவின் மாமியாருக்கும் இவளுக்கும் ஏதோ மனஸ்தாபம். அடிக்கடி வரும் மாமியார் மருமகள் தகராறுதான். வாய்ச் சண்டை ஒரு நாள் முற்றி விட்டது. தாறுமாறான வார்த்தைகள் இருபுறமும் வீசப் பட்டன.

முடிவு?

'தனிக் குடித்தனம் வைப்பதாக இருந்தால் நான் வரேன். நல்ல வீடு ஒன்றைப் பார்த்துவிட்டுக் கூப்பிடுங்கள். அதுவரை நான் இந்த வீட்டுப் பக்கம் தலையைக் கூட வைத்துப் படுக்க மாட்டேன்' என்று கோபமாகத் தன் கணவனிடம் பேசிவிட்டுக் கிளம்பினாள் அனு பெட்டியுடன்.

தலைவிரி கோலமாக வந்து நின்ற அனுவைக் கண்டதும் கலங்கிவிட்டாள் அலமேலு. எப்போதும் கணவனுடன், தலை நிறையப் பூவுடன் சிரிப்பும் கும்மாளமுமாக இனிப்புக்களுடன் வீட்டினுள் நுழைபவள், புயல் போல அறிவிப்பின்றி வந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது அலமேலுவுக்கு.

அம்மாவைக் கண்டதும் 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டாள். அலமேலுவுக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது.

''என்னம்மா ஆச்சு? உடம்பு ஏதும் சரியில்லையா?'' பரிவுடன் கேட்டாள்.

''இல்லேம்மா. என் மாமியார் ஒரு சரியான ராட்சசி. இனிமேல் ஒரு நிமிஷம்கூட அந்த வீட்டிலே இருக்க முடியாது. அதான் வந்திட்டேன். தனிக் குடித்தனம் வைத்தால் அவருடன் வாழ்வேன். இல்லையென்றால் வாழ்ந்தவரையில் போதும்.'' விரக்தியாகப் பேசினாள் அனு.

அந்த விஷயத்தைப் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று விட்டு விட்டாள் அலமேலு.

விளையாட்டுப் போல ஒரு மாதம் ஓடி விட்டது. அனுவின் கணவன் நான்கு கடிதங்கள் போட்டுவிட்டான். இவள் — அனு— பதிலே போடவில்லை. அழுத்தமாக இருந்து விட்டாள்.

அனு வேலை செய்யும் அலுவலகத்துக்குச் சென்று பார்க்க முயற்சித்திருக்கிறான் அவளது கணவன்.

அனு முகம் கொடுத்துக்கூடப் பேசவில்லை. கண் கலங்கத் திரும்பி விட்டான். போன் செய்திருக்கிறான். இரண்டு முறை அவனது குரல் கேட்டவுடனேயே 'பொட்'டென்று ரிசீவரை வைத்துவிட்டாள். ஒரு முறை சற்று அழுத்தமாகவே சொன்னாள்:

''தனிக் குடித்தனம் வைப்பதாக இருந்தால் வாங்க. இல்லையென்றால் 'அனு என்று ஒருத்தி இருந்தாள். இப்போ செத்துவிட்டாள்' என்று மறந்து விடுங்கள்'' என்று சொல்லிவிட்டாள். அதற்குப் பின் அனுவின் கணவனிடமிருந்து எவ்விதச் செய்தியும் இல்லை. அலமேலுவுக்குப் பெரும் கவலையாகி விட்டது.

பூத்துக் குலுங்க வேண்டியவள் இப்படி தனி மரமாகத் தாய் மரத்தைத் தேடி வந்து விட்டாளே? கலங்கினாள். குழந்தை குட்டியுடன் சந்தோஷமாகக் கணவனுடன் குடித்

தனம் நடத்த வேண்டியவள் தன்னுடன் ஒட்டிக் கொண்டு தனியாக இருக்கிறளே என்று வருந்தினுள் அலமேலு.

''அனு! புகுந்த வீடுன்னு அப்படி இப்படி இருக்கத்தான் செய்யும். நான் என் மாமியார் கிட்டே எவ்வளவு கொடுமைப் பட்டிருக்கிறேன், தெரியுமா? இல்லாததுக்கும், பொல்லாததுக்கும் என் மாமியார் முகத்திலே இடிப்பாங்க. நான் பொறுமையாக இருந்து எல்லாத்தையும் தாங்கிக்கிட்டேன். சூடுகூட உடம்பு பூரா வெச்சாங்க. ஏத்துக்கிட்டேன். அன்னிக்கு நான் அப்படி யெல்லாம் அமைதியா இருந்ததாலேதான் இப்போ எல்லாரும் என்னைப் புகழுறங்க, 'பொறுமைன்னு அலமேலுன்னு' மத்தவங்க சொல்றதை நான் எவ்வளவு தடவை கேட்டிருக்கேன் தெரியுமா? உன் மாமியார் வயசானவங்க. சில விஷயத்தை, புதுமையை விரும்பாதவங்களா இருப்பாங்க. நீதான் அவங்களோட ஒத்துப் போகணும். நல்ல பேர் வாங்கணும். நான் உன் மாமியார் கிட்டே பேசறேன், கிளம்பு அனு'' என்று புத்திமதி சொல்லிப் பார்த்தாள் அலமேலு.

அனு கேட்கவே யில்லை.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் அங்க போக மாட்டேன். தனிக் குடித்தனம் தான் எனக்குத் தேவை. நான் உனக்குப் பாரமாக இருக்கிறேன் போலத் தோன்றினல் சொல்லிவிடு. ஏதாவது 'லேடீஸ் ஹாஸ்டல்' லில் சேர்ந்து விடுகிறேன். எனக்குக் கிடைக்கிற சம்பளம் என் வயிற்றைக் கழுவப் போதும். கஷ்டமாக இருந்தால் சொல்லிவிடு. கிளம்பிடறேன்'' என்று அனு சொல்ல வாயடைத்துப் போனுள் அலமேலு.

விபரீதமாக ஏதாவது அனு செய்து கொண்டு விட்டால்?

மாதங்கள் மூன்று கடந்து விட்டன.

அனுவின் கொள்கைப் பிடிப்பில் தளர்ச்சி காணவில்லை. அலமேலு கலங்கிக் கொண்டிருந்தாள். இதையே ஒரு காரணமாக வைத்துக்கொண்டு மாப்பிள்ளை தன் பெண்ணை விவாகரத்து செய்து விட்டால்? நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

கடைசி முயற்சியைச் செய்து பார்க்கலாம். வெற்றிபெற்றல் நல்லது. இல்லையென்றல் இறைவன் விட்ட வழி என்று தீர்மானித்து விட்டாள்.

''ஏம்மா அனு...மாப்பிள்ளை ஏதாவது...'' என்று சொல்ல வாயெடுத்தவள் பெண்ணின் உக்கிரமான பார்வையின் முன் வார்த்தைகள் முழுமையாக வரவில்லை. அடக்கிக் கொண்டாள் அலமேலு.

அதிசயித்து நின்றுவிட்டாள் அலமேலு.

தன் மகளா இப்படிச் சொல்கிறள்? திருந்தி விட்டாளா? முந்தாநாள் கூட பிடிவாதமாகப் பேசினுளே!

''அம்மா! நான் நேத்து ராத்திரி கண்ட கனவுக்கும், இப்போக் குளித்துக் கொண்டிருக்கும்போது, என்னுடைய தாலி கையுடன் வந்ததற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிற மாதிரி தோணுது. எனக்குப் பயமாக இருக்கு. உடனே கிளம்பு. நான் என் கணவரைப் பார்க்க வேண்டும்'' என்றள் அனு, கண்கள் கலங்கிய நிலையில். தாயின் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''என்ன கனவு கண்டே அனு?'' ஆதரவாகத் தாங்கிக் கொண்டு கேட்டாள் அலமேலு.

''என் கணவர் ஸ்கூட்டர்லே போயிக்கிட்டு இருக்கும்போது ஒரு அக்ஸிடெண்டிலே மாட்டிக் கொண்டு ஆஸ்பத்திரியிலே சுய நினைவு இன்றி படுத்துக் கிடக்கின்ற மாதிரி கனவு. அந்தக் கனவுக்குப் பலன் தான் தாலி அறுந்து போனதுன்னு நினைக்கிறேன்.... ம்.... வாம்மா போகலாம்.'' என்றள்.

''ஒண்ணும் ஆகிவிடாது. பயப்படாதே. கடவுள் மேலே பாரத்தைப் போட்டுவிட்டுக் கிளம்பு. துணிமணிகளை எடுத்து வைத்துக் கொள். நானும் கிளம்பி விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, பூஜை அறைக்குள் நுழைந்தாள் அலமேலு.

அங்கிருந்த மஞ்சள் கயிறு ஒன்றை எடுத்து அனுவின் கையில் தந்து, அறுந்து போனதிலிருந்த பொட்டு, மணிகளை மாற்றி கட்டிக்கொள்ளச் சொன்னுள்.

அனு புதுத் தாலிச் சரட்டைக் கட்டிக் கொண்டு தன் பெட்டியை எடுக்க அறையினுள் நுழைந்தாள்.

அவள் செல்வதைப் பார்த்துவிட்டு அலமேலு புன்னகைத்தாள்.

''நல்ல வேளை! நான் நேற்றே சொல்லவில்லை. சொல்லியிருந்தால் எங்கேயிருந்து இவள் தன் கணவன் வீட்டுக்குச் செல்லப் போகிறள்?

நைந்து போன நிலையில் ஒரு நாலில் தொங்கிக் கொண்டிருந்தது தாலிச் சரடு. கவனித்தும் சொல்ல மறந்து விட்டேன். தாலிக்கயிறு அணிந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. தண்ணீர் பட்டு பட்டு, நைந்து போய் சோப்புத் தேய்த்துக்கொள்ளும்போது கையுடன் வந்து விட்டிருக்கிறது. அதைக் கண்டு பயந்து போயிருக்கிறள் அனு. இரவு கண்ட கனவு வேறு இவளை அதிகம் பயமுறுத்திவிட்டது போலிருக்கிறது. 'காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதை'தான். பெண்கள் தாலிக்குக் கொடுக்கும் மதிப்புத் தான் சில நேரங்களில் பல பெரிய பிரச்னைகளைத் தீர்த்து வைக்கிறது. எப்படியோ நல்லபடியாக அனு கணவனுடன் வாழ்ந்தால் சரி'' என்று மனத்தில் நினைத்துக் கொண்ட அலமேலு, வெறிச்சென்றிருந்த தன் கழுத்தைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள்.

அனு பெட்டியுடன் நின்றிருந்தாள் தன் கணவன் வீடு செல்ல.

குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

நீங்கள் புட்டிப்பால் கொடுக்கும் அவசியம் நேரும்போது கவனமாய் இருங்கள்.

கீழ்க்காணும் 5 முக்கியமான குறிப்புகளைப் பின்பற்றுங்கள்...

1. தொற்று கிருமிகளைத் தவிர்த்திடும் வகையில் பீடிங் பாட்டில், நிப்பிள், மற்றய பாத்திரங்கள் ஆகியவற்றை நன்கு சுத்தம் செய்து நீரிலிட்டுக் கொதிக்கச் செய்யவும். இல்லையெனில் பாலில் எளிதில் கிருமிகள் தோன்றிவிடும்.

2. நீரை பத்து நிமிடம் கொதிக்க வைத்து, உடல் வெப்பத்தைவிட சிறிது அதிகமாகவே ஆற வைத்த பின் பால் பவுடரைக் கலக்கவும்.

3. அதிக நீரை கலந்திடாதீர்கள், அதனால் சத்து குறைந்து விடலாம். டின்னின் மேல் கொடுத்துள்ள பால் புகட்டும் அட்டவணையைப் பின்பற்றவும்.

4. ஒவ்வொரு முறையும் குழந்தைக்குப் புதிதாக பாலைத் தயாரிக்கவும். மீந்துவிட்ட பாலை குழந்தைக்கு கொடுக்காதீர்கள், அதில் கிருமிகள் தோன்றி கெட்டுவிடுகிறது.

5. டின்னின் மேல் கொடுத்துள்ள எல்லா விதிமுறைகளையும் பின் பற்றவும். ஏதாவது சந்தேகம் இருப்பின் டாக்டரிடம் ஆலோசனை கேட்கவும்.

வாங்குவீர் க்ளாக்ஸோ சன்ஷைன்—நம்பகமான குழந்தைப் பாலுணவு


க்ளாக்ஸோ சன்ஷைன் சரிவிகித ரீதியில் சரியான அளவு புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், இரும்புச்சத்து போன்றவற்றைக் கொண்டது. இது சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு, டின்னில் அடைக்கப் படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்றது.



க்ளாக்ஸோ

—தாய்மார்களின் நம்பிக்கைக்குறியது.

CASGLS-1-203 TAM



பொன்னம்மாள், கோவை

என் கணவர் இறந்து ஒரு வருடமாகிறது. என்னுடைய வாழ்க்கை ஜீவனத்துக்கு ஒரே ஒரு வீட்டை மட்டும் விட்டுச் சென்றார். அதை என்னுடைய மகன், நான் ஊரில் இல்லாத சமயம் பார்த்து விற்று விட்டிருக்கிறான். நான் எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன். எனக்கு என்ன வழி என்று கூறுவீர்களா?

வழக்கறிஞர் :

ஒரு தந்தை இறந்துவிட்டால், அவருடைய குழந்தைகளுக்குச் சொத்தில் பங்கிருப்பது போலவே மனைவிக்கும் பங்கு உண்டு. இறந்து போனவர் உயில் எழுதாமல் விட்டிருந்தால் சட்டப்படி இந்தப் பங்கு கட்டாயம் உங்களுக்கு உண்டு. உங்களுடைய மகன் அனுமதி இல்லாமல் இருவருக்கும் பொதுவான வீட்டை விற்றது தவறு. வாங்கியவர்களும் இவற்றை யெல்லாம் பார்க்காமல் வாங்கியிருக்கிறார்கள். அவர்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

நீங்கள் உங்களுடைய அனுமதி இல்லாமல் மகன் வீட்டை விற்றுவிட்டதாகவும், நியாயமாக உங்களுக்குச் சேர வேண்டிய பங்கைத் திருப்பிக் கோரியும் கோர்ட்டில் மகன், வீட்டை வாங்கியவர் இருவர் பேரிலும் வழக்கு தொடுக்கலாம்.

நடராஜன், அம்பத்தூர்

என்னுடைய தகப்பனுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவியான என்னுடைய தாயாருக்கு நான் ஒரே மகன். என்னுடைய தாயாரை நடத்தை கெட்டவள் என்று கூறி விவாகரத்து செய்துவிட்டார் தந்தை. தாயார் இறந்தும் விட்டார்.

இரண்டாவது மனைவிக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள். என்னுடைய தந்தை இருக்கும் சொத்தை எல்லாம் இரண்டாவது மனைவி அவளின் குழந்தைகளின் பேரில் எழுதி வைத்து விட்டார்.

நான் போய் அவரைக் கேட்டால், 'இது எல்லாம் நான் சுயமாகச் சம்பாதித்த சொத்து; எனக்கு இஷ்டமானவர்கள் பேரில் எழுதி வைக்க எனக்கு உரிமை உண்டு' என்று சண்டை போடுகிறார். என் தாயாரின் பேரில் இருக்கும் கோபத்துக்கு என்னைப் பழிவாங்குகிறார்.

நான் தற்போது வேலையும் இல்லாமல் கஷ்டப்படுகிறேன். எனக்கு ஏதாவது நிவாரணம் கூறுங்களேன்.

வழக்கறிஞர் :

ஒரு மகனுக்குத் தன்னுடைய தகப்பனின் சொத்தில் பங்கு உண்டுதான். தாயாரை விவாகரத்து செய்திருந்தாலும், அவள் தவறியவளாக இருந்தாலும் இவையெல்லாம் குழந்தைகளைப் பாதிப்பதில்லை. தாய் தகப்பன் செய்த பாவத்துக்குக் குழந்தைகள் ஆளாகக் கூடாது என்பதுதான் காரணம்.

ஆனால் இவையெல்லாமும் பரம்பரைச் சொத்தாகவோ அல்லது தகப்பனார் சுயார்ஜிதமாகச் சம்பாதித்துவிட்டு உயில் எழுதாமல் இறந்து விட்டிருந்தாலோதான் நடக்கும். ஆனால் உங்கள் விஷயத்தில் தகப்பனார் சுயார்ஜிதமாகச் சம்பாதித்தது 'செட்டில்மெண்டும்' செய்து விட்டார். அவருடைய விருப்பப்படி யார் யாருக்குச் சேர வேண்டும் என்று எழுதிவிட்ட பிறகு இனி உங்கள் பக்கம் வழக்குச் செல்லாது.

மகாலட்சுமி, அடையாறு

எங்கள் வீட்டுக்கு முன் பக்க இடத்தை ஒரு கொல்லப் பட்டறைக்கு விட்டிருக்கிறோம். இப்போது எங்கள் வீட்டில் இரண்டு குழந்தைகள் வேறு ஆகிவிட்டன. சத்தம் தாங்க முடியவில்லை. அதனால் அவர்களைக் காலி செய்யச் சொல்கிறோம். ஆனால், அவர்கள் மறுக்கிறார்கள். அவர்களைக் காலி செய்யச் சொல்ல முடியாது என்று சிலர் சொல்கிறார்கள். உண்மையா?

வழக்கறிஞர் :

உண்மைதான். வியாபாரத்துக்கு விடுவதற்கு முன்பே நீங்கள் யோசித்திருக்க வேண்டும். அவர்கள் தங்களின் வியாபாரத்தை உறுதிப்படுத்தி யிருக்கிறார்கள். இந்தக் கடை இங்கே இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு நீங்கள் அவர்களைக் காலி செய்யச் சொல்ல முடியாது. ஏனென்றால் அதனால் அவர்களின் வியாபாரம் பாதிக்கப்படும்.

நீங்கள் அதே போல வேறு ஏதாவது வியாபாரம் ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்றால் அவர்களைக் காலி செய்யச் சொல்லலாம். மற்றபடி சட்டப்படி நடக்காது.

டி.ஆர்.ரமேஷ், எம்.ஏ, பி.எல்.

இவர்கள்

குமாரி நிர்மலா

விளையாட்டுத் துறையில் ஏதாவது ஒரு விளையாட்டில்தான் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். 'டான் பாஸ்கோ அதலடிக் கிளப்'பில் பயிற்சி பெறும் குமாரி நிர்மலா ஓட்டம், தாரம் தாண்டல், உயரம் தாண்டுதல் ஆகிய மூன்று விளையாட்டிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார். இவ்வாண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதற்கான தங்க மெடலைத் தட்டிச் சென்றுள்ள இவர் எதிர்காலத்தில் ஒலிம்பிக் பந்தயத்திலும் கலந்து கொள்ளும் திறமையைப் பெற்றிருக்கிறார்.





திருமதி ராஜலட்சுமி தன்னுடைய தாத்தா சிலைக்கு மாலை அணிவிக்கிறார்...


என்னுடைய தாத்தா மகா கவி உள்ளூர் பரமேசுவர ஐயர் பெரும் பண்டிதர். அரசாங்கத்தில் பெரும் பதவி வகித்தபொழுதும் குடும்பத்தையும் அருமையாக நிர்வகித்தார். பல கவிதைகளையும், நாடகங்களையும் இயற்றியவர். இவ்வளவுக்கும் இவருக்கு எங்கே நேரம் இருக்கிறது என்று ஆச்சரியப்படுவேன்.

என் கணவர் அமிர்தசரஸில் வேலையாக இருந்தபொழுது அங்கு சுவாமிகள் ஒருவர் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அவரைத் தரிசிக்க நின்றிருந்த பெரும் க்யூவில் மூன்று மணி நேரம் நின்று கடைசியில் நமஸ்கரித்தபோது, என்னைப் பார்த்த அவர், ''மெட்ராஸா?'' என்றார். ''திருவனந்தபுரம்'' என்று அடக்கவொடுக்கமாகப் பதில் சொன்னேன்.

உடனே அவர் ''மகா கவி உள்ளூரைத் தெரியுமா?'' என்றார். எனக்கு ஒரே சந்தோஷம். அவர் என் தாத்தா என்று சொன்னவுடன்சடாரென்று எழுந்துவிட்டார். ''எனக்கு அவர்தான் குரு'' என்று சொல்லி பழம், பூ எல்லாம் கொடுத்து அனுப்பினார்.

அங்கிருந்தவர்கள் எல்லாம் நான்தான் அவருடைய குரு என்று நினைத்துக் கொண்டு என்னை வணங்க ஆரம்பித்துவிட்டார்கள். என்னுடைய வாழ்வின் மறக்க முடியாத நிகழ்ச்சி அது.''

முத்தான முதல் சில மாதங்களுக்கு...



இலவசம்!

∴பாரெக்ஸ்—
குழந்தையின்
முதலாண்டுப் புத்தகம்



16 பக்கங்கள் அடங்கிய அரிய சிறுபுத்தகம், குழந்தைப் பராமரிப்பு பற்றியது இது—பால் புகட்டுதல், பல் முளைத்தல், வளர்ச்சி, அம்மைக்குத்துதல், இன்னும் பலவற்றைப் பற்றியும் விளக்குகிறது.

உங்கள் பிரதிக்கு 50 பைசா தபால் தலையுடன் எழுதுங்கள்:
த.பெ. எண்-19119 (FAR99 ✗)
பம்பாய் 400 025.



டாக்டர்கள் சிபாரிசு செய்வது ∴பாரெக்ஸ், குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு.

CASGLF-24-203

குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் நோய்கள்!-1

தண்ணீரிலிருந்து பிடுங்கி, கட்டாந் தரையில் போட்ட தாமரைப் பூவாகத் துவண்டு, சுருண்டு கிடந்தது குழந்தை. கன்னத்தைக் கையில் ஏந்தியபடி அதன் தாய் அருகில். பக்கத்து வீட்டு ஆயா வந்து விசாரிக்கிறாள்.

''காலேலேருந்து அன்ன ஆகாரமில்லாம நீயும் இப்படி கெடக்கிறியே லட்சுமி, கொழந்தைக்கு என்ன கொடுத்தே நீயும் கொஞ்சம் சாப்டுடி. அப்பத்தானே ஒடம்பு தாங்கும்?''

''எதைக் கொடுத்தாலும் வாயிலெடுக்குதே ஆயா; கஞ்சி கொடுத்தாக்கூட வாயிலெடுக்குது. தண்ணி வேறே வயத்துலே நிக்காமப் பேதி வேறே ஆவுது. அதான் சாயந்திரத்திலேருந்து ஒண்ணுமே குடுக்காம இருந்து பார்க்கலாம்னு. சும்மா வாயிலெடுத்துத் தொண்டை யெல்லாம் புண்ணாகி, ரத்தம் வேறே சிந்த ஆரம்பிச்சுடுச்சு. அதா பயந்துக்கினு...

ஆயா ஆசுவாசப்படுத்துகிறாள்.

''ஆ.....அதா... சரி. வாயில எடுக்க எடுக்க வெச்சு அடெக்கக் கூடாது. ஏற்கனவே பேதியாகி இளைக் கிடக்கிற கொடல்ல சும்மா சும்மா வயத்துக்குக் கொடுத்து இன்னும் சிரமப்படுத்தக் கூடாது. ராப்பொழுது பார்த்துக்க. காலேல மொதக் காரியமா முடிகவுறு கட்டி தோஷத்துக்கு மந்திரிச்சுட்டு வரலாம். என்னமோ ஓடி வெளையாடிக்கிட்டு இருந்த குழந்தை... ரெண்டு நாளா எப்படிச் சுரு, கிடுங்கிப்போயிடுச்சு பாரு.''

''ஆயா, நல்லபடி எழுந்திருக்கட்டும்.... ஆத்தா கோவிலுக்குக் கோழி சுத்தி வுடறேன்.''

லட்சுமியின் குழந்தை மட்டுமல்ல; எந்த ஒரு குழந்தையுமே இரண்டு வயதை அடையுமுன்னால், டயோரியா, மற்றும் வாந்தி, ஜுரம் வயிற்று வலி முதலிய உபத்திரவங்களினால் பலமுறை அவதியுறலாம். ஒரு உயிர் மண்ணில் விழுந்ததுமே அதற்குத் தோன்றும் முதல் உணர்வு பசிதான். அது போல ஒரு குழந்தைக்குத் தோன்றக் கூடிய நோயும் பெரும்பாலும் வயிறு சம்பந்தப்பட்ட, டயோரியா (பேதி) போன்றவையே.

எந்தத் தாயும் இதை ஒரு சாதாரண விஷயமாகக் கருதி, அலட்சியமாக இருந்து விடக் கூடாது. நான்கு ஐந்து தடவைக்கு மேல் ஒரு குழந்தைக்கு பேதியானால் உடனே மருத்துவரை அணுகுங்கள். அதற்கான சிகிச்சையில் உணவு மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

பேதியினாலும், வாந்தி எடுப்பதாலும், குழந்தையின் உடலை விட்டுத் தண்ணீர், உப்புச் சத்துக்கள் பெருமளவு வெளியேறுவதால் குழந்தையின் உடல் மிகவும் பாதிக்கப்படுகிறது. நீருடன் கூடச் சேர்ந்து வெளியேறும் மிக அவசியமான சோடியம், பொட்டாசியம் முதலிய சத்துக்கள் தசைகளில் வலுவின்மையையும், உடலில் அசதியையும் தோற்றுவிக்கின்றன. மேலும் அடிக்கடி நேரிடும் டயோரியா சத்துக் குறைவில் முடிந்து, குழந்தையின் உடல் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். உயிர் போகும் ஆபத்து கூட இதில் உண்டு.

—மாலா



சுகாதாரக் கேடு, அதனுல் விளையும் தொற்று நோய்க் கிருமிகளின் பாதிப்பு தான் டயோரியா, அல்லது சாதாரண பேதியின் முதல் காரணமாக அமைகிறது. மற்றும் குழந்தைக்கு முதல் முதலாக புது உணவுப் பழக்கங்களை ஆரம்பிக்கும்போது அவை அளவுக்கு அதிகமாக ஆவதாலோ, உடற் கூற்றுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாமலோ, பேதி ஏற்படலாம்.

குழந்தைக்குப் பேதி கண்டவுடன் என்ன காரணத்தினுல் என்பதை முதலில் கவனித்து அறிந்து கொள்ளுங்கள். தொற்று நோயினுல் ஏற்படுகிற டயோரியா வந்த குழந்தையை மற்ற குழந்தைகளிடமிருந்து தனிமைப் படுத்தி வைக்க வேண்டியது அவசியம்.

உடனே மருத்துவரிடம் அழைத்துச்செல்ல வசதி அல்லது நேரமில்லாதவர்கள், ''ஒரு வேளை அல்லது ஒரு நாள்தானே—சாதாரணப் பேதியினுல் அப்படி என்ன பெரிய ஆபத்து'' என்று அலட்சியமாய் இருக்கக் கூடாது.

பொதுவாக 'டயோரியா'வை மிக சாதாரணமாகவோ, அல்லது கடுமையானதாகவோ இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒரு நாளைக்கு 5, 6 தடவை பேதியானுல் உணவு கொடுப்பதை நிறுத்தாதீர்கள். அதுவும் தாய்ப்பாலைக் கட்டாயம் நிறுத்தக் கூடாது. மற்ற பாலுணவு அளிப்பவர்கள் எப்போதையும்விடச் சிறிது அதிகம் தண்ணீர் கலந்து கொடுக்கலாம்.

மருந்துக் கடைகளில் Elocrolate Mixture என பாக்கெட்டில் விற்பார்கள். அதை, காய்ச்சி, ஆறிய தண்ணீரில் கலந்து கொடுப்பது, குழந்தையின் உடலில் வாந்தி, பேதியினுல் ஏற்படும் தண்ணீர், உப்பு சத்து இழப்பை ஈடு செய்வதற்காகத்தான். இது முடியாதவர்கள் சுத்தமான, காயச்சிய நீரில் உப்பு, சர்க்கரை இவற்றைச் சம அளவு கலந்து கொடுக்கலாம். இளநீர் கொடுப்பதாலும், இயற்கையான உப்பு, தாதுப் பொருட்கள் ஈடு செய்யப்படுகின்றன.

பெரிய குழந்தைகளுக்கு இச்சமயத்தில் இலகுவில் ஜீரணிக்க முடியாத கடின உணவு பதார்த்தங்களை கொடுப்பதை மட்டும் நிறுத்தினுல் போதும். (நார்ப் பொருள்கள், அதிகமுள்ள தானிய வகைகள், கீரைத்தண்டு, கீரை, மற்றும் கொழுப்புச் சத்து மிகுந்த மாமிச உணவுகள், பொரித்த பலகாரங்கள் முதலியவை)

வடிகட்டிய பழச்சாறு, நொய்க்கஞ்சி, தேன் கலந்த பார்லி வாட்டர், மோர், தயிர், காரட் சூப், மற்ற காய்கறிசூப் (வடிகட்டிய) பாட்டிலில் அடைத்த பானங்கள் இவையெல்லாமே டயோரியா கண்ட குழந்தைகளுக்கு நிர்ப்பயமாகக் கொடுக்கக்கூடிய உணவு வகைகள்தாம்.

மிகக் கடுமையாக, 1 நாளையில் 10, 12 முறையும், அதற்கு மேலும் பேதி கண்ட குழந்தைகள் விஷயத்தில் தாய்மார்கள் மிகக் கவனமாக இருத்தல் அவசியம். மருத்துவ உதவி இந்த விஷயத்தில் உடனடியாக நாடப்பட வேண்டும். தினசரி உணவுப் பழக்கத்தை இந்நிலையில் ஒரு நாள் பொழுதுக்கு விடுங்கள். இந்நிலையில் திரவ உணவு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும். முதலில் Electrol Powder அல்லது அதற்குச் சமமான மேற்கூறிய கலவையைக் காய்ச்சிய நீரில் கலந்து, மற்றும் இளநீர், பார்லி வாட்டர் இவற்றைப் பதினைந்து நிமிஷத்துக்கு ஒரு முறை சிறிய அளவில் கொடுத்துக்கொண்டே இருங்கள். தொடர்ச்சியாக ஏற்படும், வாந்தியினுலும், பேதியினுலும், பயந்து, நாம் கொடுக்கும் திரவ உணவை நிறுத்திவிடக் கூடாது.

இந்த எளிய திரவ உணவை நம்பி, குழந்தைகள் ஒரு நாளைக்கு மேல் இருக்க முடியாது. அதனுல் பழச்சாறு, மோர், தானியக் கஞ்சி, semisolid வகையான மோர்ச் சாதம், பாயசம், பருப்புத் தண்ணீர் இவற்றை மெதுவாகக் கொடுக்க ஆரம்பிக்கலாம்.

பெரிய குழந்தைகள், மற்றும் வீட்டில் உள்ளவர்களுக்கு டயோரியா ஏற்பட்டால்கொடுக்கக்கூடிய உணவு முறைகளுக்கு உங்களுக்கு உதவியாகக் கீழே ஒரு பட்டியல்.

கட்டுரையின் ஆரம்பத்தில் நீங்கள் சந்தித்த பெண்மணிகளைப் போல் பல நம்பிக்கை உடையவர்களிடம் நம் அணுகுமுறை வேருக இருக்க வேண்டும். முடிகயிற்ருேடு இந்தப் பத்திய முறை, மருத்துவ உதவியையும் கையாள அவர்களை நாம் ஊக்குவிப்போமானுல், படிப்படியாக அவர்களே நோயின் மூல காரணத்தை அறிந்து அதன் நிவாரணமும் அவர்களுக்கே புரிந்துவிடும்.

தவிர்க்கப்பட வேண்டியவை:

சமைக்கப்படாத உணவு வகைகள், பதப்படுத்தப் படாத தானிய வகைகள், கீரை, பழங்களின் தோல், கொட்டை முதலியன, மசாலாப் பொருட்கள், எண்ணெய், பொரித்த பலகாரங்கள், மாமிச உணவுகள், ஆம்லெட், தண்ணீர் கலக்காத பால், திகட்டும் இனிப்பு வகைகள் முதலியன.

பயமின்றி உண்ணக்கூடிய பொருள்கள்:

நன்கு வேகவைத்து மசிக்கப்பட்ட தானிய உணவு வகைகள், தேன், பழச் சாறு, (நன்கு வடிகட்டி) பாட்டிலில் அடைத்த தரமான பானங்கள், லைட் டீ, டோஸ்ட் செய்யப்பட்ட ரொட்டி, மோர், வெண்ணெய் எடுக்கப்பட்ட தயிர், இளநீர், காய்கறி சூப், பார்லி வாட்டர் முதலியன.


1

அடுப்படியில் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தாள் கீதா.

ஆச்சு. எல்லாத்துக்கும் தாளித்துக் கொட்டினால் சமையல் முடிந்த மாதிரிதான். அடுப்படியில் ஒரு அடுக்கு தோசை வார்த்து வைத்திருந்தது. எல்லோருக்கும் டிபன் கட்டி வைக்க வேண்டும்.

இன்று ஆபீசுக்கு சீக்கிரம் போக வேண்டும் என்று நினைத்தாள். அதற்கு நேர்மாறாக வழக்கத்தை விடவே நேரமாகி விடும்போல் இருக்கிறதே!

வீட்டில் உள்ள அத்தனை பேரும் ஆபீஸ் போயாக வேண்டும். அவளும் அலாரம் வைத்து ஐந்து மணிக்கேதான் எழுந்துவிடு



அவள் காத்துக் கொண்டிருக்கிறாள்


கோதா பார்த்தசாரதி

கிறாள். பாழாய்ப்போன குழாயில் இன்று தண்ணீர் வராமல் ஏமாற்றி விட்டது.

இரவு முழுவதும் ஆபீஸ் வேலையை வீட்டில் கொண்டு வந்து பார்த்துக் கொண்டிருந்ததில், மிளகாயை அப்பினது போல் கண் எரிகிறது. தலையை வேறு விண்ணென்று தெறிக்கிறது. அதனால் இன்று வெள்ளிக் கிழமையானாலும் எண்ணெய்க் குளியல் வேண்டாம் என்று நினைத்தாள்.

தோளில் துண்டுடன் அவள் குளியலறைக்குக் கிளம்பியபோது பாகீரதி பரிவாக 'இன்னிக்கு வெள்ளிக்கிழமை. ஞாபகம் இல்லையா, கீதா? எண்ணெய் தேய்ச்சுக்கல்லையா?' என்றாள்.

“இல்லேம்மா, இன்னிக்கு ஆபீசுக்கு சீக்கிரம் போகணும். ஏற்கனவே லேட்டாயிடுத்து.



எண்ணெய் கறைபட்ட துணியின் மேலும், கீழும் இரண்டு மை ஒற்றும் தாளை (பிளாட்டிங் பேப்பர்) வைத்து இஸ்திரி போட்டால், தாள் எண்ணெயை உறிஞ்சிவிடும். — பத்மா

ராத்திரி பூரா தூங்கவே யில்லை. ஒரே தலைவலி!”

'என்னமோடிம்மா, சுமங்கலிப்பெண் வெள்ளிக் கிழமையும் அதுவுமா எண்ணெய் தேய்ச்சுக்காம இருப்பாளோ? பொழுது விடிஞ்சு போனா தலைவலிங்கறே? என்னமோ நீதான் அதிசயமாய் வேலைக்குப் போற மாதிரி பேசறியே? கொஞ்சம் சீக்கிரம் எழுந்தா காரியம் ஆகாதா? நானும் என்ன சும்மாவா உட்கார்ந்திருக்கிறேன்? ஊம்... அந்த நாளிலே நாங்களெல்லாம் செய்யாத வேலையா? காஸ் அடுப்பும் குக்கரும், குழாயில் தண்ணியுமா இத்தனை சௌகரியமா இருக்கச்சே உங்களுக்கு விழி பிதுங்கிப் போறது... அந்த நாளிலே வீடு கொள்ளாம நாத்தனாரும் மச்சினரும்.....”

மாமியார் புலம்ப ஆரம்பித்து விட்டாள். சாவி கொடுத்த கிராமபோன் மாதிரி இனி ஓயமாட்டாள். அதைக் கேட்கச் சகிக்காமல் கீதா பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டாள். நாலு நாளாக ஒரே அடை மழை. வெந்நீருக்காக வைத்திருந்த கரியும் சிராய்த் தூளும் பாத்ரூம் ஒழுகுவதால் நனைந்து ஒரே புகை.

கண் சிவந்து திக்குமுக்காடிக் குளித்து விட்டு வந்தாள். புகைச்சலால் தலைவலி இன்னும் அதிகமாகி விட்டது.

அவள் மட்டும் என்ன சும்மாவா இருக்கிறாள்? மாமியார் சமையல் செய்கிறேன் என்று பேருக்கு ஏற்றி இறக்கி வைத்து விடுகிறாள். சுற்றுக் காரியம் முதுகு நிமிர்ந்து போகிறது.

'ஆத்தில் நாலு பொம்மனாட்டி இருக்கச்சே வேலைக்காரிக்கு வேறே எதுக்கு தண்டச் சம்பளம்?' என்று சுலபமாகச் சொல்லிவிட்டாள் மாமியார்.

காலையில் எழுந்து வாசல் தெளித்து பெருக்கிக் கோலம் போட்டு—

இடையில் காப்பியும் போட்டு, பாலையும் காய்ச்சி மாமியார் எழுந்து வந்து அவள் போட்டு வைத்த காப்பியைத் தன் கையால் கலந்து அவளுக்கும் கொடுத்துவிட்டுத் தானும் குடித்துவிட்டு மடியாக சமையல் செய்வாள்.

காய்கறி நறுக்கி, வீடு பெருக்கித் துடைத்து துணிகளைத் தோய்த்துக் குளித்து விட்டு பின் அத்தனை பேரையும் உட்கார வைத்து பரிமாறிய பின், அவசரம் அவசரமாக அவளும் ஒரு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு ஓட வேண்டும்.

காலைச் சமையலும் கூட நாலு நாளாக அவள் தலையில் விழுந்து விட்டது. மழை-குளிர் — இதனால் கை, காலெல்லாம் பிடித்துக் கொண்டு மாமியார் கஷ்டப்படுகிறார். தைலம் தேய்த்து ஊறிக் குளிக்க வேண்டி யிருப்பதால் முன்போல் சீக்கிரம் குளித்து சமைக்க முடியவில்லை.

கீதா மாமியாருக்கு உதவியது போல் அவளுக்கு உதவ யாரும் இல்லை. உஷாவும் ரமாவும் கொஞ்சம் உதவலாம். அவர்கள் எழுந்து வருவதே ஏழு மணிக்குத்தான். காப்பியைச் சுடவைத்துக் கையில் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்.

ஆளுக்கொரு பக்கமாகப் பேப்பரைப் பிரித்து வைத்துக் கொண்டு, அண்ணன் மாருடன் கிரிக்கெட், சினிமா என்று சர்ச்சை செய்துவிட்டு நிதானமாகக் குளித்துப் பின் சாப்பிட வரும்போது ஆச்சா? ஆச்சா? என்று பறப்பார்கள்.

குளித்துவிட்டு வரும்போது பாய்லரில் தண்ணீரைகூடப் பார்த்து நிரப்ப மாட்டார்கள். பின்னால் குளிப்பவர்களுக்கு வேண்டுமே என்று கீதாதான் பார்த்து நிரப்ப வேண்டும்.

அவளும்தான் விரல் ஒடிய டைப் அடித்து விட்டு வருகிறாள். மாலையில் வந்தால் அரிசியும் உளுந்தும் அவளை வரவேற்கும்.

'அத்தனை பேருக்கும் டிபன் கட்ட வேண்டியிருக்கே — இட்லி தோசைன்னுதான் காத்தால அவசரத்துக்குச் சுலபமா இருக்கு. உடம்புக்கும் ஒண்ணும் பண்ணாது!' என்று முகவுரை கொடுப்பாள் மாமியார்.

உஷாவும், ரமாவும் வேலைக்குப் போகிறார்களாம். 'பாவம், உழைச்சுட்டு வரதுகள்— இங்கேதான் கொஞ்சம் ப்ரீயாக இருக்கட்டுமே. நானா புக்காத்துக்குப் போனா முடியுமா?' என்று பரிந்து வருவாள் மாமியார்.

அரைப்பதற்கு முடியவில்லை என்று சொல்ல முடியாது. முகம் சுளித்தால் கூட 'அந்தக் காலத்தில்' என்று ஆரம்பித்துவிடுவாள். கோபித்துக் கொண்டு தானே அரைக்க உட்கார்ந்து விடுவாள். பிறகு கை வலி, கால் குடைச்சல், மண்டையிடி என்று பண்ணுகிற ஆர்ப்பாட்டத்தில் சங்கர் 'கீதா! அம்மாவை ஏன் இந்த வேலையெல்லாம் செய்ய விடுகிறாய்? அவளுக்கு வயசாகவில்லையா?' என்று கத்துவான்.

பெண்களை யாரும் 'ஏன் செய்யவில்லை?' என்று கேட்க மாட்டார்கள். அவள் யாரோ பெற்ற பெண்தானே? உழைப்பது அவள் கடமை. எல்லாரையும் போல மாவுகிரைண்டரில் வாடகைக்கு அரைத்துக் கொள்ளலாம் என்றால் மடி, ஆசாரம் என்று முனகுவாள் மாமியார்.

வீட்டிலேயே ஒரு கிரைண்டரை வாங்கிப் போடலாம் என்றால் 'தலைக்கு மேல் இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு நிற்கும்போது, இரண்டாயிரம் கொடுத்து வாங்க முடியுமா' என்று தடையுத்தரவு போட்டுவிட்டாள்.


'உன் அருமைப் பெண்டாட்டி செய்ய வேண்டாம்பா. எனக்கு என்ன வேலை அதைவிட?' என்று மூக்கைச் சிந்துவாள். கடைசியாக எல்லாம் கீதாவின் தலையில்தான் விழும்.

அவள் வீட்டிலும் மன்னி வேலைக்குப் போகிறாள். அம்மாதான் எழுந்து காலைச் சமையலை செய்வாள். கல்யாணம் ஆவதற்கு முன் அவளும் மன்னியுமாகச் சேர்ந்து தங்களால் முடிந்த உதவியைச் செய்துவிட்டு ஆபீசுக்குப் போவார்கள்.

மன்னி சம்பாதிப்பதிலிருந்து ஒரு பைசாக் கூடத் தொடக் கூடாது என்பது அம்மாவின் உத்தரவு. மன்னியின் பிறந்த வீடு பெரிய குடும்பம். சின்னஞ் சிறு குழந்தைகள். அப்பா இல்லை. கல்யாணம் ஆகுமுன் மன்னியின் சம்பாத்தியத்தில்தான் அந்தக் குடும்பமே நடந்தது.

கல்யாணத்துக்குப் பின் அந்தக் குடும்பம் கஷ்டப்படக் கூடாது என்பது அம்மாவின் எண்ணம். படிக்கும் குழந்தைகள், யாரைப் போய்க் கேட்கும்? என்று அம்மாவே பரிந்து ஒரு தொகையைக் கொடுக்கச் சொல்லுவாள். பாக்கியை மன்னியின் கைச் செலவுக்கு போக சேமித்து வைக்கச் சொல்வாள்.

மன்னி ஆபீசிலிருந்து வந்ததும் அவளைப் போலவே மன்னியையும் உட்கார வைத்து காப்பி டிபன் கொடுத்துப் பரிவுடன் உபசரிப்பாள். வயிற்றுக்குப் போடுவதில் அம்மாவுக்கு நிகர் அவளேதான்.



கண்ணாடியில் ஏற்படும் விரிசலின் வேகம் விநாடிக்கு ஒரு மைல். –மதி

தகுந்த இடைவெளியில் ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கொரு பிள்ளையுமாகப் பெற்றுக் கொண்ட பின் ஆபரேஷன் பண்ணிக்கொண்டு விட்டாள் மன்னி. குழந்தைகளை அம்மா மன்னிக்கும் மேலாகப் பரிவுடன் கவனித்து வந்தாள்.

களைப்புடன் வரும் மன்னியிடம் எந்த வேலையும் சொல்ல மாட்டாள். அண்ணாவையும் மன்னியையும் வாரம் தவறாமல் எங்காவது அனுப்பிவிட்டுச் சந்தோஷத்துடன் பார்த்து மகிழ்ந்து போவாள் அம்மா.

இங்கேயோ பெண் மாதிரி வைச்சிண்டிருக்கேன் என்பதெல்லாம் வாயோடு சரி. மற்றபடி மாட்டுப் பெண் என்றால் கொத்தடிமை என்று எண்ணம்.

ஞாயிற்றுக் கிழமைகளில் கூட ஓய்வு இருக்காது. அவள் புடவைகளை சோப்பில் ஊற வைக்கும்போது 'மன்னி, ப்ளீஸ் இதையும் கொஞ்சம் தோய்த்து அயர்ன் பண்ணி வையேன்' என்று ஒரு போர் துணி விழும். மாட்டேன் என்று சொல்லவா முடியும்?

வேண்டா வெறுப்பாக வேறு வழியில்லாமல் அதையும் செய்வாள். லீவு நாளாகையால் ஸ்பெஷல் டிபன் வேறு. எல்லாம் செய்து முடித்து, காலும் கையும் கெஞ்ச, அப்பாடி என்று உட்காரும்போது, 'எங்காவது வெளியே போகலாமா?' என்பான் சங்கர்.

காலைக் காட்சி, மாட்னி, மாலை ஷோ எதற்கும் போக முடியாது. போனால் வீட்டு வேலையை யார் செய்வது? மாமியாரின் பார்வை சுடும். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.

இரவு செகண்ட்ஷோதான் போகமுடியும். மறுநாள் வீட்டிலும் ஆபீசிலும் தூக்கம் கண்ணைச் சுற்றும்.



2

"என்னடியம்மா மலங்க மலங்க முழிச்சுண்டு நிக்கறே? எல்லாரும் வந்தாச்சு மசமசன்னு நிக்காம தட்டை அலம்பிவையேன்''

மாமியாரின் அதிகாரக் குரல் கேட்கிறது. அவரால் தனியாக இத்தனை பேருக்கும் பரிமாற முடியாது. கூட மாடக் கொஞ்சம் பரிமாறிவிட்டுப் பின் அவளும் உட்கார்ந்து அவசரமாக ஒரு வாய் கொறித்து விட்டு ஓடினாள்.

அப்படியும் அவள் வழக்கமாகச் செல்லும் பஸ் போய்விட்டிருந்தது. இன்னொரு பஸ் வர அரை மணியாகும். அதுவும் 'பீக் அவர்ஸ்' ஆகையால் கூட்டமாக இருக்கும்.

ஒருவரோடு ஒருவர் இடித்துக் கொண்டு அருகில் விடும் மூச்சைச் சகித்துக்கொண்டு இதற்காகவே இந்த நேரத்தில் வரும் இளக



களாவது பரவாயில்லை. டீன் ஏஜ் என்று மன்னித்து விடலாம்.- சில வயதானவர்களின் சீண்டல்களைப் பொறுத்துக் கொண்டு—

இதற்காகவே அவள் முதல் பஸ்ஸுக்குப் போவது வழக்கம். இன்று வேறு வழியில்லை. இதில்தான் போக வேண்டும். மானேஜர் கோபித்துக் கொள்ளத்தான் போகிறார்.

நடப்பது நடக்கட்டும் — நின்று கொண்டிருந்த நேரத்தில் அவள் மனம் கடந்த காலத்தை அசை போட்டது.

இந்த மாதிரி பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் தான் அவள் சங்கரைச் சந்தித்தாள்.

—அன்று ஆபீசிலிருந்து திரும்பும் நேரம். பஸ் ஏன் இன்னும் வரவில்லை? பிரேக் டவுனாக இருக்குமோ?

மழைக் காலம் வேறு. வானம் கறுத்துக் கொண்டு கொட்டிவிடுவேன் என்று பயமுறுத்திக்கொண்டிருந்தது. பஸ் ஸ்டாண்டில் யாரும் இல்லை. அவரவர் மழை வருகிறது என்று ஆட்டோவிலும் டாக்ஸியிலும் பறந்து விட்டனர்.

சற்றுத் தள்ளி சங்கர் நின்று கொண்டிருந்தான். அவனை அடிக்கடி பஸ்ஸில் பார்த்திருக்கிறாள். அவனும் பஸ்ஸுக்குத்தான் நிற்கிறான். பஸ் வருவதாகத் தெரியவில்லை. இருவருமாக ஒரு ஆட்டோவிலோ, டாக்ஸியிலோ போய்விடலாமே?

சங்கர் அவளருகில் வந்தான். ''எக்ஸ்கியூஸ் மி. நானும் உங்க ஆபீசுக்குப் பக்கத்திலேதான் வேலை செய்யறேன். உங்க பஸ்ஸில்தான் வருவேன். இன்னிக்கு என்னமோ திடீர்னு பஸ்ஸிலே ஏதோ கலாட்டாவாம். அதனாலே ஸ்டிரைக்காம்.

டாக்சிக்காரங்களும் ஸ்டிரைக் பண்றதுக்குள்ளே நாம் ஒரு டாக்ஸி பிடித்து போயிடலாம்னு தோணுது. உங்களை இப்படித் தனியே விட்டுட்டுப் போக மனசு கேட்கல்லை. நீங்க தப்பா நினைக்கலேன்னா....''

சங்கரின் கண்ணியமான தோற்றம் அவளிடம் பெரும் மதிப்பை ஏற்படுத்தியது. ஒரு பெண்ணின் தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு வம்பு செய்யாமல், அவள் நிலையைப் புரிந்து கொண்டு பண்புடன் பேசியது பெருமையாகவும், மனதுக்கு இதமாகவும் இருந்தது.

இயல்பாகவே போலியான நாணம் தேவையற்ற பயம் இவையெல்லாம் கீதாவுக்குக் கிடையாது. பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத்தான் வளர்ந்திருந்தாள் அவள்.

''அப்படியே செய்யலாம். நானும் அதையே கேட்க வந்தேன். இதிலென்ன தவறு? உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை'' என்றாள்.

''நோ நோ. அது என் கடமை. கொஞ்சம் இருங்க'' என்று ஒரு டாக்சியை நிறுத்தினான். இருவரும் ஏறிக் கொண்டனர். அவள் வீடு வந்ததும் அவனையும் உள்ளே வந்து காப்பி குடித்துப் போகலாம் என்று அழைத்தாள் கீதா.

அங்கிருந்து அவன் வீடு அருகில்தான் இருந்தது. மழைவிட்டதும் போகலாம் என்று டாக்சியை அனுப்பி விட்டு வந்தான் சங்கர்.

அம்மா, அண்ணா மன்னி எல்லோருக்கும் அவனை அறிமுகப்படுத்தினாள் கீதா. இப்படி வளர்ந்த நட்பு கொஞ்சம் கொஞ்சமாக, ஓய்வு நேரத்தில் தனியாகச் சந்திப்பது, அவன் வரும்வரை பஸ்ஸுக்காகக் காத்திருப்பது என்று வளர்ந்தது.

அவள் மன்னியிடம்தான் முதன் முதலாகத் தன் மனத்தைத் திறந்து காட்டினாள். மன்னிதான் அம்மாவிடமும் அண்ணாவிடமும் அவள் காதலை எடுத்துச் சொன்னாள். அண்ணாவுக்குக் கொஞ்சம் தயக்கம்தான்.

சங்கருக்கு அப்பாஇல்லை. அம்மா மட்டும் இருந்தாள். இன்னும் கல்யாணத்துக்கு இரண்டு தங்கைகள். தம்பிகள்இரண்டு பேரை



தோசைக்கு மாவு ஆட்டி எடுக்கிறீர்கள். உளுந்து அதிகம் இருக்குமோ? இட்டிலியா? தோசையா? எது செய்தால் நன்றாக இருக்கும்? சந்தேகத்தைப் போக்க ஒரு வழி.

ஒரு கிண்ணித் தண்ணீரில் ஒரு உருண்டை அரைத்த மாவைப் போடுங்கள். மாவு உள்ளேசென்று உட்கார்ந்து கொண்டால் தோசை! மேலே மிதந்தால் இட்லி! -நளினி

யும் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும். அவ்வளவாக வசதியில்லாத குடும்பம் வேறு. சுமை யெல்லாம் சங்கரின் தோளில்தான் விழும்.

இருந்தாலும் சங்கரைப் பொறுத்தவரை நல்ல பையன். குடும்பம் நல்ல குடும்பம் தான். மனப் பொருத்தம்தான் முக்கியம் என்று கீதாவின் அம்மா சொன்னதின் பேரில் அண்ணா அவர்களுடன் கலந்து பேசினான்.

வரதட்சிணை, சீர் செனத்தி என்று சங்கரின் அம்மா நீட்டிய லிஸ்டைக் கண்டு திடுக்கிட்டாள் கீதா. சங்கரின் இனிய சுபாவத்துக்கும் இதற்கும் பொருந்தவில்லையே என்று சந்தேகித்தாள். இந்தக் கல்யாணமே வேண்டாம் என்றுகூட நினைத்தாள்.

அம்மாதான், ''அவர்என்ன பண்ணுவார் பாவம்! அம்மாவுக்கு அடங்கிய பிள்ளை. பெரியவான்னு இருந்தாக் கேட்கத்தான் கேட்பா. உனக்கு நல்லபடி ஒரு கல்யாணத்தைச் செய்து வைப்பதும் எங்கள் கடமை தானே? எங்கள் சக்திக்குத் தகுந்தபடி செய்கிறோம். நீ பேசாமல் இரு'' என்று அடக்கி விட்டாள்.

கல்யாணத்துக்கு முன்பாகவே வேலையை விட்டு விடுவதாகஇருந்தாள் கீதா. அவளுடன் வேலை செய்யும் மங்களம், கல்யாணம் செய்து கொண்டு வீட்டு வேலைகளையும் பார்க்க முடியாமல் ஆபீஸ் வேலைகளையும் கவனிக்க முடியாமல் கஷ்டப்படுவதைப் பார்த்திருக்கிறாள்.

அப்படி ஒரு அவஸ்தை தனக்கு நேரக் கூடாது என்று நினைத்தாள் கீதா. குடும்பத் தலைவியாகக் குடும்பத்தை நிர்வகித்தாலே போதும் என்று நினைத்தாள். சங்கரிடம் இதைப் பற்றிச் சொன்னபோது—

''எனக்கும் இன்னும் கடமைகள் நிறைய பாக்கி இருக்கிறது, கீதா. என் அக்கா கல்யாணத்துக்குப் பட்ட கடனே இன்னும் அடையவில்லை. அதனால்தான் அம்மா வரதட்சிணை சீர்னு லிஸ்ட் கொடுக்கச் சொன்னபோதுகூட என்னால் ஒண்ணும் சொல்ல முடியவில்லை.

நீ கொஞ்ச நாளைக்கு வேலைக்குப் போனால்தான் சௌகரியமாக இருக்கும். உனக்கு, அதனால் ஒரு கஷ்டமும் இருக்காது. உஷா ரமா போகலையா? அம்மா வீட்டு வேலையைப் பார்த்துப்பா'' என்று சொல்லி விட்டான்.

சங்கர் தானாகவே கீதாவைப் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று சொல்லி விட்டதால், பாகீரதிக்கு அவள் வேண்டாத மருமகளானாள். 'அவா பெண்ணைக் கொடுக்கிறேன்னு, அத்தனை ஆயிரத்துக்கு செய்யறேன்னு' என்று சொல்லும்போது மனசு கஷ்டப்படும். சங்கரிடம் சொன்னால் 'நான் காதலித்துக் கல்யாணம் பண்ணிண்டதிலே அம்மாவுக்கு வருத்தம். அதை இப்படிக் காட்டறா. வயசானவ. மேலும் எங்களை இத்தனை தூரம் வளர்த்து ஆளாக்கியிருக்கா. அவளை என்ன கேட்க முடியும்.



எனக்காகப் பொறுத்துக்கோ, கீதா. கொஞ்ச நாளானால் தன்னால் சரியாப் போயிடும்' என்பான்.

பெற்ற தாய்க்கு மரியாதை காட்ட வேண்டியதுதான். மனைவியிடமும் சில கடமைகள் இருக்கு என்பதையே இவர் மறந்துவிட்டாரோ?

பார்த்துப் பார்த்து அம்மா வாங்கிக் கொடுத்த பாத்திரங்களை யெல்லாம் அது சொட்டை, இது சொள்ளை என்று சொல்லும் போதெல்லாம் நேருக்கு நேராகக் கேட்டுவிட நாக்குத் துடித்தாலும், பண்பு தடுத்தது. அவள் அப்படியொரு குடும்பத்தில் பிறக்கவில்லையே?

'நான் என்ன தலையிலா கட்டிக் கொண்டு போகப் போறேன்? உனக்குத்தான் நல்லது— சீர், நகை என்பதெல்லாம் ஒரு அவசரத்துக்கு உதவும் என்றுதானே?' என்று சாதுரியமாகப் பேசினான்.

எப்போதாவது போகும்போது, அம்மாவிடம் சொன்னாலும், 'அசடு, சம்சாரம்னா அப்படி இப்படித்தான் இருக்கும். நீ ஒண்டியா வளர்ந்துட்டே. அதனாலே தெரியல்லை. இதை எல்லாம் பெரிசு பண்ணிண்டு மனசை அலட்டிக்காதே. பெரியவா என்ன சொன்னாலும், சின்னவ நீதான் தழைஞ்சி போகணும். அதிலே ஒண்ணும் கௌரவக் குறைச்சல் இல்லை' என்பாள்.

பக்கத்து வீட்டு அம்மாளின் தூபமும் மாமியாரின் கெடுபிடிக்கு ஒரு காரணம். மாமியார் வாயில் எதுவும் நிற்காது. சங்கர் பிடிவாதமாக அவளைத்தான் பண்ணிக்கொள்வேன் என்றதை யெல்லாம் அந்தம்மாளிடம் சொல்லி இருக்கிறாள்.

'பாகி! நீ இனிமேத்தான் ஜாக்கிரதையா இருக்கணும். எப்பக் கல்யாணத்துக்கு முந்தியே உன் பிள்ளையை மயக்கிக் கையில் போட்டுண்டாளோ, இனிமே அவ வெச்சது தான் சட்டமா இருக்கும். எதுக்கும் நீ மாமியார் கெடுபிடியை விட்டுக் கொடுக்காதே. தலை மேலே ஏறி உட்கார்ந்துடுவா. வேலைக்குப் போறா என்ன? வீட்டு வேலையையும் செஞ்சுட்டுப் போகட்டுமே? வயசுப் பெண் தானே?' என்று தூபம் போட்டுக் கொண்டிருந்ததை ஒரு நாள் கேட்க நேர்ந்தது. சீ! இப்படியும் மனிதர்களா?

3

அவள் பஸ் வந்து விட்டது.

ஆடி அசைந்து ஒவ்வொரு ஸ்டாப்பிலும் தன்னிடம் உள்ள கூட்டத்தை உதறி, புதுக் கூட்டத்தைத் திணித்துக் கொண்டு, அவள் கடைசியாக ஆபீசுக்குள் நுழைந்தபோது மணி பத்து அடித்தது.

போர்க் களத்திலிருந்து திரும்பியவள் போல் தலை கலைந்து, புடவை கசங்கி, வியர்க்க விறுவிறுக்க அவள் நுழைந்தபோது பியூன் வந்து ''அம்மா, நீங்க வந்ததும் வரச்சொன்னார் மானேஜர்'' என்றான்.

கீதாவுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. மானேஜர் கண்டிப்பாகத் திட்டப் போகிறார். தவறு அவள் மேல்தான். 'எனக்கு இன்று ஆபீசுக்குச் சீக்கிரம் போகவேண்டும்' என்று சொல்லிவிட்டு வரத் தைரியம் இல்லையே?

''என்ன கீதா? நீயே இப்படிச் செய்தால் நான் என்ன செய்யட்டும்? 'இன்னிக்கு முக்கியமான வேலை இருக்கு, கொஞ்சம் முன்னாலே வா'ன்னு படிச்சுப் படிச்சுச் சொல்லியிருந்தும் லேட்டா வந்தாளென்ன அர்த்தம்?'' என்று வெடித்தார் மானேஜர்.

''சாரி சார்! வீட்டிலே....'' தயங்கினாள் கீதா.

''வீடு குடும்பம்னு நினைக்கிறவங்கல்லாம் வேலைக்கு ஏன் வரணும்? வந்துட்டா ட்யூட்டி பஸ்ட் அண்ட் தென் ரெஸ்ட்''.

கீதாவுக்குக் கண்ணில் நீர் முட்டியது. ஒரு சொல் கேட்காமல் வளர்ந்தவள். வீட்டில் வாங்கும் திட்டுக்கள் போதாதென்று ஆபீஸிலுமா?

''இதோ கூடிய சீக்கிரம் முடிச்சுடறேன் சார்!''

ஒரு வைராக்கியத்துடன் வேலையைப் பார்க்க உட்கார்ந்தாள். கையில் கொண்டு வந்த தோசையைத் தின்னக்கூடப் பொழுதில்லை. ஒரு வழியாக வேலையை முடித்துக் கொண்டு சோர்ந்த முகமும், தளர்ந்த உடலுமாய் உள்ளே நுழைந்த அவளைக் கண்டு மானேஜரின் மனம் இரங்கியது.

'''அதுக்குள்ளே முடிச்சிட்டியா கீதா! ஐ வாஸ் வெரி மச் ஓரீட். இன்று ஈவினிங்குக்குள்ளே இந்த ஃபைல் எம். டி.க்குப் போயாகணும்.' என்று வாங்கிப் பார்த்தார். முகம் மலர்ந்தது.

''காலை என்ன முயன்றும் சீக்கிரம் வர முடியறதில்லே சார்! அதனாலதான் இந்த ஃபைலை வீட்டுக்குக் கொண்டு போய்க் கொஞ்சம் பார்த்தேன்.''

''குட் — யூ ஹாவ் டன் எ ஒண்டர்ஃபுல் ஜாப். கீதா! இப்படியே நேரே எம். டி.க்கு அனுப்பற மாதிரி பர்பெக்டா எல்லாம் பார்த்து அடிச்சிருக்கே! சாரி கீதா! எனக்கு ஒரே டென்ஷன் காலேலே. அதான் கொஞ்சம் கோபமாப் பேசிட்டேன். நீ என்னோட காரில வந்தா, டிரைவின்னில் டிபன் காப்பி சாப்பிட்டுவிட்டு எம். டி. வீட்டுக்குப் போற வழிலே உன்னையும் டிராப் பண்ணிட்டுப் போறேன். ஓ. கே?''

தந்தையைப் போல் வயதான அந்த மனிதர், காலையில் கோபித்துக் கொண்டாலும், இப்போது மனம் நெகிழ்ந்து பேசியது ஆறுதலாக இருந்தது.

''என்ன சார், நீங்க போய் எங்கிட்ட 'சாரி'யெல்லாம் சொல்லிட்டு? நீங்க என் ஃபாதர் மாதிரி. நீங்க சொன்னபடி சீக்கிரம் வராதது என் தப்புத்தானே? உங்களுக்கு எதுக்கு சார் வீண் சிரமம்? நான் பஸ்ஸிலேயே போயிடுவேன்!''

''எனக்கு ஒண்ணும் சிரமம் இல்லே, கீதா. நான் அண்ணாநகர்ப் பக்கம்தானே போறேன்? மேலும் நீ டிபன்கூட சாப்பிடாமல் வேலை செய்தது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது. இந்த வேலை நல்லபடியா முடிஞ்சதுக்கு செலிபிரேட் பண்ண, உனக்கு ட்ரீட் கொடுக்கறதா நெனைச்சுக்கோயேன், கமான் ஹரி அப்'' என்றார். அதற்கு மேல் அவளால் மறுத்துப் பேச முடியவில்லை.

ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது இரண்டு பேர் அவர்களைக் கடந்து போவதுதெரிந்தது. ஒரு ஆணும் பெண்ணும். சங்கர் அல்லவா அது! அந்தப் பெண்? அவ

னுடன் வேலை செய்கிறவர்கள் யாராவது இருக்கும். பார்த்தும் பாராதவன் போல் போய் விட்டானே?

மானேஜருக்கு அறிமுகப்படுத்தி இருக்கலாம். கம்பெனி விஷயமாக இங்கு யாரை யாவது சந்திக்க வந்திருப்பான். அதனால் அவசரமாகப் போய்விட்டான் போல் இருக்கு!

வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டதும் ஒரு மரியாதைக்காக 'உள்ளே ஒரு நிமிஷம் வந்துட்டுப் போகலாமே சார்!' என்று உபசரித்தாள் சீதா.

''ஓ நோ... இந்த ஃபைலுக்காக எம்.டி. காத்திட்டிருப்பார். இன்னொருநாள் வரேன்'' என்று புறப்பட்டார்.

அன்று அதிசயமாக உமா, ரமா இருவருமே சீக்கிரம் வந்து விட்டிருந்தார்கள். இவளைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். மாமியாரும் இவளைக் கண்டதும் ஊஞ்சலில் சுருண்டு கொண்டாள்.

உள்ளே போய் காப்பியைச் சுடவைத்துக் குடித்துவிட்டு, என்ன சமையல் செய்யலாம் என்று கேட்கக் கூடத்துப் பக்கம் வந்தாள்.

''அவளுக்கென்னம்மா — நல்ல முகராசி—னும்முன்னு மானேஜர் காரிலே கொண்டு விட்டுட்டுப் போறார். எங்க மாதிரி பஸ்ஸில் அவதிப்பட்டுண்டு வராளுமா?'' — உஷா.

''எதுக்கும் லக் வேணும்டி— அதுவும் மன்னியைக் கண்டாளெல்லாரும் சலாம் போடறா'' இது ரமா.

சீதாவுக்குச் சுருக்கென்றது. 'என்ன அநாகரிகமான பேச்சு? சிறு பெண்கள் பேசும் பேச்சா இது? வீட்டுக்கு வந்திருக்கும் மன்னியை, தாய்க்குச் சமமானவளை, வாய்க்கு வந்தபடி பேசுவதா?

அறுபது வயதை முழுங்கிவிட்ட பாகீரதியும் இதைக் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறாள்?

அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ''என்ன ரமா இது? என்ன பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறியா? எங்க மானேஜர் வயசானவர். எங்கப்பா மாதிரி. இன்னிக்கு அதிக வேலை இருந்ததாலும், அவரும் இந்தப் பக்கம் வந்ததாலும் காரில் கூட வந்தேன்'' என்பதற்குள் கண்ணில் நீர் தளும்பி விட்டது.

''நீலிக்கு நெத்திலே கண்ணும்பா. இப்ப என்ன சொல்லிட்டான்னு அழறே?'' என்று எரிந்து விழுந்தாள் பாகீரதி.

''இல்லேம்மா, அத்தனை வயசானவரைப் போய்...''

''வயசானா என்ன? வயசான பிறகுதானே சிலபேருக்கு வாலிபமே திரும்பறது?'' விஷமமாகப் பேசினாள் உஷா.

''அவா சொல்றாளேன்னு மாத்திரம் ரோஷம் பிச்சுண்டு வரதே! நாங்க எத்தனையோ வருஷமா இந்தத் தெருவில் மானமா மரியாதையா குடித்தனம் பண்ணிண்டிருந்தோம். நீ இப்ப கண்டவாளோடு காரில் வந்து இறங்கறே. காரித் துப்பமாட்டாளோ?'' என்றாள் மாமியார்.

சாட்டி பாய்ந்தது போல் வலித்தது சீதாவுக்கு.

''வேலைக்குப் போறத் துணிச்சல் எல்லாருக்குமே வந்துடறதா என்ன? அண்ணாவை இப்படித்தானே அங்கே இங்கே பார்த்துக் கல்யாணம் பண்ணிண்டா?''

ரமா அலட்சியமாகக் கூறுவது அவள் காதில் நாராசமாய் விழுந்தது.

அதற்கு மேலும் அங்கு நிற்கப் பிடிக்காமல் தலைவிதியை நொந்தபடி அழுதுகொண்டே சமையல் செய்தாள். மனம் தாங்காமல் முரண்டு பிடித்தது. அழுது அழுது முகம் ஊதிப் போயிற்று.

வெந்தயத்தைத் தண்ணீர் விட்டு அரைத்து, நெருப்புப் பட்ட புண், கொதிக்கும் தண்ணீர் பட்ட புண், சூடான எண்ணெய் பட்ட புண் மேல் பூச எரிச்சல் தணிந்து ஆறும். —பத்மா



சங்கர் வந்த பின்னும் கூட அவளாக அவன் எதிரில் போவதைத் தவிர்த்தாள்—முகத்தைப் பார்த்து 'என்ன ஏது' என்று கேட்டால் குமுறி வரும் அழுகையை அடக்க முடியாது போலிருந்தது.

கல்யாணமான புதிதில் சொல் பொறுக்காமல் சில விஷயங்களைச் சங்கரிடம் சொன்னதுண்டு. அவனும் தன் இயலாமையைச் சொல்லி வருத்தப்படுவதுண்டு. இப்போதெல்லாம் அவனிடம் எதையும் சொல்வதில்லை. வீணாக அவன் மனதைக் கஷ்டப்படுத்துவதைத் தவிர என்ன லாபம்?

ஆனால் இன்று எப்படியும் மனதைத் திறந்து கொட்டிவிட வேண்டும். அவனை

விடச் - சிறியவர்கள் என்ன கேள்வி கேட்டு விட்டார்கள்?

யந்திரம் போல் எல்லோருக்கும் பரிமாறி விட்டு பாத்திரங்களை ஒழித்துப் போட்டு, சமையலறையைச் சுத்தம் பண்ணிவிட்டுக் கதவை மூடிக் கொண்டு வந்தாள்.

''ஏண்டி! நீ சாப்பிடவில்லையா?'' என்றாள் பாரதி ஊஞ்சல் சிம்மாசனத்தில் இருந்தபடி.

''பசிக்கலே — ஒரே தலைவலி!'' என்றாள் மெதுவாக.

''அவளுக்கு எப்படிப் பசிக்கும்? அதான் உட்லாண்ட்ஸில் ஒரு பிடி பிடித்துவிட்டு வந்திருக்காளே!'' என்றான் அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்த சங்கர்.

'சங்கரா இப்படிப் பேசினான்? அவன் குரலில் இருந்தது கேலியா குரோதமா?'

புரிந்துகொள்ள முடியாத தவிப்புடன் படுக்கப் போனாள். வெகு நேரம் கழித்து சங்கர் வந்தபோது, துயரத்தை அடக்க முடியாமல் குமுறிவிட்டாள். அவன் கொஞ்ச நேரம் ஒன்றுமே பேசவில்லை.

''அம்மாவுக்கு வயசாயிடுச்சு. இதையெல்லாம் அவளாலே புரிஞ்சுக்க முடியாது. எனக்கே திமர்னு உன்னை ஹோட்டலில் பார்த்ததும் என்னமோ போல் இருந்தது. இவர்கள் சுபாவம் தெரிந்து நீ காரில் வருவதைத் தவிர்த்திருக்கலாம் இல்லையா?'' என்றான்.

அவன் மனத்தையும் விஷமாக்கி விட்டார்களா? வயதானவள் மட்டுமா பேசினாள்? உஷாவும் ரமாவும்....

''நீங்கள் — நீங்கள் — நீங்களுமா?'' என்று விம்மியபடி கேட்டாள்.

''ஏன்? நானும் மனிதன்தானே? எத்தனை நாள் நான் வெளியே போகலாம்னு ஆசையாகக் கூப்பிட்டிருக்கேன்? டயர்டா இருக்கு. வீட்டிலே வேலை இருக்குன்னு தட்டிக் கழிப்பியே — இன்னிக்கு மட்டும்...'' என்றபடி திரும்பிப் படுத்துக் கொண்டான்.

உண்மையிலேயே தன்னுடன் அந்த மாதிரி இடங்களுக்குவரவில்லையே என்ற தாபத்தினால் தான் இப்படிப் பேசுகிறானா? அல்லது?...

சீதாவுக்கு வாய் விட்டு அழவேண்டும் போல இருந்தது. அவளும் பெண்தானே? அவளுக்கு மட்டும் அவனுடன் வெளியில் போக வேண்டும் என்ற ஆசை இல்லையா?

வீட்டில் காத்திருக்கும் வேலையும், வெளியே கிளம்பினால் திரும்பி வந்த பிறகு கேட்டுக் கொள்ள வேண்டிய சுடு சொற்களும், ஏன் போனோம்! என்று வருத்தப்படும்படி அந்த மாலை நேரத்தில் அனுபவித்த மகிழ்ச்சியெல்லாம் கானல் நீராகிவிடும். இதனாலேயே அவனுடன் வெளியே போக முடிவதில்லை.

இதை ஏன் சங்கரன் புரிந்துகொள்ளவில்லை? மேலதிகாரியின் பேச்சை மறுக்க முடியாமல் போனது தவறா? அதற்காக அவனையே சந்தேகப்பட்டு இவனும் அப்படித்தான் எண்ணுகிறானா?

இவன்கூட யாரோ ஒரு பெண்ணுடன் தான் அங்கு வந்திருந்தான். அவள் மனத்தில் தவறாக ஒன்றும் தோன்றவில்லையே? இவர்களுக்கு மட்டும் ஏன் இப்படித் தோன்ற வேண்டும்?

மற்றவர்கள் கோபித்துக் கொண்டால், கணவனிடம் முறையிடலாம். கணவனே கோபித்துக் கொண்டால்?

4

கணேஷ்—சீதாவின் மைத்துனன் — என்ஜினீரிங் படித்து முடித்து விட்டான். நல்ல கம்பெனியில் வேலையும் கிடைத்தது.

ஒரு நாள் சீதா ஆபீஸிலிருந்து வீடு திரும்பியபோது, வாசலில் ஒரு பெரிய கார் நின்றது. யார் வந்திருப்பார்கள்?

கூடத்தில் வேற்று மனிதர்களைப் பார்த்ததும் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு உள்ளே போன சீதாவை, ''சீதா, இவாள்ளாம் வந்திருக்கா, பாரு!'' என்று அன்பொழுக அழைத்தாள் பாரதி. சீதா புன்சிரிப்புடன் வணக்கம் தெரிவித்தாள்.

வந்திருப்பவர் கணேஷின் கம்பெனி முதலாளியாம். கணேஷுக்கு அவர் பெண்ணைக் கொடுக்க எண்ணிக் கேட்க வந்திருக்கிறாராம்.

ஸ்வீட் காரம் காப்பி கொடுத்து அனைவரையும் உபசரித்தாள் சீதா. சங்கர் வரும் வரை அவர்களால் காத்திருக்க முடியவில்லை. சங்கர் வந்த பின் கலந்து பேசி முடிவைத் தெரிவிக்கும்படி சொல்லிவிட்டுப்போனார்கள்.

ஓவர் டைம் செய்து அலுத்துக் களைத்து வந்தான் சங்கர். இரவு எல்லோரும் ஒன்றாகக் கூடினார்கள்.

''அவர்கள் மிகப் பணக்காரர்கள் என்று சொல்கிறாய். அவர்கள் நம்மிடம் ஏன் சம்பந்தம் செய்துகொள்ள வரவேண்டும்?'' என்றான் சங்கர்.



தெரியுமா?

மனித நகம், பன்னிரெண்டு மாதங்களில் இரண்டு அங்குலங்களிலிருநது மூன்று அங்குலங்கள் வரை வளர்கின்றன. இதே வேகத்தில்தான் கண்டங்களும் (Continents) நகர்கின்றன.

-மதி

''என்மேல் அவர்களுக்கு அவ்வளவு மதிப்பு. நான் மேலே படிக்க அமெரிக்காவுக்குக்கூட அனுப்புவதாகச் சொல்கிறார். பெண்ணையும் கொடுத்து இவ்வளவு வசதியும் செய்துகொடுத்தால் கசக்கிறதா? துருவித் துருவிப் பார்க்கிறீர்களே?'' என்றான் கணேஷ் எடுத்த எடுப்பிலேயே.

''அப்படியே இருக்கட்டும் கணேஷ். உன் கல்யாணத்துக்கு இவ்வளவு அவசரப்பட வேண்டாம் என்று நினைக்கிறேன்...'' என்று தயங்கினான் சங்கர்.

''எனக்கு இத்தனை நல்ல சம்பந்தம் கிடைக்கிறது அண்ணாவுக்குப் பிடிக்கவில்லை. ஏதோ சாக்குச் சொல்கிறான். இந்த வயதில் இவன் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கலையா? தனக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒன்றா? நீயா பண்ணி வைத்தால் மன்னி மாதிரி சாதாரண குடும்பத்துப் பெண்தான் பார்ப்பாய். நீதான் படிக்கலே. நான் படிச்சு நல்லா இருக்கிறது ஏன் உனக்குப்பிடிக்கலே?'' என்று மறைமுகமாக ஆரம்பித்து நேரிடையாகக் குற்றம் சாட்டினான்.

'உன் இஷ்டம்' என்று எழுந்து போய் விட்டான் சங்கர். தம்பிகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்று தான் அதிகம் படிக்காமல் கடன் வாங்கி அவர்களைப் படிக்க வைத்ததற்கு கணேஷ் எவ்வளவு திமிராகப் பேசி விட்டான்!

தம்பி சம்பாதித்துக் குடும்பக் கடனில் பங்கு கொள்வான் — தன் தோளில் ஏற்றி வைக்கப்பட்ட பாரத்தைக் கொஞ்சம் குறைப்பான் என்று அவன் எதிர்பார்த்தது, அவன் தவறா?

எல்லாரும் போய்ப் பெண் பார்த்துவிட்டு வந்தார்கள். பெண் நன்றாகவே இருந்தாள். பெரிய தொழில் அதிபரின் ஒரே பெண். கல்யாண கோலத்துக்குக் கேட்கவா வேண்டும்?

ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில்தான் கல்யாணம். பந்தல் அலங்காரமே கண்ணைப் பறித்தது. மூன்று வேளையும் கச்சேரி— மெல்லிசை. எத்தனை பெரிய மனிதர்கள்! வந்து நிற்கும் கார்களைக் கண்டு பாகீரதிக்குப் பெருமை பிடிபடவில்லை.

கல்யாணத்துக்காகவே ஸ்பெஷலாக வாங்கின வைர ஊசிப் புடவையை இழுத்து இழுத்து விட்டுக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் போய் வந்தாள். பெண்ணுக்குத் தந்த சீர் வரிசைகளை ஓர் அறையில் அலங்காரமாக ஷோ மாதிரி வைத்திருந்தார்கள்.

உறவினர்களையும் தெரிந்தவர்களையும் கூப்பிட்டுக் காட்டி அலுக்கவில்லை அம்மாளுக்கு. ஆசையுடன் சீர்வரிசைகளைப் பாக் செய்து அந்த வீட்டுக்கு எடுத்துப் போக வேண்டும் என்றபோது, கணேஷ் சிரித்தான்.

''இதையெல்லாம் நம் வீட்டில் வைக்க இடம் ஏது? எங்கே இருந்தால் என்ன? இங்கே இன்னும் பத்திரமாக இருக்கும். யார் கொண்டு போகிறார்கள்?'' என்று அடக்கி விட்டான்.

கொஞ்சம் மனத்தாங்கல்தான் பாகீரதிக்கு. இருந்தாலும் வாயைத் திறக்க முடியவில்லை. கிரகப் பிரவேசம் என்று அந்த வீட்டுக்கு அழைத்துப் போனார்கள். பத்து நிமிஷத்தில் கிளம்பி விட்டார்கள்.

சரியாக ஒரு மாதம் கழித்து இருவருமாக அமெரிக்கா போக, சொல்லிக் கொண்டு போக வந்தார்கள். அத்தனைபேரையும் மீனம்பாக்கத்துக்கு டாக்சியில் அழைத்துப்போய் டிக்கட் வாங்கி, டாட்டா காட்டிவிட்டு வந்த செலவெல்லாம் சீதாவுடையது.

'போய்ப் பணம் அனுப்புகிறேன், மாதா மாதம்' என்று சொல்லிப் போனான். கொஞ்ச நாள் கடிதம் வந்து கொண்டிருந்தது. பிறகு அதுவும் நின்று விட்டது. சங்கருக்கு இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரியும். அதனால் அவன் கவலைப்படவில்லை. பாகீரதிதான் புலம்பிக் கொண்டிருந்தாள்.

இன்னொரு பிள்ளைக்கு — ஸ்வாமி என்று அவன் பெயர் — வரன் தேட ஆரம்பித்தாள். அவன் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான். ஒரு ஏழைக் குடும்பத்துப் பெண்ணை காதலிப்பதாகவும், அவளைத்தான் செய்து கொள்வேன் என்றும் சொல்லி விட்டான்.

பாகீரதிக்கு இடி விழுந்தாற் போலாயிற்று. சங்கர்தான் அவளைத் தேற்றி, 'கல்யாணங்

றது ஆயிரம் காலத்துப் பயிர் — மனதுக்குப் பிடிச்சவளைக் கல்யாணம் பண்ணின்டால்தான் அவன் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்' என்று சொல்லிக் கல்யாணம் செய்து வைத்தான்.

எளிமையாக ஒரு கோவிலில் கல்யாணம் நடந்தது.

ராஜீ வீட்டுக்கு வந்தாள். ஏழை வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் அகம்பாவம் நிறைய இருந்தது. அவள் இஷ்டப்படிதான் எழுந்து வருவாள். பொறுப்பாக வீட்டு வேலைகளைக் கவனிப்பதில்லை. நினைத்தபோது பிறந்த வீட்டுக்குப் போய்விடுவாள்.

''ஏன் மன்னி, பயந்து பயந்து எல்லா வேலைகளையும் நீங்களே செய்கிறீர்கள்? அவர்களும்தான் கொஞ்சம் செய்யட்டுமே!'' என்று சீதாவுக்கே அட்வைஸ் பண்ணினாள். ஸ்வாமி சம்பாதிப்பதெல்லாம் அவளுக்குப் புடவைக்கும் சினிமாவுக்கும்தான் சரியாக இருந்தது.

ஸ்வாமியால் குடும்பத்துக்கென்று பைசா கூடக் கொடுக்க முடிவதில்லை.

எல்லாவற்றையும் விடப் பெரிய ஆச்சரியம் மாமியாரும் நாத்தனார்களும் அவளுக்குப் பதில் சொல்லப் பயந்து பணிந்து போனது தான். அவள் இல்லாதபோதுதான் முணு முணுப்பு எல்லாம். ஓடுபவர்களைத் துரத்து வதுதானே எளிது?

கடைசியாக ஒரு நாள் தனிக் குடித்தனம் என்று கிளம்பியபோது சீதா ஆச்சரியப்படவில்லை. ராஜீ இத்தனை நாள் இந்த வீட்டில் இருந்ததே அதிகம். வழக்கம் போல் இப்போதும் பாகீரதிதான் புலம்பினாள்.

கொஞ்ச நாளில் அதுவும் ஓய்ந்தது.

5

ஒரு நாள் மாலையில் பஸ்ஸுக்காகக் காத்து நின்றபோது ஸ்கூட்டரில் ஒரு வாலிபனுடன் ரமா போவதைப் பார்த்தாள். அவளுக்குத் 'திக்'கென்றது. எப்படிக் கேட்பது? தன்னை அன்று அவர்கள் எப்படிப் பேசினாலும் தான் எப்படி மாமியாரிடம் சொல்ல முடியும்? அல்லது ரமாவைத்தான் நேரில் கேட்க முடியுமா?

வேறு வழியில்லாமல் சங்கரிடம் சொன்னாள். சங்கர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

'அவர்களைச் சொல்லிக் குற்றம் இல்லை. அவர்களுக்கும் வயதாகி விட்டது. இன்னும் கல்யாணம் பண்ணாமல் வைத்து இருப்பது என் தவறு. நான் என்ன செய்வேன்? கணேஷும் ஸ்வாமியும் சம்பாதித்துக் குடும்பத்துக்குக் கொஞ்சம் உதவியாக இருப்பார்களென்று நினைத்தேன். அது பகற் கனவாக முடிந்து விட்டது. இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய கடன் கரைந்து வருகிறது. இந்த நிலையில் நான் எப்படி இரண்டு பேர்களுக்கும் கல்யாணம் செய்து வைக்கப் போகிறேன்... உஷாவுக்குக்கூட அம்மாவின் சிநேகிதியின் பையன் ஒருவன் வந்திருக்கிறது. அவர்களுக்கு வரதட்சிணை என்று எதுவும் வேண்டாமாம். ஆனால் வைரத் தோடு போட வேண்டுமாம். எல்லாத்துக்கும் பணம்... பணம் வேணுமே சீதா!''

சங்கரன் மனம் உடைந்து சிறு குழந்தையைப் போல் அழுதான்.

''இதற்கா இப்படி மனம் தளர்ந்து போய் விட்டீர்கள்? உஷாவுக்கு என் தோட்டைப் போட்டுவிடலாம். ரமாவுடன் சுற்றும் பையன் நல்லவனா எப்படி என்று விசாரியுங்கள். அவளுக்கு இஷ்டம் என்றால் முடித்து விடலாம்.

''ஆபீசில் கொஞ்சம் லோன் வாங்குகிறேன் அண்ணாவிடம் கொஞ்சம் வாங்கிக் கொள்ளலாம். என் வெள்ளி, பித்தளைப் பாத்திரங்களைச் சமமாகப் பிரித்து இரண்டு பேருக்குமாகக் கொடுத்து விடலாம்...'' என்று சீதா அவனைத் தேற்றினாள்.

''என்ன சொல்கிறாய் சீதா? உன் வீட்டில் செய்து கொடுத்ததையா?'' என்று தினறினான் சங்கர்.

''ஏன் உன்னுது, என்னுதுன்னு பிரித்துப் பேசுகிறீர்கள்? நானே உங்களுக்குச் சொந்தம் தானே! ம்...ம்... யோசிக்காமல் மளமளவென்று ஏற்பாடு செய்யுங்கள். இதற்கு மேல் வயது வந்த பெண்களை வீட்டில் வைத்திருக்க முடியாது.''

''சீதா, உன்னை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. இந்தக் குடும்பத்துக்காக நீ ஒரு மெழுகுவர்த்தியாகக் கரைஞ்சிண்டு வரே! நான் ரொம்பக் கொடுத்து வெச்சவன்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறி அவளை அணைத்துக் கொண்டான்.

சீதா சொன்னபடி லோன் வாங்கி, இருக்கிற பாத்திரம் பண்டங்களைப் போட்டு இட்டு நிரப்பி, சீதாவின் நகைகளையும் போட்டு

இருவரையும் கல்யாணம் செய்து அனுப்பி யாயிற்று.

கல்யாணத்துடன் விடுகிறதா? பண்டிகை, பருவம் என்று துரத்திக் கொண்டு வரும் செலவுகள். எல்லாவற்றுக்கும் ஸீதா தான் ஈடு கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அன்று உடம்பு சரியில்லை என்று லீவு போட்டிருந்தாள் ஸீதா.

'போஸ்ட்' என்ற குரல் கேட்டதும் ஓடிப் போய் வாங்கி வந்தாள் பாகீரதி.

உஷா, ரமா இருவருக்கும் பிக்கு பிடுங்கல் ஏதும் இல்லை. பம்பாயில் தனிக் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களிட மிருந்துதான் கடிதம் வந்திருக்க வேண்டும்.

''ஸீதா, உஷாவிடமிருந்து லெட்டர் வந்திருக்கு. அங்கே என்ன பண்றே?'' என்று கேட்டபடி வந்தவள் ஸீதா வாந்தி எடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

''என்னடி ஸீதா? என்ன பண்றது?'' என்று ஓடி அவளைப் பிடித்துக் கொண்டாள்.

''ஒண்ணுமில்லேம்மா'' என்று வெட்கத்துடன் முகத்தை மூடிக் கொண்டாள் ஸீதா.

''ஓ! அப்படியா? நான் ஒரு முட்டாள். கவனிக்கவே யில்லை. இத்தனை வருஷம் கழித்தாவது கடவுள் கண்ணைத் திறந்தாரே!'' என்று சந்தோஷப்பட்டாள் பாகீரதி.

ஸீதாவுக்குச் சிரிப்பு வந்தது. கல்யாணத்தன்று இரவே சங்கர் 'குழந்தை பிறக்கிறதை நாம் கொஞ்ச காலத்துக்குத் தள்ளிப் போட்டாகணும் ஸீதா! குடும்பத் தேர் நிலைக்கு வந்து, உஷாவுக்கும் ரமாவுக்கும் கல்யாணமாகிப் போகும் வரை கட்டுப்பாடா இருக்கணும்' என்று சொல்லிவிட்டான்.

ஸீதாவுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். அவளுக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை. இருந்தாலும் கணவனுக்காக அதைத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது.

அன்று சங்கர் மனமுடைந்து அழுத போது, உணர்ச்சி வசப்பட்டதன் விளைவு, கட்டுப்பாடுகள் பறந்து...மாமியார் கடவுளின் மேல் பழியை இத்தனை நாளும் சுமத்தி இருக்கிறாரே!

கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். நல்ல செய்திதான். இருவரும் தாயாகப் போகும் அறிகுறிகள் தெரிவதாக எழுதியிருந்தார்கள். பாகீரதிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

'மூணு பேரும் ஒண்ணா உண்டாகியிருக்கிறீர்கள். கண்பட்ட மாதிரி போகாம கடவுள்தான் காப்பாத்தணும்' என்று ஒரொரு ஸ்வாமிக்காக வேண்டிக்கொள்ள ஆரம்பித்தாள்.

ஸீதாவுக்குக் கவலை சூழ்ந்து கொண்டது. இந்தச் சமயம் நாமும் இப்படி இருக்கிறோமே, செலவுகளை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று தவித்தாள்.

உரிய காலத்தில் இருவரும் வந்தனர். வளைகாப்பு சீமந்தம் என்று பணம் தண்ணீராகச் செலவழிந்தது. அவளுக்குச் செய்ய வேண்டியதையும் பிறந்த வீட்டில் குறைவின்றிச் செய்தார்கள்.

ஸீதாவுக்குத்தான் முதலில் தேதி குறித்திருந்தாலும் உஷாவும் ரமாவும் வந்திருந்ததால் முன்னதாகப் போக முடியவில்லை.

''குழந்தைகள் ஒண்ணா இருக்கட்டும். பக்கத்திலேதானே. வலி எடுத்தா இங்கிருந்தே அழைச்சிண்டு போகலாம்'' என்று சொல்லி விட்டாள் பாகீரதி.

6

தொட்டிலில் படுத்திருந்த குழந்தையை ஆசையுடன் பார்த்தாள் ஸீதா. இருபத்து நாலு மணி நேர வேதனைக்குப் பின் அவள் இப்போதுதான் கண்ணைத் திறந்திருக்கிறாள்.

'ஸீதா! என் கண்ணே! கண்ணைத் திறந்தியாம்மா.. கருமாரி என் வயத்துலே பாலை வாத்துட்டா. நானைக்கு அபிஷேகத்துக்குக் கொடுக்கணும்' என்று பாசத்தினால் குரல் நடுங்கப் பேசினாள் அம்மா.

''என்ன குழந்தைம்மா?''என்று ஆவலுடன் கேட்டாள் ஸீதா.

'பெண் குழந்தை' என்று சொன்ன அம்மா குழந்தையை எடுக்கக் குனிந்ததால் ஸீதாவின் முகத்தில் பரவிய இருளைப் பார்க்கவில்லை.

'பொண்ணா?'' என்று சலிப்புடன் திரும்பிக் கொண்டதைப் பார்த்து, 'அசடே! இந்தக் காலத்துலே எதுவானா என்ன? நல்லபடியா தாயும் பிள்ளையும் வேறேயாளுப் போறும்னு ஆச்சு. இதுக்கேன் சலிச்சுக்கிறே?'' என்று அம்மா சமாதானம் செய்தாள்.

குழந்தை கொழு கொழு வென்று பத்து பவுண்டு இருந்தாள். பிரசவம் ரொம்பக் கஷ்டமாகி சிசரின் பண்ணி எடுக்க வேண்டியிருந்ததாம்.

''இதற்குத்தான் காலாகாலத்திலே எல்லாம் நடக்கணும்கிறது. இத்தனை நாள் ஒத்திப்போட்டது எவ்வளவு கஷ்டமாச்சு

பாத்தியா?'' என்று மன்னிகோபித்துக்கொண்டாள்.

முழுசாக நாற்பது நாள்தான் பிறந்தகத்தில் சீராட முடிந்தது.

உஷா, ரமாவை வைத்துக் கொண்டு தனியாக இருக்க அம்மா பயப்படுகிறாள் என்று சங்கர் வந்து அழைத்துப் போய்விட்டான். இருவருக்கும் டெலிவரி, நர்ஸிங் ஹோம் பில், பிரசவித்த உடம்பு என்று மருந்து மாத்திரை பச்சை உடம்பு என்று பாலும் தயிரும் — வீட்டில் செலவு ஏகமாக ஏறியது.

அவளும் பிரசவித்த பெண்தான். அவளுக்கென்று எதுவும் தனியாகச் செய்துகொள்ள முடியவில்லை.

மூன்றும் மாதம் பிறந்ததும் இருவரும் மூட்டை கட்ட ஆரம்பித்தார்கள்.

மறுபடியும் குழந்தைக்கு நகை, சீர் என்று ஆரம்பித்தாள் பாகீரதி.

''நமக்கு ஆயிரம் கஷ்டம் இருக்கும். நாளைக்கு நல்லது வருமா? ஆண் குழந்தை ரெண்டு பேருக்கும் தங்க விக்கிரகம் மாதிரி பிறந்திருக்கு. குந்துமணி பொன் கூட இல்லாமல் எப்படி அனுப்புவது?''

''நம்மிடம் இருந்தால் வஞ்சனை இல்லேம்மா. சாண் ஏறினால் முழம் சறுக்கிறதே. ஆண் குழந்தை பவுன் நகை இல்லாவிட்டால் என்ன? பம்பாயில் போடவா முடியும்? குழந்தைக்கே ஆபத்தாகப் போய்விடும். மாப்பிள்ளைகள் தங்கமானவா — தப்பா நினைக்க மாட்டா.'' என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் கீதா.

''நீ எதுக்கம்மா மன்னியிடம் கெஞ்சுகிறாய்? குழந்தைகளுக்கு அவா அப்பா வேண்டியது செய்வா. அங்கே கேக்கவும் யாரும் நாதியில்லே. அதனாலேதான் ஆண் குழந்தைன்னு சாக்குச் சொல்றா. தன் குழந்தைக்கு மட்டும் பண்ணிப் போட்டுண்டு வரத் தெரியல்லேயா? என்னதான் மாப்பிள்ளைமார் தங்கம்னாலும் பிறந்தாத்திலே கதி இல்லாதவான்னு நம்மை நினைக்கக் கூடாது பாரு! அதனாலேதான்'' என்று மனத்தாங்கலுடன் பேசினார்கள் இருவரும்.

'சீ! என்ன மனிதர்கள்! இவர்கள் கல்யாணத்துக்காகத் தன் சகலத்தையும் கழற்றிக் கொடுத்துவிட்டு உருவி விட்டது போல் நிற்கும் தன்னைப் பார்த்தா இப்படிச் சொல்கிறார்கள்?

'போகட்டும். அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.' மீண்டும் எப்படியோ சமாளித்து இரண்டு குழந்தைகளுக்கும் நகைக்கு ஏற்பாடு செய்தாள்.

ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் வாரம், 'அம்மா நீயும் எங்களோடு வாயேன். குழந்தையை எங்களாலே தனியாப் பார்த்துக்க முடியாது. இங்கே ஏன் இன்னும் திண்டாடணும்? மன்னிக்கு பிறந்தாம் பக்கத்திலே இருக்கு. அங்கே விட்டுட்டு வேலைக்குப் போகலாம். நீயும் எத்தனை நாள் உழைச்சிண்டிருப்பே. பேசாமல் எங்களுடன் வந்துவிடு'' என்றாள் உஷா.

பாகீரதி அம்மாளுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

''அடியே கீதா! உஷாவும் ரமாவும் என்னை அன்பாக் கூப்பிடறா. எனக்கும் யார் இருக்கா? அவர் போனதிலிருந்து நானும் இந்த வீட்டோடு அடைந்து கிடக்கிறேன். போயிட்டுத்தான் வரேனே. வீட்டையும் குழந்தையையும் ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ'' என்று உற்சாகமாக மூட்டை கட்ட ஆரம்பித்தாள்.

கீதாவுக்குப் பகீர் என்றது. இவர்களை ஊருக்கு அனுப்பிவிட்டு வேலைக்குப் போகலாம் என்று நினைத்தாளே! இனி மாமியார் வருவது நிச்சயமில்லை. உஷாவும் ரமாவும் மாடியும் கீழுமாக ஒரே வீட்டில் இருக்கிறார்கள். குழந்தை கொஞ்சம் பெரிதானதும் படித்த படிப்பு வீணாகாமல் வேலைக்குப் போகலாம் என்று இருவரும் பேசிக் கொண்டிருந்ததைக் கீதா கேட்டாள்.


அதற்காகத்தான் அம்மாவை நைச்சியமாக அழைத்திருக்கிறார்கள். போகட்டும். அதைப் பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் அவள் வேலைக்குப் போவது எப்படி? குழந்தையை யாரிடம் விட்டுப் போவாள்?

அம்மாவுக்கு வயதாகி விட்டது. உடம்பு சரியில்லை. அண்ணாவின் குழந்தைகள் பெரியவர்களாகி ஸ்கூலுக்குப் போக ஆரம்பித்து

''ஆண் விலை ரூ. 40,000—00
பெண் விலை ரூ. 20,000—00''

ஒரு காரோட்டி ஒரு ஆணின் மீது காரை ஏற்றிக் கொன்று விட்டால், அபராதம் ரூ. 40,000-00. ஒரு பெண்ணின் மீது ஏற்றிக் கொலை செய்துவிட்டால், அபராத தொகை ரூ. 20,000-00. இது ஆப்கானிஸ்தான் நாட்டு சட்டமாகும்.

(ஆதாரம்: உலகச் செய்திகள்)



விட்டார்கள். இப்போதுதான் பொறுப்பு தீர்ந்து கொஞ்சம் ஓய்வாக இருக்கிறாள். அவளிடம் மீண்டும் புதிதாக ஒரு பொறுப்பை ஒப்புவிப்பதா?

சங்கரிடம் இதைச் சொன்னபோது அவன் கேலியாகச் சிரித்தான்.

''போகட்டுமே சீதா! ரொம்ப நாளாகத் தனிக் குடித்தனம் பண்ணலைன்னு உனக்குக் குறை. ஜாலியாகக் குழந்தையைப் பார்த்துக்கொண்டு வீட்டிலேயே இரு. வேலையை விட்டு விடலாம்.''

இளமையின் அஸ்தமனத்தில் தனிக் குடித்தனமா? வேலையை எப்படி விட முடியும்? இனிமேல்தான் அவள் முழு மூச்சோடு சம்பாதிக்க வேண்டும். கல்யாணச் செலவு, பிரசவம், சீர் என்று வாங்கிய கடனை அடைக்க வேண்டும். மேலும்...

சங்கர் மூன்று மாதம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். கொஞ்ச நாளாகவே சங்கர் இருமிக்கொண்டிருந்தான். உஷ்ணமாக இருக்கும் என்று பாலில் கைப் பக்குவமாக ஏதேதோ போட்டுக் காய்ச்சிக் கொடுத்தாள்.

மாலையில் டெம்பரேச்சர், இருமல், தலைவலி இருக்கவே, டாக்டரைப் பார்த்தார்கள்.

''மார்பில் சளி ஏகமாகக் கட்டியிருக்கிறது. இன்ஜக்ஷன் போட்டுண்டா சரியாயிடும். மேலும் டானிக் வாங்கித் தரணும். நல்ல சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிட்டு காற்றோட்டமா இருந்தா வந்த வழி தெரியாமல் போயிடும். நீ ஒண்ணும் கவலைப்படாதேம்மா. ஒண்ணும் பயமில்லே.'' – டாக்டர் அவள் கொடுத்த பீஸான இருபது ரூபாயைப் பையில் திணித்தபடி சொன்னார்.

ஏழைக் குடும்பம் – ராஜ வைத்தியம்! தலைக்கு மேல் போன பிறகு சாண் போனால் என்ன முழம் போனால் என்ன, முடிந்தவரை போராட வேண்டியதுதான். பிறகு கடவுள் விட்ட வழி.

இத்தனைக்கும் பிறகு அவள் பெண்ணுக்காகச் சேர்க்க வேண்டும். அவளுக்கு வயது வந்து கல்யாணம் செய்யும் நேரத்தில் கூட இந்தச் சமூகம் மாறப்போவதில்லை. அவளுக்கு எத்தனை ஆயிரம் தேவைப்படுமோ?

எத்தனை சட்டம் போட்டால் என்ன? எத்தனை ஆச்சாரியார்கள் ஆணையிட்டால் என்ன? அவர்கள் அனுக்கிரகத்துடன் என்று பத்திரிகையில் எழுதின மை உலரும் முன்பே இரு கையும் நீட்டி வரதட்சிணை வாங்குகிறார்கள்.

சட்டத்தினால் சாதிக்க முடியாது. மனம் மாற வேண்டும். இளைய தலைமுறை உறுதியாக இருக்க வேண்டும்.

என்னதான் மாமியாரை அவள் அம்மாவாகப் பாவித்தாலும் பெண்கள் என்றால் ஒரு படி உயர்வுதான். எல்லாரும் அம்மாவைப் போல் இருப்பார்களா? அவன் உதவி தேவையாக இருக்கும்போது அவன் உழைப்பையும் செல்வத்தையும் உறிஞ்சிக்கொண்டு இப்போது சாரமற்ற சக்கையாக ஒதுக்கி விட்டார்கள்.

விளக்கு வீடு முழுவதும் பிரகாசம் கொடுத்தாலும், அதனடியில் எப்போதும் இருண்டுதான் இருக்கும். அப்படித்தான் அவள் வருங்காலமும் இருண்டு கிடக்கிறது.

'முதலில் இவ்வளவு பெரிய போர்ஷன் தேவையில்லே. பக்கத்துச் சிறிய போர்ஷனை விருப்பவர்கள் குடும்பம் பெரியதாகி விட்டதால் பெரிய போர்ஷன் ரொம்ப நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இங்கு வரச் சொல்லிவிட்டு நாம் அங்கு போய்விடலாம்.'

வேலைக்காரியிடம் குழந்தையை விட்டுப் போக அவளுக்கு மனம் இல்லை. பக்கத்தில் 'கிரெச்' இருக்கிறது. அங்கு விட்டுச் செல்ல வேண்டும். அதற்கு வேறு அதிகப் பணம் தேவை.

மறுநாள் குழந்தையை ஒரு தோளிலும் அதற்கு வேண்டிய சாமான்கள் அடங்கிய பையை மற்றொரு தோளிலும் சுமந்து கொண்டு 'கிரெச்'சுக்குள் நுழைந்தாள் சீதா. தாதி ஓடி வந்து குழந்தையை வாங்கிக்கொள்கிறாள். வேற்று முகமறியாத குழந்தை வீரிடுகிறது.

கண்ணில் தளும்பும் நீரை விழுங்கியபடி குழந்தையை அழ அழ விட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் பஸ் ஸ்டாண்டுக்கு நடக்கிறாள்.

குழந்தையின் நினைவில் கனத்த மார்பு விண் விண்ணென்று தெறிக்கிறது.

முதலில் டாக்டரிடம் கேட்டு இந்த வேதனைக்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும்.

கொஞ்ச நாளில் குழந்தை பழகிவிடுவாள். ஸ்கூலுக்குப் போக ஆரம்பித்து விட்டால் கவலை இல்லை. அதுவரை கொஞ்சம் கஷ்டம் தான். சமாளிக்க வேண்டும்.

வருங்காலமாவது ஒளிமயமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அவள் காத்திருக்கிறாள்.

உருளைக்கிழங்கு வேகவைக்க....

ஒரே அளவாகக் கிழங்கை நறுக்க வேண்டும். அப்போது ஒரே சமயத்தில் எல்லாம் வேகும். இல்லையென்றால் ஒன்று வெந்து ஒன்று வேகாமல் நிற்கும்.

அதிகமாகத் தீயை வைப்பதால் காய்கள் சீக்கிரமாக வெந்துவிடாது. தண்ணீரைக் கொதிக்க வைத்துப் பின்னர் கிழங்குகளைப் போட்டால்தான் சீக்கிரமாக வேகும்.

வினிகரையோ, எலுமிச்சைச்சாறையோ சிறிது விடுவதால் காய்கள் கறுக்காமல் வெந்துவிடும்.

□ ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ... நடிகையர் திலகம் சாவித்திரி பற்றிய கட்டுரை அருமை. திரையில் தோன்றி நம்மையெல்லாம் மகிழ்வித்த அந்த உருவம் இன்று கோமா நிலையில் கஷ்டப்படுவதை அறியும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

சென்னை-5 சங்கரசுப்பிரமணியன்

□ நடிகையர் திலகம் சாவித்திரி பற்றி ஜெமினி கூறிய ''யாரிடம் வேண்டுமானாலும் சண்டை போட்டுப் பிடிவாதத்துடன் இருங்கள். ஆனால் கணவனிடம் செய்தால் மனம் உடைவான். மேலும் வீட்டுத் தகராறை எவ்வளவு கடுமையானாலும் தனக்குள்ளேயே தீர்த்துக் கொள்வதை விட்டு விட்டு மூன்றும் மனிதனிடம் பேசுவது' நம் நிலையை வெளிச்சம் போட்டு நமக்குக் கஷ்டத்தையும், அவர்களுக்கு மகிழ்ச்சியை மட்டுமே ஏற்படுத்தும்'' என்கின்ற அவரின் அனுபவங்கள் அதிர வைத்துப்பின் ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. பேட்டி கண்ட மஞ்சுளா ரமேஷ் வேறெந்தப் பத்திரிகையிலும் வெளிவராத அளவு தெளிவாக ஒரு பேட்டி தந்ததற்கு மிக்க நன்றி.

நெல்லை-1 ஜி. சதாசிவம்

□ 'கோமா' நிலையில் ஓராண்டாகத் தன் நினைவின்றியிருக்கும் நடிகையர் திலகத்தின் வாழ்க்கை ஏட்டைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்குப் புரியும், நடிகையர் திலகம் ஆயிரத்தில் ஒருவர்தான் என்று. அவருடைய நிலையை எண்ணிப் பார்க்கும் ரசிகர்கள் மனதுக்குள் ஒரு நிமிடமாவது வருந்தத்தான் செய்வார்கள். இறைவன்சொல்லப் போகும் தீர்ப்பு நல்ல தீர்ப்பாக இருக்கட்டும் என்று பிரார்த்திப்போம்!

பெங்களூர்-53 'சித்திரப்பிரியா'

□ ஆயிரத்தில் ஒருத்தியம்மா படித்தேன். படிக்கும்போது

நீர்த் திரையிடுகிறது. கட்டுரை ஏ-1ன்னாக அமைந்து விட்டது. அதற்காக நீங்கள் தேடிப் பிடித்த எடுத்த படங்களின் ஸ்டில்கள் கட்டுரையின் பெருமையை மேலும் ஒரு படி உயர்த்திவிட்டது. நடிகையர் திலகத்தின் துயரமான நேரத்தில் கட்டுரையை வெளியிட்டு எல்லோருடைய அனுதாபத்தையும் அன்பையும் பெற்றுவிட்டீர்கள்.

கும்பகோணம் டி. எஸ். சீதாராமன்

□ தங்கள் ஜூலை மாத மங்கையர் மலர் படித்தேன். பாம்பு...ஸ்...பாம்பு என்ற பக்கத்தைப் படித்து முடித்தவுடன் நான் கால்களைச் சேரின் மேல் எடுத்து வைத்துக் கொண்டேன். இரவு படுக்கப் போகும் நேரத்தில் 'மாம்பா' என்று என் வாய் தானாகச் சொல்லிக் கொண்டது.

சென்னை-5 லீலா



□ சீசனுக்கு ஏற்ப அட்மிஷன் பிரச்னையை அலசும் கட்டுரையில்கூட 'ஸ்கூலுக்குப் போற டிரெஸ் செலவாகுமே' என்று ஒரு நிர்வாண நாயகியைப் படம் பிடித்துப் போட்டுக் குபீர் சிரிப்பை ஏற்படுத்தி விட்டீரே! பயனுள்ள அருமையான பேட்டி.

நெல்லை — வனஜா

□ சாந்தா தத் எழுதிய 'ராதையின் பிருந்தாவனம்' என்ற படைப்பைப் படித்தேன். மிகவும் உணர்ச்சிகரமான துடிதுடிப்பை ஆங்காங்கே ஏற்படுத்தி ஓர் அலாதியான இன்பத்தைப் பெற்றுத் தந்தது.

திம்மராஜபுரம் — என். ராமகிருஷ்ணன்

□ வரதட்சிணைப் பிரச்னையால் ஒரு பெண் வேதனையை அனுபவிப்பது புதுமை என்றாலும், தன் அன்னைக்காக மனதைக் கல்லாக்கிக்கொண்ட ஒரு ஆணின் பிடிவாதமும், தனக்கேற்பட்ட விபத்தின் மூலம் தன் கணவனின் ஈர நெஞ்சத்தை அறிந்து அது ஒன்றே போதுமென்று வாழத் துடிக்கும் ஜானகியின் மனமும், அனுராதா ரமணின் வாசகர்களுக்குப் புதுமையானதுதான்.

பெங்களூர்-5 — லட்சுமி குமார்

□ பெண் தனது கையில் எப்போதும் எடுத்துச் செல்லும் அட்சய பாத்திரமாக மங்கையர் மலர் மாறி வருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கரன்கோவில் — மிஸ். கமலா பாரதி

□ அனுராதா ரமணனின் "சாதகப் பறவை" (ஜானு) என் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டு மன வானில் சிறகடித்துப் பறக்கிறதே!

சென்னை-4 — மயிலை கோபி

□ நீங்க என்னதான் சொல்லுங்க! குழந்தைகளை அட்டைப் படத்தில் பார்க்கும்போது, மற்ற பத்திரிகைகளின் அழகிகள் கண்களில் படுவதே இல்லை!

ஸ்ரீரங்கம் — கோமளா

முட்டையை உபயோகப்படுத்தும் தவறான முறைகளும், சரியான முறைகளும்

முட்டை சைவமோ அசைவமோ ஆனால் சாப்பிடுவதால் பலனுண்டு என்பது மட்டும் நிதர்சனம். — இது சைவ உணவு சாப்பிடுபவர்களில் 95 சதம் பேர்களின் பொதுவான கருத்து. அதனால்தான் தற்போது பொதுவாக எல்லா வீடுகளிலுமே முட்டைகள் சர்வ சாதாரணமான உணவாக உட்கொண்டு வருகின்றனர். தெரிந்தோ தெரியாமலோ முட்டையைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை பலர். அதனால் இங்கே முட்டையை உணவாகப் பயன்படுத்தும் முறையையும், அதன் பலன்களையும் பார்ப்போம்.

நாம் தாயின் வயிற்றில் வளரும்போது நம் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா சக்தியும் தாயின் இரத்தத்தின் மூலம் பெறுகிறோம். அதனால் 10 மாதம் வரை வயிற்றிலேயே வளர்கிறோம். இதே போல் முட்டையில் ஒரு உயிர் வளர்வதற்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் ஒருங்கே பெற்றிருக்கிறது என்பது நிச்சயம். இப்போது விளங்கும் முட்டை ஏன் சத்துள்ள உணவு என்று.

சரி, முட்டையைப் பச்சையாகச் சாப்பிடுவது நல்லதா, வேகவைத்துச் சாப்பிடுவது நல்லதா? ஆம்லெட்டாகச் சாப்பிடுவது நல்லதா? விஞ்ஞான ரீதியில் இம் மூன்று முறைகளுமே தவறு. எப்படி?

நம் வயிற்றில் இருக்கும் அமில சக்தியால் பச்சை முட்டையில் உள்ள புரத சத்தை உறைய வைக்க முடியாது. பெருங் குடலிலேயே தங்கி ஜீரணிக்காமல் இருந்துவிடும். இதனால் அடிக்கடி ஏப்பம் உண்டாகும். இதற்கு விதிவிலக்கு பயில்வான்களும், விளையாட்டு வீரர்களும், உடற் பயிற்சி செய்பவர்களும். காரணம் பச்சை முட்டையைச் சாப்பிட்டவுடனேயே பயிற்சியில் ஈடுபட்டு விடுவதால், முட்டையின் புரதம் பெருங் குடலில் தங்காமல், நேராகச் சிறு குடலுக்குச் சென்று உடன் செரிக்கப்பட்டு விடுகிறது.

நன்றாக வேகவைத்தோ அல்லது ஆம்லெட்டாகச் செய்தாலோ முட்டையில் உள்ள உயிர்ச் சத்துக்கள் அனைத்தும் இறந்துவிடும். பின்னர் வெறும் சக்கையை மட்டும்தான் சாப்பிடுவதாகப் பொருள்.

ஆனால் இவை யாவற்றையும் விட கொஞ்சம் வேகவைத்து அரை வேக்காடாகச் சாப்பிடுவதுதான் முற்றிலும் சிறந்தது. தோராயமாக 62 சென்டிகிரேட் கொதிக்கும் நீரில் ஒன்று முதல் மூன்று நிமிடங்களுக்குள் வேகவைத்துப் பின் சாப்பிட்டால் முட்டையிலிருக்கும் முழு உயிர்ச் சத்துக்களையும் முழுமையாகப் பெறலாம். கண்டிப்பாய் மூன்று நிமிடங்களுக்கு மேல் வேகவைக்கவே கூடாது. ஆம்லெட் பிரியர்களாக இருந்தால் அதிலும் அரை வேக்காடாகச் சாப்பிடுவதே சிறந்தது.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வெள்ளைக் கருவை நீக்கி மஞ்சள் கருவை மட்டும் கொடுக்க வேண்டும். காரணம் வெள்ளைக் கருவை ஜீரணிக்கும் சக்தி குழந்தைகளுக்குக் கிடையாது.

—ஐ. நூர்ஜஹான்

தனி வழி பயணம்

லக்ஷ்மி

எழுத்தாளர்கள், கவிஞர்கள் முதலியோரின் படைப்பினால் வாசகர்கள் பாதிப்படுகின்றனரா?

நேருக்கு நேர் நிகழ்ச்சிகளில் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி இது.

'கட்டாயம் சில பாதிப்புக்கள் ஏற்படுகின்றன' என்று சில எழுத்தாளர்கள் அழுத்தமாகவே பதிலளிக்கிறார்கள்.

'எழுத்தினால் சமுதாயத்தில் எந்த விதப் பாதிப்பும் ஏற்பட்டுவிடாது' என்று அடித்துப் பேசுகின்றனர் சில எழுத்தாளர்கள்.

உலகநாதரும் — அதிவீரராம பாண்டியரும் தமது எழுத்துக்களால் என்னை மிகவும் பாதித்து விட்டிருக்கின்றனர் என்பது உண்மை.

பள்ளிப் பருவத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மற்ற பிள்ளைகளுடன் வாத்தியார் அடியெடுத்துக் கொடுக்க... 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்...' என்று பல வேண்டாம்களைப் பெருங் குரலில் கோஷமிட்டதின் பலன்...

'அஞ்சாமல் தனி வழியே போக வேண்டாம்' என்று உலகநாதர் உபதேசித்ததையும்....

'துணையோடல்லது தனி வழி போகேல்' என்ற அதிவீர ராம பாண்டியனின் நறுந்தொகையையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தேன்.

எனக்கு இன்றும் தனியே பயணங்கள் செய்வது என்பது பிடிக்காத காரியம். அதுவும் வெளிநாடுகளுக்குத்தனியாகப் போவதை விஷமாக வெறுக்கும் ஒரு பாதிப்பு உண்டு.

பல தடவை தென் ஆப்பிரிக்காவுக்கும் தாய் நாட்டுக்கும் இடையே நான் பயணங்கள் செய்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் என் தோழி ஒருவர் சென்னைவரை கூட வருவார். இருவரும் ஒருவருக்கொருவர் துணையாகப் பயணம் செய்துவிட்டு சென்னை விமான நிலையத்தில் பிரிவோம். மறுபடி திரும்பும்போது அதே தேதியில் சந்தித்துப் பயணத்தைத் தொடங்குவோம். ஆனால் ஒரு சமயம் இந்தச் சிநேகிதிக்கு என்னுடன் கூட வர முடியாது போய்விட்டது.

மிகவும் மனக் கசப்புடன் நான் தனியாக ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டேன். பம்பாயில் சந்தித்த உறவினர்கள் நடுஇரவு கிளம்ப இருந்த கிழக்கு ஆப்பிரிக்க விமானத்தில் என்னை ஏற்றிவிட்டு வீடு திரும்பி விட்டனர். விமானம் உடனே கிளம்பவில்லை. இரண்டு மணி தாமதம். பின்னர் தான் அதில் ஏதோ கோளாறு என்று தெரிய வந்தது. தென் ஆப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் நேர் விமானத் தொடர்பு கிடையாது. கிழக்கு ஆப்பிரிக்க விமானத்தின் மூலம் நைரோபியை அடைந்து இரண்டு மணி நேரம் காத்திருந்து ஜப்பானிலிருந்து வந்திறங்கும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் பயணத்தைத் தொடங்க வேண்டும். ஒரு நாள் காத்திருந்தால் அந்த நாட்டில் ஹோட்டலில் தங்கியிருந்து விட்டுத்தான் இணைப்புப் பயணத்தைத் தொடங்க வேண்டும். முன் பின் தெரியாத ஊர்களில், மொழி தெரியாது ஹோட்டலில் தங்க எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. பயம்கூட. நிறையத் துப்பறியும் கதைகள் படித்ததின் பாதிப்பு!

பம்பாயிலிருந்து தாமதமாக எங்கள் விமானம் கிளம்பியதால் இணைப்புப் பயணத்தை தொடர முடியாது நான் நைரோபியிலே தங்க வேண்டி வந்து விட்டது. எங்கள் விமானம் இறங்கும் சமயம் நைரோபியிலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்கு பிரிட்டிஷ் ஏர்வேஸ் பறக்கத் தொடங்கி விட்டது. ஓடும் ரயிலைக் கூடத் துணிச்சலுடன் சில சமயம் பாய்ந்து பிடித்து விடலாம். பறக்கும் விமானத்தை யார் பிடிப்பது?



விமான நிலையத்துக்குள் நுழைந்து (கென்யா சுதந்திரமடைந்து விட்ட பின்னர்) அங்கிருந்த ஆப்பிரிக்க அதிகாரியிடம் என் நிலையை விவரித்தேன். அவர் இன்னொருவரிடம் ஸ்வாஹிலி மொழியில் பேசினார். மற்றவர் இன்னொருவரி

டம் பேசினார். நானும் என்னைப் போல விமானத்தைக் கோட்டை விட்ட ஒரு வெள்ளைக்காரத் தம்பதிகளும் சிவனேயென்று வரவேற்பு அறையில் வெகுநேரம் உட்கார்ந்திருந்தோம்.

''அடுத்த நாள் காலை பிரிட்டிஷ் ஏர்வேஸ் அங்கு வரும்போதுதான் இடம் இருக்கிறதா என்று விசாரிக்க வேண்டும்'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் அந்த அதிகாரி.

''ஐய்யய்யோ... நாளை நான் வேலையில் போய்ச் சேர வேண்டுமே.. என் லீவு தீர்ந்து போய்விட்டதே... இரவு விமானம் ஏதும் கிடையாதா?''' — கெஞ்சினேன்.

''அப்படி ஒரு நெருக்கத்திலா ஊரை விட்டுப் புறப்படுவீங்க... இரண்டு நாள் முன்னதாகவே வந்திருக்கலாம் அல்லவா... எங்கள் நாட்டு விருந்தாளியாக... எங்கள் ஊர் ஹோட்டலில் சில நாட்கள் தங்கிப் பாருங்களேன்'' என்று சிரித்தாள்.

கூட வந்த வெள்ளைக்காரத் தம்பதிகளுக்கு அருகிலேயே தங்க ஒரு ஹோட்டல் கிடைத்து விட்டது. என் அதிர்ஷ்டம் எனக்கு நிலையத்திலிருந்து முப்பது கிலோ மீட்டர் தொலைவிலிருந்த ஹோட்டல் ஒன்றில்தான் இடம் கிடைத்தது. என்னை அங்கே அனுப்பிவைக்க விமான நிலையத்திலிருந்து சில ஆப்பிரிக்க ஊழியர்களும் ஒரு வண்டியும் தயாராகியது. ஒரு ஜீப்பில் நானும் நாலு ஆப்பிரிக்கர்களும் பயணப்படுவதாக ஏற்பாடு. அவர்களுள் கசமுசவென்று அவர்கள் மொழியில் பேச்சு... சிரிப்பு....


சலனமே இல்லாத அவர்களது முகங்களும் மொழி புரியாத குழப்பமும் என்னைப் பயமுறுத்தி விட்டன.

பாவம்! அவர்கள் அப்போது விலைவாசியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்களாம். மொழி புரியாத கோளாறினால் அவர்கள் என்னைக் கடத்திக் கொண்டு போய்க் கொலை செய்யத் திட்டமிடுவது போன்று எனக்குள் பலத்த கலவரம் ஏற்பட்டு விட்டது. தன்னந் தனியே, மொழி தெரியாத நிலையில் அவர்களுடன் அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதி வழியே பல கிலோ மீட்டர் ஹோட்டலுக்குப் பயணப்பட வேண்டுமென்றால்... பேசாமல் விமான நிலையத்திலேயே போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது மேல் என்ற வரை கலவரப்பட்டு விட்டேன்.

மடியில் கனம் என்றால் வழியில் பயம் என்பது முற்றிலும் உண்மை. என் தோழி ஒருத்தி வீட்டுக் கல்யாணத்துக்காக வாங்கிய நகைகள் என் காதுகளிலும் கை—கழுத்திலும் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தன. பெட்டி நிறையப் பட்டுச் சேலைகள் வேறு. கைப் பையில் பணம்...

என் மனம் திக் திக்கென்றுதான் அடித்துக்கொண்டது.

பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு என்னை யாராவது அங்கு கொலைசெய்து புதரில் தூக்கிப் போட்டு விட்டால்... நான் ஊர் வந்து சேரவில்லை என்பதை அறிந்து நண்பர்கள் ஹைகமிஷனர் மூலமாக என்னைத் தேடுவதற்குள் ஆப்பிரிக்கக் கழுதைப் புலிகள்... என் உடலை அப்பளமாகச் சாப்பிட்டு முடித்து விடும்-தடயமே பின் கிடைக்காது.... (ஆப்பிரிக்காவின் துஷ்ட மிருகங்கள் என்பதைப்



முளைக்கட்டிய தானியங்கள்

முளைக்கட்டிய தானிய வகைகள், பயறு வகைகள் உடல் நலத்துக்கு மிகவும் நல்லது என்பதைப் புத்தகங்களில் படித்தோ கேள்விப்பட்டோ இருக்கிறோம். ஒருசில சகோதரிகளுக்குத் தானியங்களை எளிய முறையில் முளைக்கட்டுவது எப்படி என்பது தெரியாமலிருக்கலாம். இதில் தென்னாட்டு முறை, வடநாட்டு முறை என்று இரண்டு வகைகள் உண்டு.

தென்னாட்டு முறை: முளைக்கட்ட வேண்டிய தானியத்தை ராத்திரியே தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். விடிந்ததும், தண்ணீரை வடித்துவிட்டு, ஊறிய தானியத்தை மெல்லிய ஈரத் துணியால் கட்டி ஒரு பாத்திரத்தில் வைக்க வேண்டும். அதன் மேல் இன்னொரு பாத்திரத்தையோ அல்லது கூடையையோ இறுக்கமாகக் கவிழ்த்து வைத்துவிட்டால் ஒரே நாளில் முளைவிட ஆரம்பிக்கும்.

வடநாட்டு முறை: மேற்கூறியது போல் ராத்திரி தண்ணீரில் ஊற வைத்த தானியத்தை ஒரு சல்லடையிலோ அல்லது சிறு சிறு துவாரங்கள் உள்ள வடிகட்டிப் பாத்திரத்திலோ கொட்டி, அதை ஒரு ஈரத் துணியைக் கொண்டு மூட வேண்டும். சல்லடையை விட வாயகன்ற இன்னொரு பாத்திரத்தில் இரண்டு அங்குலத்துக்குத் தண்ணீர் நிரப்பி அதன் நடுவில் டபரா போன்ற ஒன்றை வைக்க வேண்டும். அந்த டபராவின் மேலே துணி மூடிய தானியச் சல்லடையை வைக்கவும். இப்படி வைக்கும்போது மூடியிருக்கும் துணியின் விளிம்புகள் கீழ் பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் தொட்டுக் கொண்டிருக்குமாறு வைக்க வேண்டும். தொங்கும் துணி திரியைப் போல் உதவி தானியத்தின் மேல் உள்ள துணி எப்போதும் காயாமல் ஈரத்துடன் இருக்க வைக்கிறது. பத்துப் பன்னிரண்டு மணி நேரத்தில் அழகாக முளைக் கட்டிவிடும்.

பிறகு இதை எடுத்து நமக்கு இஷ்டமான சமையல் குறிப்புகள் செய்து மகிழ்விக்கலாம்

—பாத்திமுத்து சித்தீக்



படித்ததின் பாதிப்பு இது!) உள்ளூற நடுங்கிப் போனேன்.

''முருகா! தனிப் பயணம் பயமா இருக்கே, காப்பாத்த மாட்டியா...'' என்னுள்ளம் பிரார்த்தித்துக் கொண்டது.

முருகன் உண்மையில் என் வழித் துணைக்கு வந்துவிட்டான் போல... நிலையத்திலிருந்து கையில் ஒரு நீண்ட துப்பாக்கியுடன் ஒரு வெள்ளைக்கார மனிதன் ஓடி வந்து புறப்பட இருந்த ஜீப்பில் ஏறிக் கொண்டார்.

''எனக்கும் நீங்க தங்கப் போற அதே ஹோட்டலில் இடம் கிடைச்சிருக்கு. நீங்கள் இந்தியாவிலிருந்துதானே வருகிறீர்கள்?'' கேட்டுக் கொண்டே அருகில் வந்து உட்கார்ந்தார்.

''நல்லவேளை நீங்க வந்தீங்க.. எனக்குத் தனியே மொழி தெரியாதவர்களுடன் பயணப்பட பயமாக இருந்தது.'' ஆங்கிலத்தில் மெல்லிய குரலில் ரகசியமாகச் சொன்னேன்.

''மிரட்சியுடன் நீங்க முழிச்சதைப் பார்த்தேன். கூட துணையாக வரலாம்னு அதிகாரியிடம் பேசி அதே ஹோட்டலில் இடம் வாங்கிக்கொண்டு ஓடி வரேன்...'' அவர் சிரித்த பொழுது எனக்கு முருகனே நேரில் புறப்பட்டு வந்துவிட்டது போன்றதொரு மெய் சிலிர்ப்பு ஏற்பட்டது.

''உங்கள் நாட்டைப்பற்றி நிறையக் கேட்க ஆசை எனக்கு. வங்காளம் புலிகளுக்குப் பிரசித்தியாம். இந்தியாவுக்கு வந்து புலி-வேட்டையாட ஆசைப்படறேன். இப்போது கிழக்கு ஆப்பிரிக்கக் காடுகளில் காட்டெருமை வேட்டைகளில் கலந்து-கொள்ள இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறேன்.'' தம்மை அறிமுகம் செய்து கொண்டார் அந்த வேட்டைக்காரர்.

''வங்காளத்துப் புலிகளை நான் மிருகக் காட்சி சாலையில்தான் பார்த்திருக்கிறேன். 'வங்காளத்துப் புலி' என்று ஒரு மதுபானம் தென் ஆப்பிரிக்காவில் பிரசித்தியாக விற்கப்படுகிறது...அதைத் தவிர எனக்குப் புலி வேட்டைகளைப் பற்றி அதிகம் ஏதும் தெரியாது''என்று என் அறியாமையை ஒப்புக் கொண்டேன்.

''ஜிம் கார்பெட் எழுதிய மான் ஈட்டர் ஆஃப் குமான்... ருத்ர பிரயாக் முதலிய புத்தகங்கள் படிச்சிருப்பீங்க... அவர் புகழ் பெற்ற புலி வேட்டைக்காரர். உங்கள் நாட்டில் அவர் சுமார் ஐநூறு புலிகளுக்கு மேல் சுட்டு வீழ்த்தியிருக்கிறார். உங்கள் நாட்டை ஆண்ட வைசிராய் பிரபுக்களில் லின்லித்கோ பிரபு அவரிடம்தான் புலி வேட்டை நுட்பங்களைப் பற்றி அடிக்கடி கேட்டுத் தெரிந்து கொள்வாராம். நூறு அடி தூரத்திலே படுத்துக்கிடக்கும் புலியைக் கைதட்டிக் கூப்பிட்டு அது பாயுமுன் ஒரே குண்டில் வீழ்த்திவிடும் வீரர் ஜிம் கார்பெட்! அவரைப் பற்றிப் படித்த பின்னர் எனக்கு உங்கள் நாட்டைப் பார்க்க வேண்டும்—அங்கே

புலிவேட்டை ஆட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது....''

வழி நெடுகிலும் அவர் புலியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். என் கிலி மறைந்து போய் நான் பேச்சை ரசித்தேன்.

ஹோட்டலை அடைவதற்குள் பிற்பகல் ஆகிவிட்டது. எதிர் எதிரே எங்களுக்கு அறைகள் கிடைத்தன.

''பயப்படாதீங்க. இரவில் ஏதாவது சத்தம் கேட்டால் ஜன்னல் வழியே ஒரு குரல் கொடுங்கள். ஓடிவந்து விடுவேன்.'' அபயம் அளித்தார் வேட்டைக்காரர்.

அன்று இரவு நான் சாப்பிடவில்லை; உறங்கவில்லை. நாற்காலிகளையும் மேஜையையும் கதவுக்கு அண்டைக் கொடுத்துவிட்டு, கட்டிலின் மீது விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

மறுநாள் அந்த வேட்டைக்கார நண்பர் மறுபடியும் விமான நிலையத்துக்கு எனக்குத் துணையாக வண்டியில் வந்தார். பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் நீல வானத்திலே பறந்து வந்து சில நிமிஷங்களில் இறங்குவதைக் கண்டு நாங்கள் முகம் மலர்ந்து போனோம்.

''அவசரப்படாதீங்க. இடம் இருக்கா என்று கேட்ட பின்தான் உங்கள் பாஸ் போர்ட்டுகளைத் தந்து போர்டிங் கார்டுகள் வழங்கப்படும்.'' அதிகாரி அதட்டினார்.

உணர்வுகள் தொய்ந்து ஊரில் உள்ள தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டு கவலையுடன் நின்றேன்.

விமானம் புறப்படச் சில நிமிடங்கள்தான் இருந்தன.

''போங்கள் சீக்கிரம். மூன்று சீட் காலியாக உள்ளனவாம். ம்!'' என்று உகப்பிய அதிகாரி எங்கள் பாஸ் போர்ட்டை முத்திரையிட்டு வேகமாகக் கையில் தந்தார்.

என்னுடன் வந்த வேட்டைக்காரரிடம் அவசரமாக விடை பெற்றுக் கொண்டு விமானத்தைப் பிடிக்க விரைந்தேன். கூட வந்த வெள்ளைக்கார வாலிபன் மிகவும் நல்லவனாக இருந்தான்.

''கனமான உங்கள் தோல் பையை என்னிடம் கொடுங்கள்.''

என்று என்னிடமிருந்த தோல் பையையும் தன் மனைவியின் தோள் பையையும் வாங்கிக் கொண்டு அவன் முன்னால் ஓட... பெண்கள் நாங்கள் இருவரும் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டவர்கள் போல ஒரே ஓட்டமாக ஓடி விமானத்தைப் பிடித்தோம்.


கை கொடுத்து உள்ளே அழைத்துக் கொண்ட ஏர் ஹோஸ்டஸ் புன்னகையுடன் எனக்கு உட்காரும் இடத்தைக் காட்டினாள். அந்த வாலிபனிடமிருந்து பையை வாங்கித் தோளில் மாட்டிக் கொண்டேன். விமானம் புறப்பட்டு விட்டது. வெளியில் ஒரே வெய்யில். அதில் பழகிப் போன கண்களுக்கு உள்ளே ஒரே இருட்டுத்தான் தெரிந்தது.

விமானப் பெண் காட்டிய இருக்கையை வேகமாக அடைந்து தொப்பென்று உட்கார்ந்தபோது கிரீச்சென்று ஒரு வெள்ளைக்காரப் பாட்டி அலறிவிட்டாள்.

எனக்கிருந்த அவசரத்தில் — கண் தெரியாத இருட்டில் தவறாக அவள் மடியில் உட்கார்ந்து விட்டேன்.

மன்னிப்புகள் ஆயிரம் வாங்கிக் கொண்டு அடுத்ததாக இருந்த என் ஆசனத்தில் உட்கார்ந்தபோதுதான் துணையாக வந்த அந்த வேட்டைக்காரரின் முகவரியை வாங்கிக்கொள்ளவில்லையே — அவருக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்ற கவலை ஏற்பட்டது.

'வேட்டைக்காரரே! மிக்க நன்றி!' —மனத்துக்குள் பன்முறை சொல்லிக் கொண்டேன். தனிப் பயணம் என்றால் எனக்கு இன்றும் பெருத்த அலர்ஜி.



வேகவைத்த நீரின் உபயோகம்

- அரிசி வேகவைத்த நீரை முருங்கை மரத்துக்கு ஊற்றி வந்தால், முருங்கை நன்றாகக் காய்க்கும்.
- பயிறு வேகவைத்த நீரைக் குழம்புக்குப் பயன்படுத்தினால் குழம்பு சுவையாக இருக்கும்.
- கிழங்கு வேகவைத்த நீரைத் துணிகளுக்குக் கஞ்சி நீராகப் பயன்படுத்தலாம்.
- உருளைக் கிழங்கு வேகவைத்த நீரை வெள்ளிப் பாத்திரங்களைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தலாம்.
- பாகற்காய் வேகவைத்த நீர், பித்தம், தலைச்சுற்றல் போன்ற நோய்களைக் குணமாக்கும். இந்நீரைக் குடித்து வந்தால், நீரிழிவு நோயை வருமுன் காப்பது போல் ஆகும்.
- தயிரை இரண்டு மூன்று நாட்கள் கெடாமல் வைத்திருக்க, தயிரினுள் தேங்காயைப் பல் பல்லாகச் சீவிப் போடுங்கள். தயிர் புளிக்கவும் செய்யாது. நாற்றமும் அடிக்காது.

—நாகுன்னிஸா


ராசி பலன் ஆகஸ்ட்'81

மேஷம்



நீங்கள் இட்டமிட்ட வெற்றியை இம் மாதத்தின் இறுதிக்குள் காணுவீர்கள். அதனால் ஏற்படுகின்ற பலனால் வாழ்க்கை முழுவதும் நிம்மதியாக இருக்க முடியும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். உங்களுடைய அந்தரங்க நட்பினால் ஏற்படுகின்ற உதவிகள் உங்களுடைய பிரச்னைகளுக்கு நல்ல வடிகாலாக அமையும். பொருளாதார நிலை நல்ல முன்னேற்றத்துடன் காணப்படும்.

ரிஷபம்



இந்த மாதம் மிக நல்ல மாதமாக இருக்கும். கடினமான உழைப்பையும், கொஞ்சம் கூடத் தளர்வில்லாத நம்பிக்கையையும் மேற்கொள்வீர்களானால் காரியங்கள் நிறைவேறுவதற்கு அவ்வப்போது தடங்கல்கள் ஏற்பட்டாலும் எடுத்துக்கொண்ட காரியம் விக்னமின்றி முடியும். வரவுக்கேற்ற செலவு இருக்கும். கணவருடைய அன்பும், தூண்டுதலும் உங்களை உற்சாகப்படுத்தி வெற்றியடையச் செய்யும்.

மிதுனம்




உங்கள் முன்னால் நிற்கும் வேலையில் — உங்களுக்குப் போட்டி அதிகம் இல்லையென்றால் நீங்கள் நினைத்ததை விட —அதிகமாக வெற்றியடைவீர்கள். சில பிரச்னைகள் இரண்டாவது வாரத்தில் எழுமானால் கவலைப்படாமல் அமைதியாக இருந்துவிடுங்கள். தானாகவே மலை போல வந்த பகு பனிபோல நீங்கிவிடும். குடும்பச் சூழ்நிலையில் மனம் விட்டுப் பழகினால் பாசம் அதிகரிக்கும்.

கடகம்



உங்கள் நண்பர்களிடையே நீங்கள் பார்க்கின்ற கோணத்தை மனம் திறந்து பேசுங்கள். ஏனெனில் வியாபாரமோ அல்லது தொழில் துறையோ முடிவெடுக்கும் நிலையில் உள்ள நீங்கள் இனியும் வாயை மூடிக்கொண்டு இருந்தால் வந்த வாய்ப்புக்கள் விலகிவிடும். நல்ல வெற்றி வாய்ப்புக்கள் வரவேண்டியுள்ளது. சுபாவத்தில் சிறிது ஒதுங்குபவரான நீங்கள் அதிகம் பேசவேண்டிய காலம் இது.

சிம்மம்




இந்த மாதம் செலவினங்கள் அதிகமாக இருந்தாலும் அதிகமான கடனில் மூழ்கா தீர்கள். தேவையான செலவுகளை மட்டுமே செய்ய வேண்டிய நிலை உங்களுக்கு. விரைவில் பண வரவு இருப்பதால் வீண் விரயம் செய்யாதீர்கள். உங்கள் முடிவுகள் அதிக நஷ்டத்தை ஏற்படுத்தலாம். எனவே ஒவ்வொன்றையும் மிக ஜாக்கிரதையாக யோசித்துச் செய்யுங்கள்.

கன்னி



உங்களுடைய ஓய்வு நேரத்தை இட்டமிடுவதற்கும், எதிர்கால முயற்சிகளுக்கும் செலவழியுங்கள். அதிக வேலைகள் விரைவிலேயே வரவிருப்பதால் மனம் தளராமல் உற்சாகமாக இருங்கள். வெளியூர்ப் பயணம் ஏற்படக் கூடும். பொருளாதார நிலை மந்த

மாகவே இருக்கும். குழந்தைகளின் உடல் நிலையைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.



துலாம்

உங்கள் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள விரிசல்களையும், மனக் கசப்புக்களையும் சரிசெய்ய நல்ல தருணம் இது. தீர்க்கமான முடிவெடுக்கும் திறமுள்ள நீங்கள் எடுக்கும் முயற்சி நல்ல முடிவைத் தரும். நண்பர்கள் தரும் வாக்குறுதிகளை நம்பாதீர்கள். உங்களுடைய சொந்த முயற்சியால் செய்யும் காரியங்கள் மட்டுமே வெற்றியடையும்.



விருச்சிகம்

தனியாக எந்தச் செயலிலும் ஈடுபடாதீர்கள். கூட்டு முயற்சியுடன் தொடங்கும் செயலில் வெற்றி காணலாம். உங்களைவிட சிறியவர்களிடம் சர்ச்சைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய பிரச்னைகளைப் புரிந்து கொள்ளாவிடில் உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் வெற்றி பெறுவது கடினம்.




தனுசு

மிகவும் கவலை தரக் கூடிய பிரச்னை ஒன்று இம்மாதத்தின் இறுதியில் உங்களுக்கு எழக் கூடும். பெரியவர்களின் ஆலோசனைகளின்படி நடந்து கொள்ளுங்கள். வாக்கு வாதங்களைத் தவிர்க்க வேண்டிய நேரமிது. மிகுந்த யோசனைகளுடன் நடந்து கொண்டீர்களானால் பிரச்னைகளைத் தவிர்க்கலாம்.



கும்பம்

மனதில் சஞ்சலமில்லாமல் சந்தோஷமாக, குதூகலத்துடன் உங்கள் நண்பர்களுடன் ஒய்வைக் கழியுங்கள். இந்த மாதம் பொழுது போக்கிற்குச் சிறந்த மாதமாக அமையும். தொழிற்சாலைப் பிரச்னைகள், வியாபாரக் கவலைகள் ஆகியவை அதிகம் ஏற்படாது. குழந்தைகளினால் மகிழ்ச்சிகள் உண்டாகும். புனித யாத்திரைகளையும் மேற்கொள்ளலாம். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.



மீனம்

அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் சோதனை மிகுந்த காலம் இது. மேலதிகாரிகளின் கேள்விகளும், குடும்பத்தவர்களின் புரிந்து கொள்ளாத தன்மையும் மனதைச் சங்கடப்படுத்தலாம். தெய்வ நம்பிக்கையும், விடாமுயற்சியும் உங்கள் கவலைகளை ஓரளவு குறைக்கும். பேச்சை மிகவும் குறைத்துக் கொள்ளுங்கள். செயலில் ஈடுபடுங்கள்.



மகரம்

விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு நல்ல எதிர்காலம் கிடைத்துள்ளது. புகழ் அவர்களை நாடி ஓடிவரும் காலம் வெகு அருகாமையில் உள்ளது. தொழில் துறையில் உள்ளவர்களுக்கு அரசாங்க ஆதரவு ஏற்படும். நீண்ட காலமாக நீங்கள் எதிர்பார்த்து வந்த வெற்றிகள் இம்மாதத்தில் காணுவீர்கள். பொருளாதார நிலை திருப்தியாக அமையும்.

சென்ற இரண்டு மாதங்களாகக் காகிதம், ஸாடீன், ஆர்கண்டி ஆகியவற்றால் செய்கின்ற பூக்களைப் பார்த்தோம். இவை கொஞ்ச நாட்கள் ஆனவுடன் கிழிந்து விடுகின்றன அல்லது சாயம் போய் விடுகின்றன. இவற்றை நீண்ட காலம் பாதுகாக்க மெழுகு தோய்த்து விட்டால் நல்லது. அதை எப்படிச் செய்வது?

மற்ற காகிதப் பூக்கள், துணிப் பூக்களைப் போலத்தான் முதலில் செய்து கொள்ள வேண்டும். சென்ற முறைப் படிக்காதவர்களுக்காகவும், படித்தவர்களுக்கு வேறு ஒரு மாடலிலும் இதை விளக்குகிறோம்.

தேவையானபொருட்கள் :

கிரேப் பேப்பர் — மஞ்சள் (அ) ப்ரௌன், பச்சை, ஆகிய வர்ணங்களில்
எம்ப்ராய்டரி நூல்.
23 கேஜ், 30 கேஜ் ஆகிய கம்பிகள்,
மெழுகு.

முதலில் உள்ள படங்கள் மகரந்தம் செய்வதற்கான வரை படங்கள். எம்ப்ராய்டரி நூலை ஊசியில் கோத்துக் கொண்டு படத்திலுள்ளது போல வளையம் அமைத்துக் கொள்ளுங்கள். ஊசியின் உதவியால் எட்டு தடவை சுற்றி, 1—Cல் உள்ளது போல இழுத்து இறுக்கிக் கொள்ளுங்கள். இனி, நடுவில் உள்ள முடிச்சின் இருபுறமும் ஒரே அளவாக வெட்டிக் கொள்ளுங்கள். இவ்வாறு எட்டு துண்டுகளைத் தயாரித்துக் கொண்டு முடிச்சை நடுவில் இருக்குமாறு இரண்டாக மடித்து 24 கேஜ் கம்பியினால் கட்டி விடுங்கள். இனி மேல்புறம் படத்தில் காட்டியுள்ளது போல சீராக வெட்டி விடுங்கள். இவ்வாறு தயாரித்த மகரந்தத்தை மெழுகில் தோய்க்க வேண்டும்.

மெழுகை எப்படித் தயாரிப்பது?

சாதாரணமாக வீட்டில் இருக்கும் மெழுகு வர்த்தியைக் கரைய வைக்கலாம். இல்லையெனில் கடைகளில் பாரபின் மெழுகு என்று கேட்டு வாங்கலாம். நூறு கிராம் போதுமான அளவாகும்.

சற்று அழுத்தமான, அடியில் தட்டையான எண்ணெய்ப் பசையில்லாத பாத்திரத்தில் மெழுகைப் போட்டு உருக வையுங்கள். இது 310°Fலிருந்து 325°F வரை சூடேற்ற வேண்டும். தெர்மா மீட்டர் எல்லோரிடமும் இருக்காது. ஓர் எளிய வழி இருக்கிறது.

ஒரு துண்டு கிரேப் பேப்பரைக் காய்ந்த மெழுகில் போடுங்கள். லேசான சப்தத்துடன் முட்டை முட்டையாக வருமானால் சரியான பதம். ஓரங்கள் சுருண்டு, சுருள் சுருளாகப் புகை வருமானால் அதிகமாகச் சூடேறி விட்டது என்று அர்த்தம். எந்தச் சப்தமும் வரவில்லையென்றால் காய்ந்தது போதாது என்று பொருள்.


இனி, மகரந்தத்தை இந்த உருகிய மெழுகில் முக்கி எடுங்கள். எடுத்தவுடன் இரண்டொரு முறை உதறி விடுங்கள். அதிகபட்சமாக இருக்கும் மெழுகு விழுந்து விடும்.

படம் 5-லிருந்து 12 வரை உள்ளவை பூவின் இதழ்களைத் தயாரிக்கும் முறையாகும். 5,6 படத்திலுள்ளதை அப்படியே டிரேஸ் செய்து அழகாகக் கத்திரித்துக்கொள்ளுங்கள்.


இனி 8-ல் உள்ளதைப் போல வளைவாக மடித்து ஒட்டிக் கொள்ளுங்கள். (படம் 10) நடுவில் முன்பு தயாரித்த மகரந்தத்தைக் கம்பியின் உதவியால் செருகி, பூவின் அடியில் டேப்பைச் சுற்றிக் கட்டி விடுங்கள். பின்னர் இதழ்களின் மேல்புறம் நன்றாக வளைத்து விடுங்கள்.


இனி, அதே அளவில் மெழுகில் முக்கி எடுங்கள். லேசாக உதறி விட்டீர்களானால் அதிகமான மெழுகு உதிர்ந்து விடும்.


மெழுகில் முக்கிய பிறகு பூவை வளைக்கவோ, விரிக்கவோ செய்யாதீர்கள். இதனால் காய்ந்த மெழுகு உதிர்ந்து பார்க்க நன்றாக இருக்காது.















மெழுகு பூக்கள்


ரத்னா நரசிம்மையா















"சாகப்போறேன்னு... நா... கொஞ்சங்கூட வருத்தப்படலே. என் உயிரையே வெச்சிருக்கிற உங்களை விட்டு... ஆ... ஷ்ஷ"... அம்மா.... பிரியத்தான் கஷ்டமாயிருக்கு. அத்தான், என் தலையை...உங்க மடியிலே. ம்ம்ம்... அத்தான், என் உடல், பொருள், ஆவி அத்தனையிலும் நீங்கதான் நெறைஞ்சிருக்கிங்க. பூவோட... மஞ்சளோட...க்கும் ....உங்களை நெனைச்சிக்கிட்டே... ட்டே... நெனைச்ச்ச்....'' தலை மெல்லச் சாய்கிறது.

கணவனைப்பிரியும் வேதனையும், அவன்மேல் கொண்ட ஆழமான அன்பும், அவனைப் பற்றிய நிறைவும் சேர்ந்து ஒரு ஆழமான கலவையாய்க் காட்சி யளிக்கிறது அவள் முக பாவம்.

''கட்... கட்...'' காட்சி ஒரே டேக்கில் ஓ. கே.! இப்படிக் கூட ஒருத்தியால் நடிக்க முடியுமா? அதுவும் முதல் படத்திலேயே...? செட்டில் உள்ள அத்தனை பேர் மனத்திலும் இந்த வியப்பு ஏற்படுகிறது. டைரக்டர் காசி பிரமித்துப் போய் உட்கார்ந்திருக்கிறார். கண்களிலிருந்து சரசரவென்று கண்ணீர் வழிகிறது.





என் அபிமான நாயகி

மதிகுமாரஸ்வாமி

சற்று முன் சாவது போல் நடித்து எல்லோரையும் கலங்க வைத்தவள், மேக்கப்போடு ஓடி வருகிறாள். காசியின் காலடியில் குனிகிறாள்.

''அய்யா, ஆசீர்வாதம் பண்ணுங்க...''

''நல்லாயிரம்மா, நல்லா இரு.. பூஜா, உன் நடிப்பு, உன் கலை... சாதாரணமானதில்லே. அந்தக் கலைத்தாயே உன்கிட்ட பூர்ணமாக் குடியேறிட்டா. போம்மா போய், மேக்கப்பைக் கலைச்சிட்டு வீட்டுக்குப் போ'' காசி நினைறு கிறார். பூஜா மறுபடியும் காசியை வணங்கிவிட்டுச் செல் கிறாள்.

'சே, என்னமாய் நடிக்கிறாள் இவள்! பக்கம் பக்கமாய் எழுத வேண்டியதை ஒரு கண்ணசைவில், மைத் தூக்க லில், இதழோரச் சிரிப்பில், சின்னச் சிணுங்கலில்... அடடா! பிறவி நடிகை. ஆயிரமாயிரம் பாவங்களை அநாயாசமாக அள்ளிக் கொட்டுகிறாளே! இவள் அங்க மெல்லாம் நடிக்கிறதே! இவளது மௌனம் கூட 'ஓர் உயர்ந்த நாடகம்' காசியின் வியப்புக்களுக்கு எல்லையில்லா மல் போகிறது. சிந்தனை வயப்பட்டவராய் வெகுநேரம் அங்கேயே அசையாமல் உட்கார்ந்திருக்கிறார்.

பூஜாவின் முதல் படமே வெற்றிப் படமாக அமைகிறது. தான் கண்டுபிடித்த வைரம். மேலும் மேலும் புதுப் புதுப் பட்டைகளைத் தீட்டிக்கொண்டு கொடி கட்டிப் பறப் பது காசிக்குப் பெருமையாக இருக்கிறது.

புது பங்களா. புதுப் பொலிவுடன் கைகூப்பிப் பத்திரி கையாளர்களை வரவேற்கிறாள்; உபசரிக்கிறாள்.

''உங்கள் இயற் பெயரே பூஜாவா?''

''இல்லே. இது சினிமாவுக்காக, டைரக்டர் திரு காசி... காசியன் வைத்த பெயர். எனக்குப் பெற்றோர் வைத்த பெயர் பத்மினி. ஏற்கனவே இரண்டு மூன்று பேர் அந்தப் பெயரில் இருப்பதால் என்னை பூஜாவாக்கி விட்டார்!'' மென்மையாக, பூரிப்போடு சிரிக்கிறாள்.

''இந்தப் பெயர் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?''

''ஓ!... பாருங்க, இந்தப் பெயரில் ஒரு விசேஷம் இருக்கு.''

''அப்படியா? அதை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?''

''சொல்றேன். என் அப்பா பெயர் பூவராகன். அம்மா பெயர் ஜானகி. ரெண்டுபேரோட முதல் எழுத்தையும் சேர்த்துத்தான் எனக்கு

'பூஜா'ன்னு பெயர் வெச்சார்'' சற்று சத்த மாக, சந்தோஷமாக பூஜா சிரிக்கிறாள். சற்று நேரம் அந்தச் சிரிப்பு எல்லோரையும் தொற்றிக் கொள்கிறது. பிறகு கேள்விகள் தொடர்கின்றன.

''மிஸ் பூஜா, பட்டதாரியான நீங்கள் சினிமாவில் எப்படி நுழைந்தீர்கள்?''

''கல்லூரி ஆண்டு விழாவுக்கு வந்திருந்த டைரக்டர் சார் கண்ணில், விழா நாடகத்தில் நடித்த நான் பட்டுவிட்டேன். நடிக்கிறாயா என்றார். எனக்குவேறு வேலை எளிதாய்க் கிடைக்கும் என்று தோன்றவில்லை. ஒப்புக் கொண்டேன்.''

''உங்கள் வருங்காலம், இத்தனை குறுகிய காலத்துக்குள் பெருமளவில் விஸ்தரிக்கப்பட்டு விட்டதே! இதற்குத் தனியான காரணம் ஏதாவது....?''

''எனக்கு எண்பத்து ஒன்பது வரை கால் ஷீட் ஃபுல். இந்த மாபெரும் வளர்ச்சிக்குக் காரணம், கர்த்தா எல்லாமே டைரக்டர் திரு காசிதான். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அவருக்கு என் நன்றிக்கடனை அடைக்க முடியாது.'' பூஜா சற்றே உணர்ச்சி வசப்படுகிறார்.

''உங்கள் லட்சியம்... இந்தத் துறையிலே, வாழ்க்கையிலே...''

''அஞ்சு வயசிலே அப்பாவை இழந்து விட்ட என்னை, அம்மா ரொம்பக் கஷ்டப்பட்டு வளர்த்தாங்க. அம்மாவைச் சந்தோஷமா வெச்சுக்கணும். மற்றபடி எங்கள் குடும்பம் ரொம்பச் சின்னது. நாங்க ரெண்டே பேர். இதனாலே குடும்பத்திலே பெரிய லட்சியங்கள் கிடையாது. சினிமாவைப் பார்க்கையிலே, நடிப்பிலே முழுக் கவனம் செலுத்தி ஒரு அன் பிரேக்கபிள் ரெக்கார்டை ஏற்படுத்தணும்னு எல்லோரையும் போல நானும் நினைக்கிறேன்...''

''கடைசியாக ஒரு கேள்வி. உங்கள் வாழ்க்கையில் உங்களால் மறக்க முடியாதவர்...''

''திரு காசிபன்தான்.''

பேட்டி முடிகிறது. ஹால் காலியான பின்பும் பூஜா ஹாலிலேயே உட்கார்ந்திருக்கிறாள். காசியின் நினைவுகளில் மயங்குகிறாள்.

'என்ன ஒரு மனிதர்! என்ன ஒரு அறிவு! எத்தனை திறமை! எவ்வளவு நுணுக்கங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்! இவர் கால் தூசிக்குச் சமானமானவள் நான். என்னிடம் போய் இத்தனை அன்பு வைத்திருக்கிறாரே... நான் மிகவும் கொடுத்து வைத்தவள்தான்....'— பூஜா நினைத்து நினைத்து நெகிழ்ந்துபோகிறாள்.

காசிபன் வீடு. அவர் மனைவி புவனாவுடன் பூஜா பேசிக் கொண்டிருக்கிறாள்.

''அக்கா! காஷ்மீர்லேர்ந்து உங்களுக்கு என்ன வேணும்?''

''எனக்கொண்ணும் வேண்டாம். நீ நல்ல படியாப் போய் நடிச்சுட்டு வா. அது போதும் எனக்கு...''

''திரும்பி வந்ததும் பத்து நாள்ல மறுபடியும் கன்யாகுமரியில ஷூட்டிங். பூரா பூரா படத்தைக் குமரியிலேயே எடுக்கப் போறாங்க. மீனவர் குடும்பக் கதை.''

''ஆமா, இவங்ககூடச் சொன்னாங்க.... இதே யூனிட்டுத்தான் போலிருக்கே... படம் பேரென்ன?''

''இப்போதைக்கு 'கடல் முத்து' அப்புறம் மாறலாம்.''

இருவரும் மனம் விட்டுச் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருப்பது இரண்டு பெரிய மலர்கள் முழுமையாக மலர்ந்து, காற்றில் லேசாக ஆடிக் கொண்டிருப்பது போல் இருக்கிறது.

''அப்பப்பா, ஒரு செகண்ட் கிடைச்சாப் போதும். பொம்பளைங்க பேச ஆரம்பிச்சுடுவாங்க.'' காசிபன் பிரயாணத்துக்குத் தயாராக அறைக்குள் நுழைகிறார். பூஜா கலகலவெனச் சிரித்தபடி ஹால் பக்கம் நாசுக்காய் நகர்கிறாள். காசிபன் புவனாவை நெருங்கி அணைத்துக் கொள்கிறார்.

''புவனா, அருணைப் பார்த்துக்க. அவசரம்னா லேட்டனிங் கால் போட்டுடு. ஷெட்யூல்படி எல்லாம் முடிச்சுட்டா இன்னிக்கு இருபத்திரண்டாம் நாள்... அதாவது அநேகமா லெவன்த், நா வந்துருவேன். சரி, அப்ப நான் கிளம்பட்டுமா?''


''பத்திரமாப் போயிட்டு வாங்க. ஜாக்கிரதை. எப்பவும் போல டெய்லி வீட்டுக்கு கால் போட்டுப் பேசிடணும்.''

''ரைட், டாடா...'' மனைவிக்கும், தூங்கும் குழந்தைக்கும் முத்தமிட்டு, அன்பைத் தெரிவித்துக் கொண்ட காசிபன், அவசரமாய் வெளியில் வருகிறார். இரண்டு நிமிடங்களில் கம்பெனி வான் மெல்ல ஆடிக்கொண்டு நிறைசூலியாய்ப் புறப்படுகிறது. கண் மறையும்வரை கையை ஆட்டிக் கொண்டிருக்கிறாள் பூஜா.

'பூஜா!... என்ன அபூர்வமான பெண்! இந்தக் கொஞ்ச நாட்களில் எப்படி ஒட்டிக்

♦ மழைக் காலத்தில் தீக்குச்சி ஈரமாயிருந்தால் உரசியவுடன் எரியாது. இத்தகைய பெட்டிக்குள் ஐந்தாறு அரிசிகள் போட்டு வையுங்கள். தீக்குச்சி உரசியவுடன் பற்றிக் கொள்ளும்.

நாகுன்னிஸா



கொண்டு விட்டாள்! கள்ளம், கபடு, சூது, வாது கொஞ்சமாவது இருக்கணுமே! தங்கமான பெண்! அக்கா, அக்கான்னு வாய் நிறைய அழைத்துக் கொண்டு... அவளோடு நானும் ஒட்டிக் கொண்டு விட்டேனே....'— புவனா சிந்தனையில் ஆழ்ந்து போகிறாள்.

காஷ்மீர் படப்பிடிப்பிலிருந்து திரும்பிய சூட்டிலேயே கன்யாகுமரிக்குப் புறப்பட ஆயத்தம் நடக்கிறது. மாதக் கணக்கிலே கணவனைப் பிரிந்திருப்பது புவனாவுக்குப் பழகிப் போய்விட்டிருந்தது. வந்து பத்து நாட்களிலேயே கணவன் மறுபடியும் போவது அவளுக்குப் புதிதாகத் தோன்றவில்லை. ஆனால் வேறொன்று புதிதாகத் தெரிந்தது.

ஏதோ மாற்றம் — இனம் சொல்ல முடியாத மிகச் சிறிய, தெளிவில்லாத, புகை போன்ற சிறு குழப்பம், தயக்கம் —

'என்ன இதெல்லாம், என்னவாயிற்று இவருக்கு? உறவின் நெருக்கத்திலே கூட ஒரு சின்ன நெருடல் இருப்பது மாதிரி.... இதெல்லாம் என் கற்பனையா? இருபத்து மூன்று நாள் பிரிவில் நானே இப்படியெல்லாம் நினைத்துக் கொள்கிறேனா? இவர் வழக்கம் போலத்தானே ஆசை ஆசையாய்ப் பேசுகிறார், அணைத்துக் கொள்கிறார்... ஆனாலும் ஏதோ ஒன்றை ஒரு மாற்றத்தை இவரிடம் உணர்கிறேனே, என்னவா யிருக்கும்?....' காசிபன் காஷ்மீரிலிருந்து கொண்டு வந்து குவித்திருந்த எந்தப் பொருள் மேலும் நாட்டமின்றி, புவனா குழம்பித் தவிக்கிறாள்.

குழப்பத்துக்கு நடுவே கணவன் காஷ்மீருக்குப் புறப்பட்ட தினத்தை நினைத்துக் கொள்கிறாள். நினைவினூடே பூஜா வருகிறாள். 'இந்தப் பூஜாவுக்கு என்னவாச்சு, வந்து பத்து நாட்களாகியும் ஒரு முறை கூட வீட்டுக்கு வரலியே, ஏன் ஒரு போன்கூட இல்லே, இவள் இப்படி இருந்தது கிடையாதே... இவர்களுக்கெல்லாம் என்னவாச்சு? மனித சமூகமே மாறிக் கொண்டிருக்கிறதா..' யோசித்துக் கொண்டிருந்த புவனாவுக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. மனம் சில்லிட்டுப் போய், அடிவயிற்றில் சங்கடம் நெளிகிறது.

'ஒருவேளை அப்படி இருக்குமோ? அந்த கிசுகிசுக்கள்...!' ஹாலின் மேல் தளம் அப்படியே அவள் மேல் இறங்கியது போல அவளுக்குத் திணறுகிறது. சட்டென்று சுதாரித்துக் கொள்கிறாள். உடல் வியர்வையில் தெப்பமாக நனைந்திருக்கிறது.

'சே, எவ்வளவு சீக்கிரம் இவ்வளவு அசிங்கமா நெனைச்சுட்டேன். அவரா... பூஜாவா.. நெவர். மனத்தைத் தாற்காலிகமாகத் தேற்றிக் கொள்கிறாள். மன உளைச்சலை மறக்க வீட்டு வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு பம்பரமாய்ச் சுழல்கிறாள்.

இந்த மனம் இருக்கிறதே. 'இது ஒரு வேதாளம். ஏதாவது ஒன்றை நினைத்துவிட்டால் போதும். பூமி சூரியனைச் சுற்றுவது போல அதையே சுற்றிச் சுற்றி வரும்.



கறிவேப்பிலை இல்லாமல் மணமாக ரசம் வைக்கலாம், எப்படி? ரசத்தைத் தாளிக்கும்போது, பொடியாக நறுக்கிய வெங்காயத்தைக் கடுகு வெடித்ததும் சேர்த்து நன்றாகச் சிவக்கவிட்டு, ரசத்தில் கொட்டுங்கள். மாறுதலான ருசியாகவும் இருக்கும்.

நூருன்னிஸா

ஒன்றை' உள்ளும் புறமுமாகத் தெளிவுபடுத்திக் கொள்ளாதவரை எத்தனை சமாதானம் சொன்னாலும் கேட்டுக் கொள்ளாமல், முருங்கை மரத்தில் ஓடிப்போய் ஏறிக் கொள்ளும்.

'அப்படி இருக்குமோ' என்ற எண்ணத்தில் மனதிலே விழுந்த மாத்திரத்தில், புவனாவின் மனம் இரண்டாகப் பிரிந்து கொள்கிறது. ஒரு பாதி உத்தரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு சினிமா பாணியில் அவளைக் கேள்விகளால் துளைத்தெடுக்கிறது. புவனா பொறுத்துக்கொள்கிறாள்.

'ஆம்.... இது வெறும் சந்தேகம்தான். நாமே எதையாவது கிளப்பி விட்டுக் கொண்டு, நமக்குப் பின்னால் நாமே நமக்குக் குழி பறித்துக் கொள்ளக் கூடாது. இதுவே ஊர்ஜிதமானாலும் சிந்தித்து செயல்படணும். இது வாழ்க்கைப் பிரச்னை' புவனாவின் ஆறும் அறிவு விழித்துக் கொள்கிறது. அவள் தன்னை மெது மெதுவாக நார்மல் கண்டிஷனுக்குக் கொண்டு வருகிறாள்.

காசிபன் குமரிக்குப் பயணப்படும் நாள். வழக்கத்துக்கு மாறாக அவர் அடிக்கடி புவனாவைத் தேடிப் போகிறார். ஸில்லியாக எதையாவது கேட்டுவிட்டுத் திரும்புகிறார். மறுபடியும் போகிறார், அர்த்தமின்றிப் பேசுகிறார். கணவன் எதையோ சொல்லத் தவிப்பது புவனாவுக்குப் புரிகிறது. காட்டிக் கொள்ளாமல் இருக்கிறாள். புரிந்துகொள்ள முற்பட்டு பூதம் ஏதாவது புறப்பட்டு விட்டால்...!

ஒரு வழியாக காசி புறப்பட்டு விட்டார். மனைவியிடம் வந்து, ''நா வரட்டுமா புவனா?'' சின்னத் தயக்கம்.

''போயிட்டு நல்லபடியா வாங்க. ஜாக்கிரதை....''

''ம்... சரி, அருணைப் பார்த்துக்க. வரட்டுமா.... இந்தா'' மனைவியிடம் அவசரமாக ஒரு கவரைத் திணித்து விட்டு, தயாராக நிற்கும் வேனுக்குள் தாவுகிறார். புவனா நடுக்கத்துடன் கவரைப் பிரித்தாள்.

'அன்புள்ள புவனா,

எனக்கு நீ ஒரு கண். கலை மறு கண். அந்தக் கலைக் கண்ணாகிவிட பூஜா நினைக்கிறாள். நானும்தான். உன் அனுமதி யின்றி எதுவும் நடக்காது. யோசித்துப் பதில் போடு.'

இரண்டு நாள் படப் பிடிப்பு வழக்கம் போல நடக்கிறது. பூஜாவும், காசியும் மனப் போராட்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் வலைய வருகிறார்கள். மூன்றாம் நாள் காசியன் பெயருக்குக் கடிதம் வருகிறது. புவனாதான். பிரிக்கப் பயப்படுகிறார். லொகேஷன் பார்க்கும் சாக்கில் கேம்பிலிருந்து நழுவுகிறார். பூஜா வழக்கம் போல் பின் தொடர்கிறாள். இருவருமாகக் கடிதத்தைப் படிக்கிறார்கள்.

'அன்புள்ள அத்தான்,

நலம். நலமறிய அவா. உங்கள் தவிப்பு எனக்குப் புரிகிறது. நேரடியாக விஷயத்துக்கு வருகிறேன். பூஜாவும் நீங்களும் ஒன்றுபட என் அனுமதியை எதிர்பார்க்கிறீர்கள் என்பதே எனக்கு நீங்கள் தந்திருக்கும் உயர்ந்த இடத்தைக் காட்டுகிறது. நன்றி.

பூஜா நல்ல பெண். அவளுடன் உங்களைப் பகிர்ந்து கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. இதிலே வேறு விதமாகத் தலையிட்டு உங்கள் பெயரை மாசுபடுத்த விரும்பவில்லை.

என் மனத்தில் உள்ள வேறு ஒன்றையும் உங்களிடம் கேட்க ஆசைப்படுகிறேன். பூஜா ஒரு அசாதாரண நடிகை. நீங்கள் சினிமாத் துறையில் ஒரு மைல்கல். இருவரும் ஒருவரை ஒருவர் அட்மயர் பண்ணுவது இயற்கை. கலைஞர்கள் பொதுவாக எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய மென்மையான இதயம் கொண்டவர்கள். உயர்ந்த கலைக்கும், உண்மையான ரசிகத் தன்மைக்கும் எளிதில் அடிமைப்பட்டுப் போவார்கள். இந்த நிலையைத்தான் நீங்கள் காதலாக நினைத்துக்கொண்டுள்ளீர்களா? பூஜாவை விட நல்ல நடிகை, உங்களைவிட சிறந்த டைரக்டர் ஃபீல்டில் வர நேர்ந்தால் உங்கள் கலை உன் எங்கள் இடம் மாறாது என்பதும் உறுதிதானா? குடும்ப பந்தத்தில் சிக்கிவிட்டால் பூஜா இன்னொரு புவனாகிவிடுவாளே யன்றி கலையை வளர்க்க முடியாது. உங்கள் வீட்டுக்கு ஒரு புவனா போதாதா? நீங்கள் இன்னொரு திருமணம் செய்துகொள்ளும் அளவுக்கு என்னிடம் எந்தக் குறையும் இல்லையே. நமக்குள் பிளவும் இல்லையே.

அபூர்வமானதாக, உயர்ந்ததாக உள்ள எல்லாவற்றையும் நாமே அடைய வேண்டும் என்று உலகில் உள்ள ஒவ்வொருவரும் நினைக்க ஆரம்பித்தால்... விளைவை உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன். அத்தான், பூஜாவுக்கும் உங்களுக்கும் இடையே உள்ள ஆழமான அன்பை, பாசத்தை நான் அறிவேன். அது ஆராதனைக்குரியது. இனக் கவர்ச்சிக்கு அப்பாற்பட்டது. அது சந்தர்ப்ப வசத்தால் வேறு கலர் பூசிக்கொள்ள நினைக்கின்றதோ எனச் சந்தேகப்படுகிறேன்.

எப்படியிருந்தாலும் சரி. உங்களின் எந்த முடிவும் எனக்குச் சம்மதமானதே. ஏனென்றால், உங்களை வருத்தப்படச் செய்வது என்பது என்னால் செய்ய முடியாத ஒன்று. பிகாஸ், ஐ....ஐ... லவ் யு... ஸோ மட்ச். ஐ ஜஸ்ட் கெனாட் கோ அகென்ஸ்ட் யு டியர்.'

இருவர் கண்களிலும் நீர் மழையாகக் கொட்டுகிறது. பேசத் திராணியின்றி பூஜாவும் காசியனும் மணிக் கணக்கில் மறுகிப் போய் உட்கார்ந்திருக்கின்றனர். கண்ணீர் மழையில் அவர்களது உறவில் தாற்காலிகமாகப் பூசப்பட்ட புது நிறம் கரைந்தோடுகிறது. காசியன் பூஜாவைப் பார்க்கிறார். 'பூஜா உன்னை நான் பறிக்க மாட்டேன். நீ என் சிஷ்யை. குழந்தை. உன்னை மேலும் மேலும் பிரகாசிக்கச் செய்வதுதான் உன் மேல் நான் கொண்டிருக்கும் தூய்மையான அன்புக்கு அடையாளம். அதற்கு நீ என் மனைவியாகத்தான் வேண்டுமென்பதில்லை.'—

பூஜா காசியனை மெல்ல நிமிர்ந்து பார்க்கிறாள். 'அய்யா, நீங்கள் என்னைப் படைத்தவர். தந்தை. என் குரு. உங்கள் மேல் நான் கொண்டிருக்கும் நன்றி கலந்த அன்பைக் காட்ட உங்கள் மனைவியாகத்தான் வேண்டுமென்பதில்லை. ஒரு உன்னத மாணவ மணியானால் போதுமானது—'

ஆம், தான் காதலிப்பது காசியன் என்ற குடும்பத் தலைவனை அல்ல. அவர் கலையைத்தான் என்று பூஜா உணர்ந்து கொள்கிறாள்.


ஆம், ஆம். தான் அடிமைப்பட்டுப்போனது பூஜா என்ற அழகிய இளம் பெண்ணிடமல்ல. அவள் ஒப்புயர்வற்ற ஆற்றலிடம்தான் என்பதைக் காசியன் உணருகிறார்.

இருவரும் தலைசிறந்த கலைஞர்களாயிற்றே. உள் மன எண்ணத்தை அறிந்து கொள்ள முடிகிறது. ஒரே சமயத்தில் இருவர் முகத்திலும் புன்னகை தோன்றிப் பெரிதாய் மலர்கிறது. அது தூய்மையானது; சாகா வரம் பெற்றது.

வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வறுத்து எடுத்து அதனுடன் பனங்கற்கண்டைச் சேர்த்துக் காலை மாலை இருவேளையிலும் ஐந்து கிராம் சாப்பிட்டு வந்தால், உடலில் தேவையற்ற சதை குறையும்.

நூருன்னிஸா





வேலைக்குச் செல்லும் பெண்ணே

• நித்யா மூர்த்தி •

அன்புள்ள வனிதா!

நீ அடிக்கடி கேள்விப்படும் பாடல் வரிகள் உனக்கு நினைவுக்கு வரும் இல்லையா? ''கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்''.

இலங்கை வேந்தன் கலங்கினானோ இல்லையோ, நாம் கட்டாயம் கலங்கித்தான் போவோம். அதற்கும் மேல் ஒரு படி தவித்து உருகிப் போவோம் கவலையினால். அதனால் நீ இது விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். அதிலும் மாதம் பிறந்தால் சம்பளம் வருமே என்ற மிதப்பில் முன்கூட்டியே கடனில் சிக்கிக்கொண்டு விட்டால்...? ஆபத்து என்பதை மறவாதே.

பெண்களுக்குக் கடன் வாங்கத் தூண்டும் சாதனங்கள், சேலை, நகை, பாத்திரங்கள், ஆகியவைதாம்.

எதிர் வீட்டு அம்மாள் கட்டியிருக்கிற அமெரிக்கன் ஜார்ஜெட் நன்றாக இருக்கிறதே என்று உனக்குத் தோன்றும்.

பக்கத்து வீட்டில் வாங்கிக் குவிக்கும் எவர்சில்வர் பாத்திரங்களைப் பார்த்து ஏக்கம் உண்டாகும்.

''அவங்க வீட்டு ஷெல்ஃபைப் பார்த்தேன். பளபளவென்று பாத்திரக் கடையாட்டம் எப்படி அடுக்கி வெச்சிருக்காங்க?'' என்று நீ பொருமக் கூடாது.

''ஹூம், எங்க ஆபீஸ் தோழி லீலாவதி ஒரு நாளைக்குக் கட்டின சேலையை திருப்பிக் கட்டறதே இல்லை'' என்று புழுங்காதே.

நான்கு சோப்புக் கட்டிகள் வாங்கினால் ஒரு ஸ்பூன் இனாம் அல்லது பக்கெட்டுக்குப் பாதி விலைதான் என்று சோப்புத் தூள் வியாபாரத்தில் இறங்குவதும் யோசிக்க வேண்டிய விஷயம்.

எனக்குத் தெரிந்த தோழி ஒருத்திக்கு மலிவு விற்பனை, இனாம் விற்பனைகளில் பெரும் பைத்தியம். இப்போது வீடு கொள்ளாமல் பிளாஸ்டிக் சாமான்களை வைத்துக்கொண்டு திணறிக் கொண்டிருக்கிறாள். தூக்கத்தில் கூட, பிளாஸ்டிக் மயமாகப் பார்த்துவிட்டு அலறி அடித்துக் கொண்டு எழுந்து விடுவதாகக் கேள்வி.

எதற்காகக் கூறினேன் என்றால் கடன் வாங்குவதும் இது போலத்தான். ''லீலா தவணை முறையில் நாலு நைலக்ஸ் வாங்கி விட்டாளே, மாதா மாதம் அடைத்து விட்டாளே'' என்று நீ ஆரம்பிக்காதே.

''பிளாஸ்டிக் சாமான் இனாமாகக் கிடைக்கிறதே. வாங்கிப் போட்டால் உபயோகப்படுமே. பணம் கைவசம் இல்லாவிட்டால் கடை சாமான் லிஸ்டில் கடனாக எழுதி விட்டால் போகிறது'' என்று எண்ணாதே.

இப்போது சிறு தொகையில் டீ. வி. இத்யாதிகளை வாங்கிப் போட்டுவிட்டு மாதம் பிறந்ததும் பணத்தைக் கொடுத்துவிட்டால் போகிறது என்ற தைரியத்தில் நீ செயல் படலாம்.

கொஞ்சம் கொஞ்சமாகத்தானே கடனை அடைக்கப் போகிறோம் என்றுதான் நீ நினைப்பாய். ஆனால் மாதம் பிறந்ததும், பட்ஜெட்டில் துண்டு விழும்போது அது எத்தனை சிரமம் என்பது அப்படிப் பாடுபட்டவர்களுக்குத்தான் புரியும்.

''சதா ஒரே பட்டுச் சேலையைக் கட்டிக்கிட்டு எல்லார் வீட்டுக் கல்யாணங்களுக்கும் போக முடியுமா?'' என்ற பொய்யான கௌரவத்துக்காக கடனையோ உடனேயோ கொடுத்து வாங்க நினைக்காமல் இருப்பது சிறந்தது.

அப்படி உன்னை எவராவது ''என்ன? உங்கிட்ட இந்த ஒரே சேலைதானா இருக்குது?'' என்று பரிகசித்தால் அழகாகப் பதில் கூறி விடு.

''என்ன செய்யறதுங்க? எங்கிட்ட இந்த ஒரே முகம்தானே இருக்குது? அதை மாத்தி மாத்தி வேற புதுசா செய்துக்க முடியலையே?''

கடன் வாங்குவது வெகு எளிது. அதனால் தான் ''கடனிலே வாங்கினால், நெய்யிலேயே கடு'' என்பார்கள். கடன் என்று வாங்க ஆரம்பித்து விட்டால், ஆரம்ப நாட்களில் அது திருப்ப முடிய வேண்டுமே என்ற கவலை. பிறகு முடியாமல் போனால் வெட்கம். அப்படி முயன்றும் முடியாமல் போய்விட்டால், வெட்கம் கெட்டுப் போகும் நிலையாகி விடும். இதைவிடக் கேவலம் வேறு என்ன வேண்டும்?

நமக்குத் தேவை என்ன? நமது நிலைக்குத் தகுந்தபடி வாழவும், பிறர் மதிக்கும்படி வாழவும் வழி என்னவென்று புரிந்துகொள். பிறர் மெச்ச வேண்டும் என்பதற்காக ஆடம்பரமாக வாழ்வது தேவையாகாது. சுத்தமாக, சுகாதாரமாக வாழக் கற்றுக்கொள்.

தேவைக்கு மீறி, ஆசைக்காக கடன் வாங்கிவிட்டு, இதர தேவைகள் ஏற்படும் போது விழிக்காதே.

உதாரணமாக, ஒரு சேலையைக் கடனில் வாங்கிவிடுகிறாய். அல்லது ஒரு டி. வி. செட்டுக்கு ஆர்டர் கொடுக்கிறாய், தவணை முறையில். திடுமென வீட்டில் யாருக்காவது காய்ச்சல் நோவு என்று வைத்தியச் செலவு வருகிறது, என்ன செய்வாய்?


ஒருசில, மிகத் தேவையான பொருள்—அதாவது வேலைக்குப் போவதால் பொருள் சேதமாகாமல் வீட்டில் பாதுகாக்கப்பட வேண்டிய சாதனம் — பிரிட்ஜ். அதுவும் உன் தகுதிக்கும் வசதிக்கும், தவணை முறையில் கூட வாங்குவதை நன்கு திட்டமிட்டு வாங்கலாம்.

இதுபோல் பிரச்னைக்குரிய ஒருசில விஷயங்களை நன்கு யோசித்து வாங்குவது நல்லது. அல்லது தவணை முறைகளைத் தவிர்த்து மாதம் இத்தனை என்று சேமித்து வைத்து வாங்குவது மிகச் சிறந்தது.

''ஆமாம், சொல்லிவிடுகிறீர்கள்! எங்கே இருந்து மாதா மாதம் சேமிப்பது? வலுக் கட்டாயமாகச் சீட்டுச் சேர்ந்து வாங்கினால்தானே உண்டு'' என்று முணு முணுப்பது காதில் விழுகிறது.

ஓய்வு கிடைக்கும்போது நன்றாக உட்கார்ந்து தவணை முறைக் கடனுக்கு வட்டி எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார். பிறகு நான் கூறியபடி முயன்று பார். சிறு துளி பெரு வெள்ளம் ஆகலாம் அல்லவா?

உனக்குப் பாத்திரக் கடை வேண்டாம். சேலைக் கடையும் வேண்டாம். அன்றாடம் வசதியாக வாழ ஒரு வழியும் வகையும் வேண்டும். அக்கம் பக்கத்தவர், ''கடன் வாங்கி கல்யாணம் செய்கிறவங்க'' என்று உன்னை இகழாமல் பார்த்துக் கொள்.



யோசனை

கண்டல் தயாரிக்கும்போது, எவ்வளவு நேரம் வேகவைத்தாலும் சில கடலைகள், பயறுகள் வாகு சரியாக வேகாமல் கல்லித்துப் போயிருக்கும். நேரமும் அதிகம் ஆகும். நேரத்தையும் எரிபொருள் செலவையும் மிச்சப்படுத்த பயறுகளை ஊறவைக்கும்போது கால் டீஸ்பூன் சமையல் சோடாவை தண்ணீரோடு சேர்த்து ஊற வையுங்கள். ஆனால் ஞாபகமாக வேகவைக்கும் முன்னர் பழைய தண்ணீரை வடித்துவிட்டு, வேறு நல்ல தண்ணீர் சேர்த்துக் கழுவிவிட்டு வேகவைத்தால் நல்ல பலன் கிடைக்கும். சாதாரணமாக இருபது நிமிடங்கள் வேகவைக்கும் கடலையை இம்முறையில் பதின்மூன்று நிமிடங்களில் வேக வைக்கலாம். —பாத்திமுத்து சித்திக்

படங்களில் பார்ப்பது போன்ற ஒட்டிய கன்னமும், சோகம் நிறைந்த முகமுமாக நேரில் பார்க்கும்போது இல்லையே?

துள்ளும் நடை, கம்பீரம் நிறைந்த பார்வை உற்சாகம் ததும்பும் பேச்சு!

இவர் ஒரு வித்தியாசமான பெண்மணி— பத்திரிகைகள் மூலம், பார்த்தவர்கள் மூலம் கேள்விப்பட்டதெல்லாம் பொய் என்று நம் மனத்திற்கே தெரியும்படியான நடையுடை பாவனைகள். அவர் தான்—

சௌகார் ஜானகி!

'சௌகாரா? அடேங்கப்பா, படு கர்வம் நிறைந்தவராயிற்றே? எல்லோரையும் அடிக்க வருபவர் போலப் பேசுவாரே. முன்கோபம் ஜாஸ்தி ஆயிற்றே?'—

எதுவுமே இல்லை. எல்லாமே வெளித் தோற்றத்துக்குத்தான். உள்ளே அந்தப் பெண் மணியின் மனத்தில் நீறுபூத்த கனலாக உண்மை உறங்கிக் கொண்டிருக்கிறது.

''நான் 1931ல் பிறந்தேன். என் குடும்பம் மிகவும் ஆசார அனுஷ்டானங்கள் நிறைந்த குடும்பம். சினிமா பார்ப்பதே பெரும் பாவம் என்று நினைப்பவர்கள். மிகவும் நல்ல பக்திப் படங்கள் வந்தால் அவர்கள் பார்த்துவிட்டு வந்து, எங்களை அழைத்துப் போவார்கள். ஏதோ ஒரு படம், பெயர் நினைவில்லை—

நாங்களெலாம் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம். அதிலே வரதட்சிணைக் கொடுமை தாங்காமல் ஒரு பெண் கிணற்றில் விழுந்து இறந்துவிடுகிறாள். அவளை வெளியில் எடுத்துப் போட்டு, பூவிட்டு, குங்குமமிட்டு, சுமங்கலியாகச் சுடுகாட்டுக்கு அனுப்புகிறார்கள்.

சௌகார் விஜயம்!





இதையெல்லாம் நாங்கள் பார்க்கக் கூடாதென்று சொல்லி விட்டார்கள். இதற்கெல்லாம் இன்னும் வயதிருக்கிறது. இப்பொழுதே தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று என் அம்மா மறுத்து விட்டாள்.

அப்பொழுது எனக்குத் தெரியாது, அந்தப் படத்தில் இறந்த பெண்ணின் நிலைக்கு நான் தள்ளப்படுவேன் என்று. அவளுக்கு வரதட்சிணைக் கொடுமை. எனக்கு வேறு கொடுமை.''

திருமணம்—

இது ஒரு பெண்ணின் வாழ்வில் எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது! சுய சிந்தனையும், சுய கௌரவமும், தன்னம்பிக்கையும் கொண்ட பெண்ணின் அந்தக் குணங்களை யெல்லாம் அழிப்பதுதான் வேலை.

எத்தனை எத்தனை பெண்கள்!

கணவனுக்காக,

கணவனின் தாயாருக்காக,

அவனுடைய குடும்பத்தாருக்காக,

தன்னுடைய சுயமதிப்பை, கௌரவத்தை, தன்னம்பிக்கையை இழந்துவிட்டு வாயுள்ள ஊமைகளாக, அடிமைகளாக மாறிவிடுகின்றனர்.

சௌகார் ஜானகியின் வாழ்வையும் திசை திருப்பியது திருமணம்தான்.

கவலையற்ற பறவையாக கன்னியாக இருந்த போது சுற்றித் திரிந்தார். தந்தை லண்டன் வாசியாக இருந்ததால், மேல்நாட்டு எண்ணங்கள் இவரிடமும் அதிகமாக இருந்தது. சுதந்திரப் போக்கு இருந்தது. வீட்டிலேயே 'ஹிண்டு' படித்து ஆங்கில அறிவை பெருக்கிக் கொண்டார்.

ரேடியோ நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தாராம். அப்போதுதான் ஒரு நாள் இவருடைய குரலைக் கேட்டுவிட்டு, பி. என். ரெட்டி (நாகி ரெட்டியின் அண்ணன்) ரேடியோ நிலையத்திலேயே இவரைச் சந்தித்திருக்கிறார்.

''நான் இப்போது ஒரு படம் எடுக்கிறேன். அதிலே செகண்ட் ஹீரோயினாக நடிக்க ஒரு பெண் தேவை. வருகிறாயா?'' என்று கேட்டிருக்கிறார்.

அந்தச் சின்னப் பெண்ணுக்கு ஒரே சந்தோஷம். தன்னையும் மதித்துக் கூப்பிடுகிறார்களே என்று. வீட்டுக்கு ஓடிப்போய்க் கேட்டிருக்கிறாள். அவர்களிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டாள்.





''சினிமாவாம் சினிமா! நம்ப குடும்பக் கௌரவம் என்ன, அந்தஸ்து என்ன? கூத்தாடிப் பிழைப்புக்கா போறேன் என்கிறாய்?''

பெண்ணுக்கு இப்படி யெல்லாம் கவனம் போய்விடக் கூடாது என்பதற்காகவோ என்னவோ மாப்பிள்ளை தேட ஆரம்பித்தார்கள். நல்ல குடும்பம், நல்ல குலம் என்று மாப்பிள்ளையைப் பிடித்துத் திருமணமும் செய்து விட்டார்கள்.

ஆனால் உண்மை வேறு—விதமாக இருந்தது.


கணவருக்கு வேலை இல்லை. சம்பாத்தியம் கிடையாது. கணவன் சம்பாதித்து ஒரு நூறு ரூபாய் கொண்டு வந்து கொடுத்தால்கூட, அதிலேயே கஞ்சியாவது குடித்து மானமாக வாழலாம். எதுவுமே இல்லையென்றால்...

பிறந்த வீட்டுக்கு எத்தனை நாளைக்குப் போவது? திருமணமாகி, ஒரு பெண்ணுக்குப் பிறந்த வீட்டில் என்ன இடம்?

கல்யாணமாவதற்கு முன் அவள் அரசியாகவே வாழ்ந்திருக்கட்டுமே! ஆனால் திருமணம்னு ஆன பிறகு அவளை அம்மா வீட்டில் இரண்டாம் பட்சமாகத்தான் நினைப்பார்கள். முன்போல முன்னுரிமை அவளுக்குக் கிடைக்காது.

அதுவும் என்னைப் போல வசதியில்லாதவளாக இருந்தால்...? எனக்கே தாழ்வு மனப்பான்மை. ஒருவேளை நான் பாரமாக மற்ற





வர்களுக்கு மாறிவிட்டேனே என்று. வருத்தம் என் நெஞ்சை அறுக்க ஆரம்பித்தது.

எவ்வளவு நாள் இந்தக் கஷ்டங்கள்? என் அப்பா சொல்லியிருக்கிறார், எந்தக் காரணம் கொண்டும் கடன் வாங்காதே என்று. மூன்று குழந்தைகளை வச்சிக்கிட்டு நான் என்ன பண்ணுவேன்? ஒவ்வொரு நகையா ஒவ்வொரு பாத்திரமா வித்தேன்.

இதே மெட்ராசிலே சமையல் செஞ்சிருக்கேன். எனக்கு வேறு என்ன தெரியும்? படிப்பு கிடையாது. சாப்பாட்டுக்கு வேறு வழி? ஆனால் எத்தனை நாளைக்கு இப்படிச் சின்ன வேலைகளைச் செய்ய முடியும்?

ஒரு நாள் சாப்பிடாமல் இருக்கலாம்; இரண்டு நாள் சாப்பிடாமல் இருக்கலாம். நான் கணக்காகச் சாப்பாட்டுக்கே வழியில்லேன்னு வரும்போது... என் மூணு குழந்தைங்களுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்? கடைசி பொண்ணு மூணு மாசக் கைக் குழந்தை அப்போது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் பிறந்த வீட்டுக்குப் போறதில்லேன்னு முடிவெடுத்தேன். யோசிச்சேன். என்னை முன்னாடி ரேடியோ ஸ்டேஷன்லே பார்த்து சினிமாவில் நடிக்கக் கூப்பிட்ட பி. என். ரெட்டியைப் போய்ப் பார்த்தேன்.

நான் முன்னாடி இருந்த இருப்பு என்ன? இப்போ எல்லாமும் போய், மூணு குழந்தைங்களைப் பெத்த உடம்போடு வாடி நின்ன எனக்கு என்ன ரோல் கொடுக்க முடியும்?

அவரும் அதைத்தான் சொன்னார்.

''அம்மா, இவ்வளவு ஒல்லியாய் இருக்கே. உனக்கு எப்படி சினிமா உலகம் பொருந்தும்? அதுவும் இல்லாம நான் அப்போது எடுத்துக்கிட்டிருந்த படத்தை முடிச்சுட்டேன். இப்போ ஒண்ணும் எடுக்கலியே.'' என்றார்.

''சார், எனக்கு வேற வழியே கிடையாது. என்னுடைய மீதி வாழ்க்கைக்கு மிஞ்சி நிற்கிற ஒரே வழி இதுதான். இதை விட்டா எனக்கு வாழ்வே கிடையாது'' என்று சொன்னேன்.


அவர் கொஞ்ச நேரம் யோசிச்சுட்டுத் தன்னோட தம்பிக்குப் போன் பண்ணினார். அப்போ நாகி ரெட்டி ஏதோ ஒரு படத்தை ஆரம்பித்திருந்தாராம். அவர் வரச் சொன்னவுடன் நான் போய் நின்றேன்.

ஏதாவது சின்ன ரோலாவது கிடைச்சு என் குழந்தைகளுக்குக் கஞ்சியாவது ஊத்த

மாட்டேனுன்னு நினைச்ச எனக்கு 'சௌகார்' படத்தின் கதாநாயகி வேஷம் கிடைச்சுது.

அந்தப் படமும் வெற்றிகரமாக ஓடியது.

என். கஷ்டம் கொஞ்சம் தீர்ந்தது உண்மை. ஆனா நான் நினைச்சா மாதிரி உடனே பெரிய ஸ்டார் ஆக முடியவில்லே. எல்லோரும், 'இந்தப் பொண்ணுக்குப் போய் என்ன ரோல் கொடுக்க முடியும்? சினிமா கதாநாயகிங்க மாதிரி அழகா, உடலமைப்பா என்ன இருக்கு இது கிட்ட' என்று பேச ஆரம்பிச்சாங்க.



எனக்கு ரொம்ப வருத்தமாயிடுச்சு. 'சௌகார்' படத்தோட டைரக்டர் எல்.வி. பிரசாத் கிட்ட போய் சொன்னேன்.


''யார் என்ன சொல்றுங்கங்கிறதைப் பத்திக் கவலைப்படாதே. உனக்கு நல்ல நடிப்பிருக்கு. உனக்குத் தேவை நம்பிக்கைதான். வாழ்க்கையிலே வேற வழியே இல்லேன்னு இங்க வந்தப்புறம் எங்கே போய் நிக்கப் போறே?'' என்று கேட்டார்.

நான் எங்கே போய் நிற்க முடியும்?

வறுமையோட கொடுமை தாங்க முடியாம இரண்டு தடவை இணைத்துக்கிட்டப் போய் நின்றிருக்கேன்.

சாகிறதுங்கறது என்வரைக்கும் பிரச்னைகளுக்கு முடிவாயிடலாம். என்னையே நம்பிக்கிட்டிருக்கிற என் குழந்தைதங்க







அனாதைகள் ஆயிடுவாங்களே. தெருத் தெருவா அலேவாங்களே!

''ஜானகியோட பசங்க பாத்தியா, எப்படி பஞ்சப் பரதேசிங்களாத் திரியுதுங்க...''

அப்படின்னு இல்ல சொல்லுவாங்க. சே, எவ்வளவு சுயநலமானவள் நான்? நான் பெத்த குழந்தைங்களைப் பத்தி நினைக்காத ராட்சசி!


சாகறது சுலபம். வாழறதுதான் கஷ்டம். வாழத் துணிந்து விட்டேன். அன்னியிலே யிருந்து இன்னி வரைக்கும் நான் நம்பிக் கையை இழக்கவே இல்லே.

''எனக்குன்னு கடவுள் கொடுத்திருக்கிறார் மூணு அழகான, அன்பான குழந்தைங்களை. கணவன், குடும்பம்னு சந்தோஷங்களைஎனக்கு கொடுக்கலேதான். அதுக்காக?

எனக்குக் கிடைக்காததை மத்தவங்க ளாவது அனுபவிக்கணும். எனக்குக் கிடைக் கலேங்கறதுக்காக உலகத்துக்கே அது கிடை க்கக்கூடாதுன்னு கங்கணம் கட்டிக்கிறதா என்ன?

பலவாறு யோசிச்சேன். நான் என்றைக் கும் வணங்கற ராகவேந்திர சுவாமிகளாலே ஆத்ம பலம் கிடைச்சுது. அப்போ நான் மனதாலே ரொம்பப் பலசாலியாயிட்டேன்.

வளையாபதியிலே நடிக்க அழைப்பு வந்தது. அப்புறம், படித்தால் மட்டும் போதுமா. கொஞ்சம் கொஞ்சமா பிரபல நடிகை யானேன். குணச்சித்திர வேடங்கள்னுவே



செளகார். ஜானகிதான்னு முத்திரை குத்திட்டாங்க.

பட், அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி. என் குடும்பத்தைக் கொஞ்சமும் கட்டுக் குலையாமப் பார்த்துக்கறேன். எனக்குன்னு அநாவசியமா வேலைக்காரியோ, டாம்பீகமோ இல்லை. ஆபீஸ் போற பெண் மாதிரி நான் நடிக்கப் போய்விட்டு வந்தேன்.

காலையிலே எழுந்து சமைச்சு வச்சுட்டு குழந்தைங்களுக்கு வேண்டியதெல்லாம் செஞ்சுட்டு அவர்களை ஸ்கூலுக்கு அனுப்பிச்சுட்டு நானும் ஸ்டுடியோவுக்குப் போவேன்.

ஆயிற்று. 1949ல் இந்த பீல்டுலே நுழைந்த நான் முப்பத்திரண்டு வருஷமா நடிக்கிறேன். 'கலைச் சேவை செய்யறதுக்கு வந்தேன், இப்போ வயசானப்புறம் மத்தவங்களுக்கு வழிகாட்டியா இருக்க விரும்பறேன்.' அப்படின்னெல்லாம் சொல்லிக்க நான் நடிக்கலை.

இதுவரைக்கும் சம்பாரிச்சதை யெல்லாம், என் குழந்தைங்களோட வாழ்க்கையை 'செட்டில்' பண்றதுக்காக செலவழிச்சுட்டேன். இனி என் வாழ்க்கை ஜீவனத்துக்காக நான் நடிக்கிறேன். வெளி நாட்டிலே இருக்கற என் பிள்ளை,

''இவ்வளவு நாள் கஷ்டப்பட்டது போதாதாம்மா, இன்னுமா இங்க அவதிப்படணும்'' என்று கேட்கிறான். ஆனா நான் யாரிடமும் வேண்டி வாழ விரும்பவில்லை. என்னால முடியற வரைக்கும் யாருடைய அனுதாபத்தையும், தயவையும் எதிரபார்த்து வாழக் கூடாதுங்கறதுதான் என்னோட கொள்கை.

தன்னிரக்கம்கிறது ஒருத்தருக்கு வரவே கூடாது. இந்த வீட்டில நான் மட்டும் தன்னந் தனியா வாழறேன். அதனால என்ன? என்னுடைய மதிப்பும், சுய கௌரவமும் கொஞ்சமும் சிதைவில்லாம வாழறேன். அப்படியே வாழ்ந்து முடிச்சுடணும்.''

குடும்பம் — இந்த வார்த்தை அழகான ஒரு பதம். வெளி உலகில் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும், எவ்வளவு சாதனைகள் செய்தவர்களாக இருந்தாலும் எவ்வளவு புகழ் மாலைகளை அணிந்திருந்தாலும், 'குடும்பம்' அவரவர்க்கு ஒரு பாதுகாப்பையும் நிம்மதி உணர்வையும் தருகிறது.

'வீடு செங்கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்படலாம். ஆனால் குடும்பம் பாசத்தாலும் அன்பாலும்தான் கட்டப்படுகிறது.'

இது சௌகாருடைய வீட்டு வரவேற்பறையை அலங்கரிக்கும் வாசகம்.

அந்தப் பெண்மணிக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனால் அவர் மனம் சோரவில்லை. குழந்தைகள் மூலம் அதைப் பெற்றார். குழந்தைகளின் வாழ்வைக் கண்டு நிறைவுற்றார். இவ்வளவு துன்பங்களிடையேயும் கொஞ்சம் கூட மனத் தளர்வில்லாமல், உற்சாகமாகத் தன் கடமையைச் செய்து கொண்டிருக்கும் அந்தப் பெண்மணியைப் பார்க்கும்போது உண்மையிலேயே இவர் ஒரு வித்யாசமான பெண்மணிதான்.

வாழ்க்கையில் துன்பப்படும் பெண்களெல்லாம் ஒரு நிமிடம் யோசிக்க வேண்டிய நட்சத்திரப் பெண்மணி!

புரந்தர தாசர்

ஸ்ரீவேணுகோபாலன்

''ஐயா, என் பையனுக்குப் பூணூல் போட வேண்டும். தயவுசெய்து ஏதாவது உதவி செய்யுங்கள்'' என்று குரல் கேட்டது.

நகைக் கடை வாசலில் அந்த வயோதிக அந்தணர் நின்று கொண்டிருந்தார். பரம ஏழை. கந்தல் வேட்டி. கூடு கட்டிய மார்பு. முகத்தில் ஒரு மாத வளர்ச்சி. கையும் காலும் வெறும் சுர்க்குச்சிகள்! பார்ப்பதற்கு அருவருப்பாக இருந்தது.

நகைக் கடை முதலாளி திண்டு மெத்தையில் சாய்ந்திருந்தான். கையிலும் காதிலும் வைரங்கள். கழுத்தில் தங்கச் சங்கிலி. தேகம் முழுதும் பொன் மினுமினுப்பு.

''போய்யா, போ! வெள்ளிக் கிழமையும் அதுவுமா? போய் நாளைக்கு வாய்யா!'' என்றான் முதலாளி.

முதலாளியின் பெயர் ஸ்ரீனிவாசன். கஞ்சன் என்றால் மகா கஞ்சன். அவருடைய கருமித்தனம் பிரசித்தி பெற்றது. சிறு வயதிலிருந்தே வளர்ந்தது அது. காசைக் கண்டால் ஆசை. பொன்னைக் கண்டால் மோகம். ஒரு செப்புக் காசு வீணடிக்க மாட்டார்.

மறுநாள் அதே நேரம். வாசலில் அதே வயோதிகர் வந்து நின்றார்.

''ஏன் பெரியவரே! சனிக் கிழமை அன்னிக்கு யாராவது தர்மம் பண்ணுவாங்களா? போம், போம்! நாளைக்கு வாரும்!''

மறுநாள்.

அதே நேரம். வயோதிகர் திரும்பி வந்தார்.

''இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை சுவாமி! சூரிய பகவானுக்கு ஆகாது! நாளைக்கு வாரும்'' என்றார் ஸ்ரீனிவாசன்.

அடுத்த நாள்.

அதே நேரம்.

வயோதிகர் தென்பட, அன்றைக்கு ஒரு காரணத்தைக் காட்டி மறு நாள் வரச் சொன்னார்.

மறுநாள் வர, அதற்கும் காரணம் கற்பித்து அதற்கு மறு நாள் வரச் சொல்ல...

இப்படி மறுநாள் மறுநாள் என்று ஆறு மாதம் ஓடிவிட்டது.



வயோதிகரும் விடாது வந்து கொண்டிருந்தார். அவரது பொறுமை ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.

நகைக் கடை ஸ்ரீனிவாசனின் மனம் தளரவே இல்லை. வயோதிகர் தினம் தினம் வர, ஸ்ரீனிவாசனுக்கு வீம்பு தான் கூடியது. கூசாமல் 'மறுநாள் வா!' என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

ஸ்ரீனிவாசன் புரந்தர காடு என்ற ஊரில் பிறந்தவன். 'பூனாவிலிருந்து பதினெட்டு மைலில் இருக்கிறது. இந்த ஊர். தந்தை பெயர் வரதப்ப நாயகர். தாய் பெயர் கமலாதேவி. இவர்களுக்கு வெகு நாட்கள் குழந்தை பிறக்காமல் பிரார்த்தனை செய்து திருப்பதி யாத்திரை போய் தவம் செய்து பெற்ற குழந்தைதான் ஸ்ரீனிவாசன்.

ஒரே ஒரு பிள்ளையான ஸ்ரீனிவாசனைப் பெற்றோர்கள் கண்ணும் கருத்துமாக வளர்த்தார்கள். நன்றாகப் படிக்க வைத்தார்கள். வடமொழியிலும் சங்கீதத்திலும் மிகவும்

தேர்ச்சி பெற்றான் ஸ்ரீனிவாசன். நல்ல குணமுள்ள சரஸ்வதிபாய் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

பெற்றோர்கள் காலப்போக்கில் இறந்து விட, தந்தையின் நகைத் தொழிலை ஏற்றுக் கொண்டான் ஸ்ரீனிவாசன்.

இப்போது நகைத் தொழிலில் இறங்கியவுடன், பேராசையுடன் பணம் சேர்ப்பதில் ஈடுபட்டான். எந்த வழியானாலும் தயங்குவதில்லை. வட்டிக்குப் பணம் கொடுத்தான். சதா சர்வ காலமும் பொருளையே நினைத்துக்கொண்டு வேறு எதிலும் சிந்தனையே செலுத்தவில்லை. பணம் அவருக்குப் பல கோடி சேர்ந்ததால் அவரை 'நவகோடி நாராயணன்' என்று அழைத்தார்கள்.

அவர் மனைவி சரஸ்வதி பாய் தர்ம சிந்தனை உள்ளவள். ஆனால் அவள் ஏதாவது தர்மம் செய்ய விரும்பினால் கூட அதை உடனே தடுத்து நிறுத்துவார். கோவிலுக்கு என்று அவள் ஏதாவது செலவழிக்க விரும்பினாலும் அதையும் உடனே தடுத்து நிறுத்துவார்.

ஆறு மாதம் ஸ்ரீனிவாசனிடம்தர்மம்கேட்டு நடையாக நடந்த வயோதிகர் கடைசியில் அலுத்து விட்டார்.

இவரிடம் கேட்டு இனிப் பிரயோசனம் இல்லை. இவர் மனைவியிடமாவது கேட்கலாம் என்று நினைத்து, ஒரு நாள் ஸ்ரீனிவாசனது வீட்டுக்குச் சென்றார்.

வீட்டில் ஸ்ரீனிவாசன் மனைவி சரஸ்வதியைப் பார்த்து,

''அம்மணி! நான் வயோதிகன். பரம ஏழை! எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனுக்குப் பூணூல் போட வேண்டும். அதற்கு வகையில்லாமல் இருக்கிறேன். தங்கள் குடும்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். தங்களைப் போன்ற செல்வந்தர்கள் இந்தப் பதினான்கு உலகத்திலும் கிடையாது என்றார்கள். எனவே தங்களை அணுகி



தர்மம் கேட்பது முறை என்று வந்தேன்'' என்றார்.

''ஐயா! என் கணவர் நகைக் கடை வைத்திருக்கிறார். அவரிடம் போய்க் கேட்பது அன்றோ முறை!'' என்று கூறினாள் சரஸ்வதி பாய்.

''கேட்டேன் அம்மணி! ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல! ஆறு மாதம் நடையாக நடந்தேன். இன்றைக்கு வா, நாளைக்கு வா என்று சொல்லி இத்தனை நாள் அலைக்கழித்து விட்டார். என் கால்கள் இற்றுப் போய்விட்டன. உடம்பு தள்ளாடிவிட்டது'' என்று நொந்துபோய்க் கூறினார் அவர்.

சரஸ்வதி பாய்க்கு வருத்தம் ஏற்பட்டது.

வயோதிகரைப் பார்த்து இரக்கம் ஏற்பட்டது. அவள் மனம் கருணையினால் நிரம்பியது.

சிறிது யோசித்தாள்.

பிறகு உள்ளே பொக்கிஷ அறைக்கு ஓடினாள். தங்க வாடை முகத்தில் அடித்தது.

ஒரு சிறிய பேழையை எடுத்தாள். அதில் அவளது வைர மூக்குத்தி இருந்தது.

அதை எடுத்து அவரிடம் தந்தாள். ''சுவாமி! என் கணவர் நல்லவர். ஏதோ நினைப்பில் உங்களுக்குத் தர்மம் செய்யாது இருந்து விட்டார். இந்தாருங்கள்! இந்த மூக்குத்தியை எங்கேயாவது வைத்துப் பணம் ஈட்டிக் கொள்ளுங்கள்'' என்றாள்.

கிழவர் மகிழ்ச்சியுடன் மூக்குத்தியை வாங்கிக்கொண்டார்.

சரஸ்வதியை வாழ்த்திவிட்டு நேராக ஸ்ரீனிவாசனின் நகைக் கடைக்குச் சென்றார்.

''ஐயா, இந்த வைர மூக்குத்தியை வைத்துக்கொண்டு 4000 வராகன் தாரும். என் மகனின் பூணூல் சடங்கைச் செய்து முடிப்பேன். ஒருவேளை இந்த மூக்குத்தியைப் பார்த்துப் பணம் கொடுக்க வேண்டாம் என்று உமக்குத் தோன்றினால் நீங்கள் பணம் தரவேண்டாம். மூக்குத்தியையும் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறினார்.

ஸ்ரீனிவாசன் தம் கையில் அந்த மூக்குத்தியை வாங்கி ஆச்சரியமுடன் பார்த்தார்.

அதைப் பார்த்ததும் அவருக்குச் சந்தேகம் தோன்றியது. ''இது என் மனைவியின் மூக்குத்தி அல்லவோ? இது எப்படி இவர் கையில் வந்தது? உண்மை அறிய வேண்டுமே!'' என்று நினைத்து நிமிர்ந்து பார்த்தார்.

கிழவரைக் காணவில்லை.

அவ்வளவுதான். ஸ்ரீனிவாசனுக்குச் சந்தேகம் வலுத்து விட்டது.

மூக்குத்தியை அப்படியே நகைக் கடைப் பெட்டியில் வைத்துப் பூட்டினார்.

கடையைச் சாத்திப் பூட்டி, வீட்டுக்கு அவசரமாகப் புறப்பட்டார்.

வீட்டில் மனைவியைப் பார்த்து, ''எங்கே உன் மூக்குத்தி?'' என்றார்.

மனைவிக்குப் பயம் வந்தது.

''பூஜை அறையில் வைத்திருக்கிறேன்'' என்று சொல்லிச் சமாளித்தாள்.

''அதைக் கொண்டா!'' என்றார் ஸ்ரீனிவாசன்.

சரஸ்வதி பாய் நடுங்கிக்கொண்டு பூஜை அறைக்குள் நுழைந்தாள்.

மூக்குத்தி இல்லாவிட்டால் அவள் கணவர் எப்படி மாறுவார் என்று அவளுக்குத் தெரியும்.

நிச்சயம் நையப் புடைத்து வீட்டை விட்டுத் துரத்துவார்.

அவ்வளவு நகை மோகம் அவருக்கு.

இனி உண்மையை மறைக்கவும் வழியில்லை. ஆகவே யோசித்து, உள்ளே சென்று விஷ இலைகளைக் கொணர்ந்து அவசரமாகச் சாறு எடுத்தாள். திண்மையான விஷம் உற்பத்தி

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : தேங்காய்

முடிவு தேதி : 15 - 8 - 81

சமையல் கூபன்

இத்துடன் . . . . என்ற தலைப்பில் சமையல் குறிப்புக்களை அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

யாயிற்று. அதை ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் குடிப்பதற்காக வாய்வரை தூக்கினாள்.

கிளுகிளு என்று பாத்திரத்தில் ஒரு சத்தம்.

சட்டென்று குடிப்பதை நிறுத்தி, பாத்திரத்தில் விரலை விட்டுத் துழாவினாள்.

உள்ளே ஏதோ சின்னதாக நெருட, வெளியில் எடுத்தாள்.

அது வைர மூக்குத்தி என்று தெரிந்ததும் கண்கள் அதிசயத்தில் மலர்ந்தன.

கடவுளின் செயல் இது என்று கருதி, அவருக்கு நன்றி சொல்லி வெளியே வந்தாள். ஸ்ரீனிவாசனைப் பார்த்து "இந்தாருங்கள் உங்கள் மூக்குத்தி" என்றாள்.

ஸ்ரீனிவாசனுக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை.

"மூக்குத்தி மட்டுமில்லை. எல்லா நகைகளையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்! செத்த பிறகு இவைகளைக் கொண்டுபோகவா போகிறோம், சீ!" என்று சொல்லி நகைகள் யாவற்றையும் கழற்றி அவர் முன்னால் எறிந்தாள்.

ஸ்ரீனிவாசன், "சரஸ்வதி! இது என்ன?" என்று கேட்கும்போது அவள் நடந்ததை எல்லாம் கூறி, "என் விட்டலர் என்னைக் காப்பாற்றினார். இனி அவர்தான் என் ஒரே கதி! உங்கள் நகைகளை நீங்களே வைத்துக் கொண்டு அழுங்கள்!" என்று கூறினாள்.

ஸ்ரீனிவாசன் உடனே எழுந்தார். இன்னும் நம்பிக்கையில்லை. நேராகக் கடைக்கு ஓடினார். நகைப் பெட்டியை எடுத்தார். அதைப் பரபரப்போடு திறந்து பார்க்க, உள்ளே அந்த மூக்குத்தியைக் காணவில்லை.

உடனே வீட்டுக்கு ஓடோடி வந்தார்.

"சரஸ்வதி! இது என்ன அதிசயம்? கடையில் மூக்குத்தி இல்லை" என்று கத்தினான்.

"பார்த்தீர்களா? அந்தக் கிழவர் நமது பாண்டுரங்கனேதான்!" என்று கூறினாள் சரஸ்வதி.

ஸ்ரீனிவாசனுக்கு மனம் கரைந்தது. உடம்பு துடித்தது. கண்ணீர் ஆறாய்ப் பெருக, "சுவாமி! தாங்களா என்னிடம் பிச்சைக்கு வந்தீர்கள்? தங்களை அவமதித்து விட்டேனே!" என்று மனம் உருகப் பிரார்த்தனை செய்தார்.

பிறகு கணவனும் மனைவியும் கிழவர் வந்து நின்ற இடத்திலேயே அமர்ந்து மூன்று நாள் எதுவும் சாப்பிடாமல் விட்டலரின் தியானத்திலேயே இருந்தார்கள்.

அவர்களது சிரத்தையைக் கண்டு மூன்றும் நாள் விட்டலர் அவர்கள் முன்னால் தோன்றினார். மனைவி சரஸ்வதியின் கண்களுக்கு மட்டும் தெரிந்தார்.

"சரஸ்வதி, உன் கண்களுக்கு மட்டும் தான் நாம் புலப்படுவோம். உன் கணவர் எப்போது எல்லாவற்றையும் துறந்து கடவுள் தாசர் ஆகிறாரோ அப்போதுதான் நமது தரிசனம் கிடைக்கும்" என்று அருளினார்.

ஸ்ரீனிவாசனுக்கு விட்டலரின் குரல் மட்டுமே கேட்டது. அவரைப் பார்க்க முடியவில்லையே என்று வருந்தினார். மறுநாள் தமது பொருள்களையெல்லாம் தான தருமங்களில் செலவு செய்தார். எல்லாவற்றையும் துறந்த பிறகு, தமது மனைவி, நான்கு குழந்தைகளுடன் இறைவனைத் தேடுவதில் தீவிரமாக இறங்கினார்.

ஊர் ஊராகச் செல்ல ஆரம்பித்தார்.


ஹம்பியில் சுவாமி வியாசராயர் என்பவரைச் சந்தித்தார்.

அவரது அனுக்கிரகத்தால் துறவு கோலம் பூண்டார்.

"பொருள் சேர்க்காதே! யாரிடமும் எதுவும் வாங்காதே! கடவுள் அருளில் கிடைப்பதை மட்டும் ஏற்றுக்கொள்!" என்று கூறினார் குரு.

ஸ்ரீனிவாசனுக்கு துளசி, சதங்கை, சிப்ளாக் கட்டை, தம்புரா நாலும் நல்கி,

'புரந்தரதாசர்' என்ற துறவுப் பெயரையும் அருள் கூர்ந்து வழங்கினார்.



ரயிலிலோ பஸ்ஸிலோ நீண்ட தூரம் பயணம் செய்யும்போது சிறிய எஸ் வடிவ இரும்பு வளையத்தைக் கூட எடுத்துச் சென்றால் அதை ஜன்னல் கம்பியில் மாட்டி அதன் மறு முனையில் பிளாஸ்க், வாட்டர் பேக் போன்ற கவிழக்கூடிய பொருள்களை அதில் மாட்டிவிடலாம். கால் வைப்பதற்கும் சவுகரியமாய் இருக்கும். —வி. கலா தேவி

புரந்தரதாஸர் தமது இனிய குரலால் கடவுளைப் பாடி எங்கும் யாத்திரை செய்தார்.

ஆயிரக் கணக்கில் அவர் இயற்றிய கீர்த்தனைகள் மக்களால் பெரிதும் போற்றப்பட்டன. (அவரது கீர்த்தனைகள் பிற்காலத்தில் தியாகராஜரைப் பெரிதும் கவர்ந்தது. அவரையும் அவ்விதமே பாடவைத்தது.)

அவர் பாடல்கள் நாட்டையே உன்மத்தம் கொள்ளச் செய்தன.

இன்றும் அந்தப் பாடல்கள் நம்மிடையே வழங்கி வருகின்றன. கச்சேரிகளில் அவைகளைப் பாடாதவர்கள் இருக்க முடியாது.

புரந்தரதாசர் கடைசியில் விஜய விட்டலர் சந்நிதியில் மெய்மறந்து பாடும்போது, இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

அவர் வாழ்ந்தது பதினைந்தாம் நூற்றாண்டு

குரோஷா பின்னல் வேலை

நிர்மலா தேசிகன்



தேவையான பொருட்கள் :

6 பந்து காஸ்மிலன் கம்பளி நூல் (Cashmilon wool)

4 பந்து கருப்பு நிறம்
2 பந்து மஞ்சள் நிறத்தில் வாங்கவும்
குரோஷா ஊசி எண்-நம்-10

அளவு

இது 5லிருந்து 10 வயது குழந்தைகளுக்குப் போடலாம். நீளம் 40 செ.மீ. முன்புறத்திலிருந்து பின் பக்கம் வரை.

சுருக்கம்:

சங் - சங்கிலி (Chain)
மு. நூ - முந்நூல் (Touble)
இ. மு - இரட்டை முந்நூல் (Double chochet)
ந. தை - நழுவு தையல் (slip stitch)
ம. செ - மறுபடியும் செய்யவும் (repeat)
க - கண்ணி (Space)

செய்யும் விதம்:

கழுத்திலிருந்து கருப்பு நூலினால் 10ம் நம்பர் ஊசியினால் பின்னவும்.

முதல் வரிசை:

130 சங் பின்னிக்கொண்டு நழுவு தையலினால் சேர்த்து ஒரு பெரியவளைவு பின்னவும்.

2வது வரிசை:

2 சங் விட்டு, விட்டு 3, 4வது சங் 1 முன்னூல் செய்க. 5, 6வது கண் விட்டுவிடவும். முழு வளையம் இதே மாதிரி பின்னவும். இரண்டுமுனைகளையும் ந.தை சேர்க்கவும்.

3வது வரிசை:

ந. தை சேர்த்த நூலை அடுத்த கண்ணிக்குக் கொண்டுவந்து, மறுபடியும், கண்ணியில் 2 மு. நூ. பின்னவும். இந்த வரிசையில் பின்பக்கம் நடுவில் இருக்கும் கண்ணியில் 2 மு. நூ. 2 சங் பின்னி மறுபடி 2 மு. நூ. பின்னவும். 7 வரிசைகள் இதே மாதிரி கருப்பு நூலினால் பின்னவும். இதே மாதிரி வேண்டிய அளவு நீளம் பின்னவும். கடைசியில் முடிக்கும் பொழுது 5 நூலினால் முடிக்கவும்.

கழுத்தளவு:

2 இ. கு. ஒரு கண்ணியில் பின்னவும். கழுத்து வளைவு வரும் வரை இதே மாதிரி பின்னவும்.

கழுத்து பட்டை:

2 அல்லது 3 சங் வேண்டும் நீளத்தில் பின்னவும். ஒன்று விட்டு ஒன்று வளையத்தில் நுழைத்து Bow மாதிரி கட்டவும்.

பொதுவாகவே ஹோமியோபதி சிகிச்சை என்றால் நிதானமாகத்தான் பலன் கொடுக்கும். தாமதத்தைத் தவிர்க்க முடியாது. மிகமிகப் பொறுமை வேண்டும் என்ற கருத்து இருக்கிறது. இந்தக் காரணத்தினாலேயே ஹோமியோபதி சிகிச்சைக்கு உட்பட பலர் தயங்குகிறார்கள். இது 'ஜெட்' யுகம். எங்கும் எதிலும் வேகம். மருத்துவத்தில் மட்டும் அது இல்லாமல் இருந்தால் எப்படி? உடனடியாகப் பலன் தெரியக்கூடிய மருந்துகள் ஹோமியோபதியில் இல்லையா?

புரையோடிப்போன (Chronic) வியாதிகள் விஷயத்தில் மேற்சொன்ன கருத்து சரியானதுதான். ஆனால் Acute Diseases விஷயத்தில் இந்தக் கருத்து முற்றிலும் தவறானது. இந்த இரண்டு வகை வியாதிகளுக்கு ஹோமியோபதியில் தனி அர்த்தம் உண்டு.

மனித உடலில் ஏற்படுகிற சில கோளாறுகள் மருந்து கொடுக்கா விட்டாலும் சிறிது நேரத்திலோ சில நாளிலோ சரியாகி விடக்கூடியவை. உதாரணத்துக்கு ஜலதோஷம், காய்ச்சல் போன்றவை. இவைகளுக்கு மருந்து கொடுப்பதால், கோளாறுகள் விரைவில் சரி செய்யப்படுகின்றன. மனிதனின் அவஸ்தை விடுவிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கோளாறுகளை Acute Diseases என்று ஹோமியோபதியில் சொல்கிறோம்.

வேறு சில வகைக் கோளாறுகள் தாமாக சரியாகாத ரகத்தைச் சேர்ந்தவை. சிகிச்சை அளிக்காவிட்டால், அது தொடர்ந்து உடலில் இருந்து கொண்டு தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கும். இவைகளே Chronic Diseases என்று ஹோமியோபதியில் கூறுகிறோம். உதாரணத்துக்கு டான்சில்ஸ், மூட்டு வாதம் போன்றவை. இந்த ரகக் கோளாறுகளைச் சரி செய்ய, கொஞ்சம் அதிகக் காலம் தான் மருந்து சாப்பிட வேண்டும். மருந்து உடலில் ஊறின பிறகே, நிதானமாகக் குணம் தெரிய ஆரம்பிக்கும். ஆனால் அது நிரந்தர குணமாக இருக்கும்.

Acute Diseases ஐப் பொருத்தவரை, நிதானமாகத்தான் குணம் தெரியும் என்றால் மருந்து கொடுக்க வேண்டிய அவசியமே இல்லையே? மருந்து சாப்பிட்டு சில நிமிடங்களிலேயே குணம் கண்கூடாகத் தெரியக்கூடிய மருந்துகள் ஹோமியோபதியில் ஏராளமாக இருக்கின்றன.

இன்னும் சொல்லப் போனால், இப்போது நான் சொல்லக்கூடிய மருந்துகளை ஒவ்வொரு வீட்டிலும் கைவசம் வைத்திருப்பது மிகமிக நல்லது. அவசரத்துக்கு ரொம்ப உதவும்.

கடுமையான ஜலதோஷம். மூக்கிலிருந்து ஜலம், ஜலமாகக் கொட்டுகிறது. தும்மலும் அடுக்கடுக்காக வருகிறது. இப்படிப்பட்ட


ஹோமியோபதி, அவசரத்துக்கு உதவுமா?

எம்.வி.எஸ். நரசிம்மன்



நேரத்தில் கைகண்ட மருந்து Cyclamen இந்த மாதிரி அடுக்குத் தும்மல் வரும்போது இந்த மருந்தை சாப்பிட்டால், இரண்டே இரண்டு நிமிடங்களுக்குள் தும்மல் நின்று மூக்கிலிருந்து ஜலம் கொட்டுவதும் நின்று விடும். ஒரு பக்கத் தலைவலி இருந்தால், அதுவும் சரியாகி விடும்.

நல்ல சுவையான விருந்து ஒரு 'பிடி' பிடித்து விடுகிறோம். முட்ட, முட்ட சாப்பிட்டதில் வயிறு துருத்தி போல ஆகி கஷ்டப் படுகிறோம். திணறுகிறோம். இந்த மாதிரி நேரத்தில் Antim Crud என்ற மருந்தை உட்கொண்டால் சில நிமிடங்களில் வயிறு தளர்ந்து நிவாரணம் கிடைக்கும். அதோடு மட்டும் அல்ல, மேலும் இரண்டு கவளம் சாப்பிடலாம் போன்ற உணர்வுகூட ஏற்படும்.



இட்லி பூப்போல வேண்டுமா? ஊற வைக்கும் அரிசியுடன் ஒரு பிடி அவல் நனைத்து அரைக்கவும். இப்போது பார்க்கவும். பூப் போன்ற இட்லி தயார். —மீரா

செத்தவரை உயிரூட்டக் கூடிய மருந்து, என்று சொல்லப்படும் Carbo veg என்ற மருந்து ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது அவசியம். திடீர் மாரடைப்பால் ஒருவர் இறந்து விட்டார் என்றால், இருதய இயக்கம் நின்ற சில நிமிட நேரத்துக்குள் இந்தமருந்தை உட்கொள்ளச் செய்தால், இருதய துடிப்பு மீண்டும் துவங்கும் அதிசயத்தைக் காணலாம். குறைந்த பட்சம், சில மணி நேரங்களுக்காவது 'இறந்தவரை' உயிர் வாழச் செய்ய வல்லது இந்த மருந்து.

உடலில் எந்த வலியையும் உடனடியாகப் போக்கக் கூடியது Bryonia.

கீழே விழுந்து அடிபட்டுக் கொண்டு வந்து நிற்கிறது குழந்தை. அதற்கு Calendulla oinment போட்டு விட்டு, உள்ளுக்கு Arnica கொடுத்தால், குழந்தைக்குக் காயத்தின் வலி தெரியாமல் இருக்கும். காயமும் ஒரே வேளையில் ஆறிவிடும்.

சாதாரண ஜலதோஷத்துக்கு (மூக்கில் ஜலம் ஒழுகுவது இல்லாத போது) Aconite கொடுத்தால் உடனே சரியாகும். சுரத்துக்கும் இந்த மருந்து உடனடி குணம் தரும்.

கைக்குழந்தைகளைப் பொறுத்தவரை, நிறைய மருந்துகள் இப்படி உடனடி பலன் கொடுக்கக் கூடியவை இருக்கின்றன.

குழந்தை விடாமல் 'கத்து கத்து' என்று கத்தி அழுதபடியே இருக்கிறது. தோளில் தூக்கி வைத்துக் கொண்டால் தான் சமாதானமாகிறது. கீழே விட்டால் மீண்டும் கத்தத் தொடங்குகிறது என்றால் Chamomilla கொடுத்தால், குழந்தை அழுவதை உடனே நிறுத்தி விட்டு, தூங்க ஆரம்பிக்கும்.

குழந்தைக்கு பல் முளைக்கிறது. உணவு கொடுத்தவுடன், தயிர்க்கட்டி போல, கட்டி கட்டியாகக் கக்குகிறது. இந்த மாதிரி நேரத்தில் Aethusa Cynapium என்ற மருந்தைக் கொடுத்தால் உடனடியாகக் கக்குவது நின்று விடும்.

இப்படியாக, உட்கொண்ட சில நிமிடங்களில் குணம் தெரியக் கூடிய மருந்துகள் ஹோமியோபதியில் இருக்கும் போது, இதை நிதானமான 'வைத்தியம் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

கருத்தரித்துள்ள பெண்களுக்கு என்னென்ன கோளாறுகள் ஏற்படலாம், அந்த நிலைமையில் ஹோமியோபதி எப்படி அவர்களுக்கு உதவ முடியும் என்பன பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

ஜூன் 81 இதழில் கன்று ஈனாமல் பால் கொடுக்கும் பசுவைப் பற்றி வெளியிட்டிருக்கிறீர்கள். பால் சுரப்பது 'Prolactin' என்ற பிடுடரி (Pituitary) உயிர் சத்தின் காரணத்தினாலாகும். சாதாரணமாக மகப்பேறு உண்டானவுடன் இது உற்பத்தி செய்யப்படும்.

சில தருணங்கள் மண்டையோட்டினுள் உள்ள பிடுடரி கோளத்தில் ஒரு சிறிய கட்டி (tumour) உண்டாவதால் Prolactin தொடர்ந்து உற்பத்தியாகும். அப்போது மகப்பேற்றுடன் தொடர்பில்லாமலேயே பால் சுரக்கும். அந்தப் பசுவுக்கு அம்மாதிரியான நோய் இருப்பதால்தான் ஆலங்குளம் பசு கன்று ஈனாமலேயே பால் தருகிறது.

இப்படிப்பட்ட நிலை மனிதர்களிடமும் தோன்றுவதுண்டு. கன்னிப் பெண்ணுக்கே ஏன் பருவமடைவதற்கு முன்பே கூட பால் சுரப்பது உண்டு.

சில சமயம் ஆண்களுக்குக் கூட இம்மாதிரியாவதுண்டு. அவர்களது இரத்தத்தில் Prolachin அளவை சோதித்தால் பிடுடரியில் கட்டி இருப்பதை உறுதி செய்யலாம். Bromo cryptin என்ற மருந்து இதைத் தற்காலிகமாகத் தடை செய்யும்.

Bromocryptin உதவியுடன் பிடுடரியிலிருந்து இந்தக் கட்டியை மட்டும் பிரித்து எடுத்துக் குணப்படுத்தலாம்.

—டாக்டர் இரா. நாராயணன்

விம்பிள்டன் வீராங்கனை

1976ம் வருஷம் விம்பிள்டனில் இறுதி ஆட்டத்தில் ஈவன்னா கோலாகங்கை கிரைஸ் எவர்ட் தோல்வியடைய வைத்து வெற்றி வாகை சூடினாள். ஸ்கோர் 8–6. வெற்றிக்குப் பிறகு கிரைஸ் எவர்ட் தாம் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றார். ஹோட்டல் அறைக்குள் நுழைந்ததும் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது! வெற்றிக் குதூகலம் மறைந்து துக்கம் அப்பிக்கொண்டது! அவளது மனம் உடைந்து போனதற்குக் காரணம் அவளை விம்பிள்டன் நடனத்துக்கு அழைத்துச் செல்ல யாரும் இல்லை. அந்த நேரத்தில் கிரைஸ் எவர்ட்டின் உள்ளத்தில் அலைமோதிய சிந்தனைகள் இதுதான்: ''நான் ஏதோ பெரிய சாதனை செய்ததாக நினைத்தேன். ஆனால் அது பரிமளிக்கவில்லை. ஏனெனில் அந்த மகிழ்ச்சியை என்னுடன் பகிர்ந்து கொள்ள யாருமில்லை!''

அவளது வாழ்க்கையில் பாதுகாப்பான நிலை உருவாகியது. அவள் ஸ்ரீமதி லாயிட் லாகத் திருமணத்தை முடித்துக் கொண்ட போது! அவள் மணந்துகொண்ட மணவாளன் அழகில் மன்மதன். அவனை இளம் கல்லூரி மாணவிகள் பூவை மொய்க்கும் வண்டென மொய்த்தனர்! அவனது நண்பர் 'கனோ அவனது அழகை வியந்து தங்க நிற சுருள் முடிக்காகவே பொறாமைப் பட்டனர்.

எவர்ட் லாயிட்டுக்கு 26 வயது. அவள் முன்பே ஐந்து முறை அமெரிக்கப் பந்தயம், நான்கு முறை பிரெஞ்சு சாம்பியன் போட்டிகள், மூன்று முறை விம்பிள்டன் சாம்பியன் பதவி; வென்றவர். ஸ்போர்ட்ஸ் இல்லஸ் டிரேட்டட் பத்திரிகை ஸ்ரீமதி லாயிட்டுக்கு 1976ம் வருஷம் 'இந்த வருஷ விளையாட்டு வீராங்கனை' பட்டத்தை வழங்கியது.

எவர்ட் லாயிட்டுக்கு வலைக்கு முன் ஓடிப் பந்தை எடுப்பதற்குக் கொஞ்சம் பயம். கால் தடுக்கிக் கீழே விழுந்து விட்டால்? அது கேலிக்கு இடமாகி விடுமே!

அவளது தோழி அனாலியர்ட் 'பெண்கள் டென்னிஸ் கழக அதிகாரி. போர்ட்லாடர் டேலில் அவர்கள் இருவரும் ஒன்றாய்ப் படித்தவர்கள். அவள் தன் தோழியைப் பார்த்து வியந்து சொன்னது: ''ஓ! கிரைஸ் ரொம்ப



அழகாக விளையாடுகிறாய். உனது தசைகளையும் நன்கு வளர்த்துக் கொண்டிருக்கிறாய்!''

கிரைஸ் எவர்ட்டுக்குப் பல தோல்விகள் துக்கத்தை அளித்ததில்லை. ஆனால் அவள் தனது எடை ஐந்து பவுண்ட் குறைந்துள்ளதை ஒருவரும் அறியவில்லையே என்று துக்கப்பட்டாளாம்! ஒரு சமயம் தனது பதினேழாவது வயதில் யாராவது எழுத்தாளர் தன்னை 'செக்ஸி'யாக இருக்கிறாள் என்று எழுதக் கூடாதா என்றுகூட கிரைஸ் எவர்ட் எண்ணினாளாம்! அடுத்த வருஷம் அவள் வெளியிட்ட கருத்து: ''நான் குடும்பத்தின் வருவாய் சேர்க்கும் Bread winner இல்லை! டென்னிஸில் நீண்ட நாள் வாழ்க்கை ஒரு பெண்ணின் வாழ்வைக் குட்டிச்சுவராக்கும்!''

கிரைஸ் எவர்ட்டின் அன்னை கோலெட் விளையாட்டு மைதானம் தவிர மற்ற இடங்களில் உடன் இருப்பாள். கிரைஸ் எவர்ட்டின் அறையில் எந்த இடத்தில் கோப்பைகள் அலங்கரிக்க வேண்டும் என்று முடிவு செய்வதும் அவள் அன்னைதான்.

கிரைஸ்ட் எவர்ட் எப்போதும் மகிழ்வோடு காட்சியளிப்பாள். அவள் என்றும் எந்த விதமான 'ரிஸ்க்'களை ஏற்க முன்வந்ததில்லை. ''என் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகளின்போது நான் மிகுந்த ஜாக்கிரதையோடு நடந்து கொண்டு வந்திருக்கிறேன்!'' அவள் அன்னைக்கு ஏற்ற மகள்!

பதினேழு வயதில் அழகு மங்கை கிரைஸ் எவர்ட் மன்மதனுகத் திகழ்ந்த கோனர்ஸைச் சந்தித்தாள். ஒரு நல்ல கத்தோலிக்க பத்தொன்பது வயது இளைஞனின் மீது காதல் கொண்டாள். கிரைஸ் எவர்ட் ஜிம்மி கானர்ஸை 1972ம் வருஷம் விம்பிள்டனில் சந்தித்தாள். அவர்களது அன்னைகள் இருவரும் ஹோட்டலுக்குத் திரும்பியபோது, ஜிம்மி கொனர்ஸும் கிரைஸ் எவர்ட்டும் இணைபிரியாக் காதலர்களாக லண்டன் தெருக்களில் பவனி வந்தனர்.

அவர்கள் இருவருமே 1974ம் வருஷம் விம்பிள்டன் சாம்பியன் ஆனார்கள். கொஞ்ச காலம் சுடர் விட்ட அவர்களது காதல் விம்பிள்டனுக்குப் பிறகு சில மாதங்களில் கசப்பினை வளர்த்தது. அக்டோபர் மாதம் எதிர்பாராத திருப்பம் இந்தக் காதலர்களிடையே!

கொஞ்சம் கொஞ்சமாக கோனர்ஸ் அவளது மனத்திலிருந்து பிரிய ஜான் லாயிட் அவளது உள்ளத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கினர். கிரைஸ் எவர்ட் வாழ்க்கையின் இருளில் மூழ்கிய காலத்தில் ஒளிபரப்பிய பெருமை லாயிட்டைச் சேரும்.

''என் வாழ்க்கையில் டென்னிஸ் ஆட்டமே அஸ்திவாரம். அதுபாதுகாப்பளிக்கும் என்ற நம்பிக்கை. அதை இழக்க விரும்பவில்லை!'' — கிரைஸ் எவர்ட்டின் உறுதியான நம்பிக்கை.

1978ம் வருஷம் விம்பிள்டனில் ஜான் லாயிட்டும் கிரைஸ் எவர்ட்டும் அறிமுகமானார்கள்.

இரண்டரை வருஷங்களுக்கு முன்புதான் ஜான் லாயிட் உலகின் 25வது ஆட்டக்காரராகக் கருதப்பட்டார். அவர் 1978ல் தலைசிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர் என்று புகழப்பட்டவர். இவர் தான் பிரிட்டனை டேவிஸ் கோப்பை இறுதி ஆட்டத்துக்குக் கொணர்ந்த பெருமையை அடைந்தார்.

அமெரிக்கப் பந்தயத்தை கிரைஸ் எவர்ட் வென்றதில் அவரது தந்தை ஜிம்மிக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால் அந்தப் பந்தயத்தை வென்றது கிரைஸ்ட் எவர்ட்டாக அல்ல; ஸ்ரீமதி லாயிட்டாகத்தான்!

1979ம் வருஷம் ஜான் லாயிட் — கிரைஸ் எவர்ட் தேனிலவுப் பயணம்.

அதன் பிறகு வாழ்க்கையின் இனிய வேளைகள்: கிரைஸ் எவர்ட் சிரிக்கிறாள்! தன் அன்புக் கணவன் ஜானை முத்தமிடுகிறாள். கிரைஸ் எவர்ட் பல ஹாஸ்யங்களை நறுக்கென்று தெளிக்கிறாள்! ஜானைப் போலவே தன் தலையைக் கோதுகிறாள்!

கிரைஸ் எவர்ட் என்ற விளையாட்டு வீராங்கனை மைதானத்தில் நடந்து வரும் அழகு; கை நகங்களில் வண்ணப் பூச்சு; பழைய காலத்து மர ராக்கெட். உணர்ச்சிகளை அள்ளிக் கொட்டாத முகம். எப்பொழுதாவது எதிரி ஆட்டக்காரி ஒரு 'டிராப்' ஷாட் செய்தால் ஸ்ரீமதி லாயிட்டின் முகத்தில் சிறிய கடுகடுப்பு. சில நேரங்களில் சில பாய்ண்டுகளுக்குத் தம் விரல்களை உதடுகளில் பதிப்பாள். இன்றைய பெண் விளையாட்டுத் திலகங்களில் மிகுந்த நளினத்தோடு மைதானத்தை அலங்கரிக்கும் பெண்மணி ஸ்ரீமதி லாயிட்.

அவளது அன்புக்கணவன் ஜானின் தோளைச் சுற்றிக் கரங்களை வளைத்து முறுவலித்தபடியே கேள்விக் கணைகளைகளைச் சமாளிக்கும் விதமே அலாதி!

1981ம் வருஷமும் விம்பிள்டனில் வெற்றி வீராங்கனை ஸ்ரீமதி கிரைஸ் லாயிட்!

அமெரிக்க டென்னிஸ் நட்சத்திரம் கிரைஸ் லாயிட் அந்த வருஷ டென்னிஸ் வீராங்கனை என்று பத்திரிகை அளித்த பட்டத்தைப் பெற்றபோது வாங்கிய கோப்பையுடன் படத்தில் காட்சியளிக்கிறாள். இப்பொழுது விம்பிள்டன் பரிசுப் பணமும் கோப்பையும் அவளது பெருமையை இன்னும் உயர்த்தி விட்டன! பிரிட்டனின் மாட்டுப்பெண்! பிலிப் கோமகன் அவளைப் பாராட்டிக் கௌரவித்தபோது, ஏன் பிரிட்டனின் வருங்கால சார்லஸின் மனைவி டயானுஸ்பென்ஸரே கைதட்டி மகிழ்ந்தபோது ஸ்ரீமதி கிரைஸ் லாயிட் டென்னிஸ் ரசிகர்களின் உள்ளத்தில் நிரந்தரமாகக் கோயில் கொண்டு விட்டாள்!

—பி. எஸ். மணி





Regd. No. TN MS (S) 231